பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 30 சனிக்கிழமை (16.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 324

# மார்ச் மாதத்திற்குள் இந்தியாவின் 25,000 வீடுகள் பூர்த்தியாகிவிடும்

## பாதுகாப்புத் துறையில் மேலும் நெருக்கம்

புதுடில்லி,ஒக்ரோபர்16

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்திய அரசு நிர்மாணித்து வழங்க உறுதியளித்துள்ள 50ஆயிரம் வீடுகளில், 25 ஆயிரம் வீடுகள் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் பூர்த்திசெய்யப்படும்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் நெருக்கமுறச் செய்வது குறித்தும் இந்திய, இலங்கைத் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின் பின்னர் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குழுவினருக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், நேற்றுப் பகல் போசன விருந்தளித்தார். விருந்துக்கு முன்னர் இரு தலைவர்களுக்கும் இடையே பேச்சுகள் இடம்பெற்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரது அரசும் இலங்கையின் அபிவிருத்தி குறித்து முன்னெடுக்கும் நடவடிக்கைகளை

(24ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ - இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின்போது...

### உள்ளே

**யாழ்.-கொழும்பு பஸ் கட்டணம் நிர்ணயம்**
யாழ்ப்பாணம் - கொழும்பு பயணிகள் பஸ் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. பக்கம் 5

**யாழ்.சிறார்களின் ஓவியம் கனடா முத்திரைகளில்**
மனவிருத்தி சிறுவர்கள் வரைந்த ஓவியங்கள் கனடா முத்திரைகளில் இடம்பெறவுள்ளன. பக்கம் 07

**பாக். அணு ஆயுதங்கள் தீவிரவாதிகளிடம்**
பாகிஸ்தானிடம் உள்ள அணு ஆயுதங்கள் தீவிரவாதிகளிடம் சிக்கும் அபாயம். பக்கம் 19

## சாட்சியம் அளிக்க மறுத்த சர்வதேச மனித உரிமை அமைப்புகளை சாடுகின்றது நல்லிணக்க ஆணைக்குழு

கொழும்பு,ஒக். 16

ஜனாதிபதி மஹிந்தவால் நியமிக்கப்பட்டுள்ள படிப்பினை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் முன் சாட்சியமளிக்க மறுத்திருந்த வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகளை அந்த ஆணைக்குழு சாடியுள்ளது.

தங்களுடைய தப்பபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு இவர்கள் ஆணைக்குழுவின் செயற்பாட்டை விமர்சிக்கமுடியாது என்றும் நல்லிணக்க ஆணைக் குழு

(24 ஆம் பக்கம் பார்க்க)

## பிரி. இளவரசருடன் மஹிந்த அமர்வதா? அந்நாட்டு நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு

லண்டன்,ஒக்.16

இந்தியாவில் நடைபெற்ற கொமன்வெல்த் போட்டிகளின் நிறைவு விழாவில் பிரிட்டிஷ் அரசு குடும்பத்தினரின் பக்கத்தில் போர் குற்றத்தில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த அமர்வதா - என்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

டில்லியில் நேற்றுமுன்தினம் கொமன்வெல்த் போட்டியின்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகள் 500 பேர் நேற்று விடுவிப்பு

வவுனியா,ஒக்.16

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 500 பேர் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

வவுனியாவில் வைத்து புனர்வாழ்வு அமைச்சுச் செயலர் ஏ.திசநாயக்க அவர்களை உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

புனர்வாழ்வு நிலையங்களில் பயிற்சி பெற்று வெளியேறிய 300 ஆண் போராளிகளும் 200 பெண் போராளிகளுமே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.(ஒ-ஐ)



விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளில் ஒருவர் தமது குழந்தையுடன்...

## குடத்தனையில் மணல் ஏற்றுவதற்கு மீண்டும் ஊர் மக்கள் திரண்டு எதிர்ப்பு

### நேற்று 30 டிராக்டர்களில் ஏற்றிய மணல் கொட்டிக் குவிப்பு

குடத்தனை,ஒக்.16

குடத்தனை கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை சிறு சிறு மணல் திட்டுக்களில் மணல் ஏற்றும் நடவடிக்கை ஆரம்பமானது. அதை அறிந்த அப்பகுதி மக்கள் அங்கு திரண்டு வந்தனர். அவர்கள் பலத்த எதிர்ப்பை வெளியிட்டனர். அதைத் தொடர்ந்து மணல் ஏற்றும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது. அத்துடன் 30 டிராக்டர்களில் ஏற்றப்பட்ட மணல் திரும்பவும் அங்கே கொட்டிக் குவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கடந்த 7 ஆம் திகதி வியாழக் கிழமை (23ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மிதிவெடி அகற்றும் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு அரைவாசியாக வெட்டிக் குறைப்பு

### அதனால் செயற்பாடுகளை விஸ்தரிக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம்;ஒக்.16

வடக்கில் மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளை விஸ்தரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடங்களில் உதவி நிறுவனங்கள் வழங்கிய நிதி இந்த வருடத்தில் 50 வீதமாக வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளதால் இந்த நிலை உருவாகியுள்ளது.

யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் (23 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மக்களின் நன்மதிப்பை பெற்ற ஒரே ஒரு டைல் காட்சியறை
நவீன் செரமிக்
Naveen Ceramic PVT LTD
212, Palaly Road, Jaffna.
Tel : 212220033 / 212220044

சதவீதம் வரையில் ஆகக்குறைந்த வட்டி!
உங்கள் அவசரப் பணத்தேவைகளின் போது, 1 சதவீதம்* வரையில் ஆகக்குறைந்த வட்டி வீதத்தில், பவுனுக்கு அதிகூடிய பெறுமதியை வழங்கும் லிஸ்வினின் அடகுச்சேவை மூலம், உங்கள் குறுங்கால பணத்தேவையை இன்றே நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.
LISVIN INVESTMENTS LIMITED
லிஸ்வின் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடட், இல. 56/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0777 997998 Web: www.lisvin.com | E-mail: lisvin@lisvin.com
குத்தகை | வாடகைக் கொள்வனவு | கடன் | விலைப் பட்டியலிடுதல் | அடகு
அங்கீகாரம் பெற்ற விசேடமான நிதிக் குத்தகை நிறுவனம். 2000 ஆம் ஆண்டு 56 ம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. *நிபந்தனைகள் உள்ளடங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பாடசாலை அதிபர் வீ.கணேசராசா, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், திருமதி கிருபாஹரி இளங்கோவன் ஆகியோர் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் திருமதி கிருபாஹரி இளங்கோவன் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்:ரட்ணம்)

# பொன்சேகா விவகாரம் குறித்து ரணில் பொதுநலவாய சங்கத்தில் முறையிடுவார்

## ஊடகங்கள் பக்கச்சார்பு என்று குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.16

சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள சிறைத் தண்டனை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்திடம் முறைப்பாடு செய்வார்.

சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக நாம் தொடர்ச்சியான மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். கடந்த மாதம் மாத்திரம் நாம் நாடளாவிய ரீதியில் 80 போராட்டங்களை நடத்தியிருக்கின்றோம்.

இந்த நாட்டுக்காக நாம் மேற்கொள்ளும் இந்தப் போராட்டங்கள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுவதில்லை. மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளையே ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன. ஊடகங்கள் எம்மை வீழ்த்துவதற்குத் திட்டமிடுகின்றன. ஒருபோதும் அது நடக்காது.

1977களில் நாம் ஊடகங்களின் உதவி இன்றியே வெற்றி பெற்றோம். ஊடகங்களைப் பயன்படுத்தி எமது கட்சி மீது சேறு பூச மஹிந்த ராஜபக்ஷ எடுக்கும் நடவடிக்கை வெற்றியளிக்காது.

இந்த நாட்டின் முக்கிய பிரச்சினைகள் குறித்து எமது உறுப்பினர்கள் நாடாளுமன்றில் கூறுகின்றனர். அவை ஊடகங்களில் தெளிவுபடுத்தப்படுவதில்லை. 18ஆவது திருத்தச்சட்டம், கொழும்பு மாநகரசபை விவகாரம் மற்றும் சரத் பொன்சேகா விவகாரம் போன்றவை தொடர்பாக நாம் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தி வருகின்றோம். அது தொடர்பான போராட்டங்களை மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகிறோம்.

சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக நாம் பலதரப்பட்ட போராட்டங்களை நடத்தி வருகிறோம். பொன்சேகாவின் சிறைத் தண்டனை தொடர்பாக நான் அடுத்த வாரம் பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தில் முறைப்பாடு செய்யவுள்ளேன் - என்றார். (சி)

# சிறையை உடைப்போம் என்கிறார் பொன்சேகா

கொழும்பு,ஒக். 16

''சிறையை உடைத்துக்கொண்டு வெளியே வந்து மக்களைப் பாதுகாப்போம்'' என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று மேல் நீதிமன்றத்தைவிட்டு வெளியே வரும்போது, தன்னைச் சூழ்ந்துகொண்ட செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மேல் நீதிமன்றத்தில் நீதிபதிகளான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி. வராவெல, சர்பிக் ரஷீக் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த விசாரணையை அடுத்து மேல் நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

''இன்று ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டதைப் போன்று இன்னும் பலர் கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்பட உள்ளனர். இன்னும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படுவார்கள். சிறைக்கு வரும் அனைவரும் ஒன்றிணைந்து சிறைச்சாலையை உடைத்துக்கொண்டு வெளியே வந்து மக்களைப் பாதுகாப்போம்'' - என்று கூறினார். (சி)

# நாடகப் போட்டிகள்

வலி.வடக்கு,ஒக்.16

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் நடத்தும் முத்தமிழ் சங்கம நிகழ்வில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நாடகப் போட்டிகள் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையத்தில் நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (த-86)

# மீள்குடியமர்வுக்காக வலி.வடக்கில் கண்ணிகள் அகற்றும் பணிகள் துரிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்கு வசதியாக அங்கு கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த வசதியாக கண்ணிவெடிகளை விரைவாக அகற்றுமாறு அரசு விடுத்த கோரிக்கையை அடுத்து அங்கு முன்னுரிமை அளித்து கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றன.

ஹலோட்ரஸ்ட் மற்றும் இராணுவ பொறியியல் பிரிவு ஆகிய நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு விரைவாக கண்ணிகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார் அவர். (ஒ-ஐ-9)

# சுதுமலையில் டாக்டரின் வீட்டில் நகைகள், பணம் அபகரிப்பு

## சந்தேகத்தின் பேரில் இளம் பெண் கைது

சண்டிலிப்பாய்,ஒக்.16

சுதுமலை வடக்கில் டாக்டர் ஒருவரின் வீட்டில் திருடப்பட்ட நகைகள் மற்றும் பணம் 24 மணி நேரத்தில் மீட்கப்பட்டுள்ளன.

டாக்டரின் வீட்டில் இருந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் வேளை சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான 20 பவுண் நகை, 20ஆயிரம் ரூபா பணம் ஆகியன திருட்டுப்போய் விட்டன.

மானிப்பாய் மத்திய சந்தைப் பகுதியில் 'டிஸ்பென்சறி' நடத்தி வரும் இவர் மதிய உணவுக்காக வீடு வந்து மாலை 4 மணியளவில் திரும்பிச் சென்றுவிட்டார்.

அதன் பின் பொழுது சாயும் வேளையில் வீடு வந்தபோது அறையில் பொருள்கள் சிதறிக் கிடப்பதைக் கண்டார். அலுமாரியில் இருந்த நகை,பணம் அபகரிக்கப்பட்டிருப்பதை அறிந்து கொண்ட அவர் அதிர்ச்சியடைந்தார். இந்தத் திருட்டுத் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

உடனடியாக விசாரணை ஆரம்பித்த மானிப்பாய் பொலிஸார், டாக்டரின் வீட்டின் ஒருபகுதியில் தொலைபேசி நிலையம் நடத்தும் 25 வயதான இளம் பெண் மீது சந்தேகம் கொண்டனர்.

அவரைத் துருவித் துருவி விசாரணை செய்ததில், அவரிடம் இருந்து நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பெண்ணைத் தடுத்து வைத்து விசாரணைகளைத் தொடர்கின்றனர் மானிப்பாய் பொலிஸார். (ஒ-ஐ-115)

# நாவலர் கல்வி நிலையத்தின் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ்.நாவலர் கல்வி நிலையத்தின் 5ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வாணி விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நிலையத்தின் கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

செல்வன் என்.துஷிகேஷனின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் ரி.வேல்நம்பியும் சிறப்பு விருந்தினராக நாவலர் கல்வி நிலைய இயக்குநர் ரி.எஸ்.குணநாதனும் கலந்து கொள்வர்.

கவியரங்கம் மற்றும் நகைச் சுவை நிகழ்ச்சியும் அங்கு இடம் பெறும். (ஒ-ஐ)

# தாய்லாந்தில் கைதான தமிழர்கள் நாடுகடத்தப்படும் சாத்தியமில்லை

## மனித உரிமைகள் குழு நம்பிக்கை

கொழும்பு,ஒக்.16

தாய்லாந்தில் கைதுசெய்யப்பட்ட 130இற்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் நாடு கடத்தப்படக் கூடிய சந்தர்ப்பமில்லை எனத் தாய்லாந்துக்கான மனித உரிமைகள் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி சுனை பாசுக் தெரிவித்தார்.

தாய்லாந்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்ட ஈழத் தமிழர்கள் நாடு கடத்தப்படலாம் என ஊடகங்களில் செய்தி வெளியானதையடுத்தே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தாய்லாந்து அரசின் இந்தக் கைது நடவடிக்கைக்கு மனித உரிமைகள் குழுக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கைதுசெய்யப்பட்டவர்கள் குடிவரவு - குடியகல்வு சட்டத்தை மீறியமையாலேயே கைதுசெய்யப்பட்டனர் எனத் தாய்லாந்து வெளிவிவகாரத்துறை ஊடகப் பேச்சாளர் தனி தொங்பஹாடி தெரிவித்துள்ளார். (சி)



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வாரம்தோறும் இடம்பெறும் 'அறிவோர் ஒன்றுகூடல்' நிகழ்வில் 'யுத்த நெருக்கடிக்கு மத்தியில் பத்திரிகைப் பணி' என்னும் தலைப்பில் 'உதயன்' 'சுடர் ஒளி' முன்னாள் ஆசிரியரும் சிரேஷ்ட பத்திரிகையாளருமான [illegible] வித்தியாதரன் உரை நிகழ்த்தினார். உடப்பூர் வீர சொக்கன் தலைமையில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இந்த நிகழ்வில் பத்திரிகையாளர் வித்தியாதரன் உரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் தலைமை வகித்த உடப்பூர் வீர சொக்கன், தமிழ்ச் சங்கத் தலைவர் எம்.கதிர்காமநாதன், பொதுச் செயலாளர் ரகுபதி பாலஸ்ரீதரன் ஆகியோரையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இளைஞர், யுவதிகளின் தொழில் வாய்ப்புக்கு கனடா உதவ வேண்டும்

## கைத்தொழில் மன்றப் பிரதிநிதிகள் தூதுவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ்.மாவட்டத்தில் வேலை வாய்புகளற்றுள்ள இரண்டு லட்சத்துக்கும் அதிகமான இளைஞர், யுவதிகளுக்கு தொழில்பயிற்சியையும், தொழில் வாய்ப்புகளையும் வழங்கக் கனேடிய அரசு முன்வர வேண்டும் என கனேடிய உதவித் தூதுவர் பிரெட் ஜக்குலியிடம் வேண்டுகோள் விடப்பட்டு இருக்கிறது.

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றப் பிரதிநிதிகளுக்கும், கனேடிய உதவித் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் ஆனைப்பந்தி சந்தியிலுள்ள அலுவலகத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் தலைவரும் எந்திரியுமான கே.பூரணச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது கனேடிய உதவித் தூதுவரிடம் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அங்கு மேலும் முன்வைக் கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

* யாழ். மாவட்டத்தில் தொழில் தகைமையுடைய இளம் சமூகம் வேலைவாய்ப்புகளின்றி உள்ளன. அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் விரக்தியில் உள்ளனர்.

* 'சீடா' நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சியையும் வேலை வாய்ப்புகளையும் வழங்க கனேடிய அரசு முன்வரவேண்டும்.

* கனேடிய அரசின் உதவியுடன் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களின் கட்டட நிர்மான வேலைகளின் போது யாழ்ப்பாணத்திலுள்ள ஒப்பந்தகாரர்களுக்கும் கம்பனிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். கொழும்பிலுள்ளவர்களுக்கே தற்போது சந்தர்ப்பம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

* கனேடிய அரசு வழங்கும் உதவித் திட்டங்களையும், நிதியையும் நேரடியாக யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்துக்கு வழங்குவதன் மூலம் மேலதிக நிர்வாக செலவுகளைத் தவிர்க்க முடியும். அதன் மூலம் யாழ். மக்கள் அதிக நன்மையடைய முடியும்.

* விதவைகளுக்கும், தொழில் முயற்சியாளர்களுக்கும் வருமானம் ஈட்டக் கூடிய தொழில் முயற்சிகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

* சிறுகைத்தொழில், நிர்மாணத்துறை, சட்டத்துறைகள் தொடர்பாக தொழில் பயிற்சிகளை வழங்க கனேடிய அரசு முன்வர வேண்டும்.

ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்தக் கோரிக்கையை செவிமடுத்த கனேடிய உதவித் தூதுவர் கொழும்பிலுள்ள இலங்கைக்கான கனேடிய தூதுவர் அலுவலகத்தில் இதனை பரிசீலனை செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (த-204-14)

## பட்டப்படிப்புகள் பீடத்தின் தெரிவுப் பரீட்சை

உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ். பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் 2011/ 2013 கல்வி ஆண்டுக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமா (வவுனியா நிலையம்) கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்து மூலத் தெரிவுப்பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வவுனியா வளாகத்தின் வியாபார கற்கைகள் பீடத்தில் நடைபெறவுள்ளது.

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களுக்கு யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (த-201)

# யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத்தில் 4 புதிய துறைகள் நிறுவ அரசு அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் புதிதாக நான்கு துறைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான அறிவித்தல் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளதாக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா தெரிவித்துள்ளார்.

கணக்கியல்துறை, சந்தைப்படுத்தல்துறை, நிதி முகாமைத்துவத்துறை, மனிதவள முகாமைத்துவத் துறை ஆகிய நான்கு துறைகளே அரசின் அனுமதியுடன் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் துறைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு வருவதாகக் கூறிய பேராசிரியர் க.தேவராஜா, இதற்கான ஆரம்ப நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனால் ஆரம்பித்து வைக்கப்படும் என்றும் கூறினார்.

இதேவேளை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.காலை 8 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெறும் விஷேட வழிபாட்டுடன் இந்த நிகழ்வு ஆரம்பமாகும் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார். (த-6)

# சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் 230 பேர் இரத்ததானம்



யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி யின் இன்டரக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இரத்ததானம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து இரத்த தானம் செய்வதைப் படத்தில் காணலாம். (204)

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் இன்டரக்ட் கழகத்தின் ஏற்பாட் டில் வருடாந்த இரத்ததான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்களும் அருட் தந்தையர்களும் ஆசிரியர்களும் இணைந்து 230 பேர் இரத்தானம் செய்திருந்தனர்.

வருடாவருடம் இக்கல்லூரியின் இன்ரறட்க் கழகத்தினர் சமூகசேவையினை மையமாகக் கொண்டு உயிர்காக்கும் உன்னத பணியாக இரத்ததான நிகழ்வினை ஒழுங்கு செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இம்முறை 'ஹோர்லிக்ஸ்' மற்றும் கரித்தாஸ் கியுடெக்நிறுவனத் தினரும்பழைய மாணவர்களும் சிற்றுண்டி, பானங்களுக்கு அனுசரணை வழங்கியிருந்தனர்.2008ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் இக்கல்லூரியின் மாணவர்களே மிக அதிகமான இரத்ததானம் செய்து சாதனை படைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (த)

# புதிய அங்கத்தவர்களை இணைப்பதன் மூலம் குடாநாட்டில் கூட்டுறவுத்துறையை முன்னேற்றலாம்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 16

புதிய அங்கத்தவர்களை இணைப்பதனூடாக யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை உத்வேகத்துடன் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கூட்டுறவுச் சங்கங்களின் பொதுச் சபைப் பேராளர்களின் எண்ணிக்கையை நிர்ணயித்தல் தொடர்பான சுற்றறிக்கைக்கு அமைவாக,யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய அங்கத்தவர்களை இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் குடாநாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்கனவே 100 ரூபா பங்குப் பணத்தை முழுமையாக செலுத்தியிராத அங்கத்தவர்கள் 31.12.2010 இற்கு முன்னர் தமது மிகுதிப் பங்குப் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தை பூர்த்தி செய்யமுடியும்.

மேலும் புதிய அங்கத்தவர்களாக கூட்டுறவுச் சங்கங்களில் சேர விரும்புவோர் 100 ரூபா பங்குப் பணத்தை தத்தம் பிரதேசங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் செலுத்தி அங்கத்துவத்தைப் பெறமுடியும்.

புதிய அங்கத்தவர்களை கூட்டுறவு அமைப்புகளில் இணைப்பதன் மூலம் கூட்டுறவுத்துறையைக் குடாநாட்டில் வீரியத்தோடு கட்டியெழுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு கூட்டுறவு அமைப்புகளின் புதிய அங்கத்தவர்களாக இணைவதில் ஏதேனும் இடையூறுகள் ஏற்படின் .அதுகுறித்து எனக்கு அறியத்தந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கமுடியும் - என்றார். (எ)

# யாழ். போதனா வைத்தியசாலையில் "பஃக்கோ" கண் சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம், ஒக். 15

பஃகோ (PHACO) கண் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த பஃகோ (PHACO) சிகிச்சைக்கான இயந்திரத்தைக் கையாளக்கூடிய வைத்திய நிபுணர் இல்லாத காரணத்தால் இதுவரை காலமும் மக்களுக்குக் குறிப்பிட்ட சத்திர சிகிச்சையைப் பெறமுடியாதிருந்தது.

எனினும் முன்னர் லண்டனிலிருந்து வருகைதந்த வைத்திய நிபுணர்கள் மூலம் இச்சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

தற்போது புதிதாக தென்னிலங்கையைச் சேர்ந்த திருமதி தர்சனா தர்மதாஸ என்ற வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டுள்ள போதும் யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள குறிப்பிட்ட இயந்திரம் பழுதடைந்துள்ளதால் இச்சிகிச்சை வழங்க முடியாத இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் வெகுவிரைவில் இச்சிகிச்சைகளை ஆரம்பிக்க முடியும் என்றும் யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-16)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த கனேடிய உதவித் தூதுவர் பிரெட் ஜக்குலி யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில்மன்ற பிரதிநிதிகளை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்றத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின்போது அதன் தலைவரும் எந்திரியுமான எஸ்.பூரணச் சந்திரன்,உப தலைவர் எஸ்.ருத்திரலிங்கம், பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபன், திருமதி இ.பொன்மலர் ஆகியோர் கனேடிய உதவித் தூதுவருடன் கலந்துரையாடுவதனைப் படத்தில் காணலாம். (படம்: உமா)

# திரைப்பட விழா நடத்த மண்டபம் வழங்க மாநகர சபை மறுப்பு

## முறையிடுகிறது சோஷலிச இளைஞர் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 16

சோசலிச இளைஞர் சங்கம் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் சகோதரத்துவத்தின் திரைப்பட விழாவை நடத்துவதற்கு யாழ். மாநகரசபை அனுமதி வழங்க மறுத்ததால் அதனை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சங்கத்தின் தேசிய குழுவின் உறுப்பினர் எம்.மோகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ்ப்பாணத்தில் இந்த திரைப்பட விழாவை நடத்துவதற்காக எமது அமைப்பின் யாழ். இணைப்பாளர் வி.லலித்குமார் கடந்த மாதம் 20ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தை யாழ். மாநகரசபையிடம் முற்பதிவு செய்திருந்தார்.

இம்மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையும் எமது நிகழ்வை நடத்த முற்பதிவு செய்யப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் விழா ஏற்பாடுகளுக்காக கலாசார மண்டபத்துக்குச் சென்றவேளை, யாழ். மாநகர சபையினால் நாவலர் கலாசார மண்டபப் பாவனை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று எமக்குக் கூறப்பட்டதுடன் கடிதமும் தரப்பட்டது.

அதில் யாழ். மாநகர சபை யின் பாவனைக்காக நாவலர் மண்டபம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியிருப்பதால் ஏற்கனவே தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த மண்டப ஒதுக்கீடு இரத்துச் செய்யப்படுகிறது எனவும் தாங்கள் செலுத்திய முற்பதிவுக் கட்டணம் முழுமை யாக மீளளிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இந்த நிகழ்வை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை சோசலிச இளைஞர் சங்கத்தின் யாழ். மாவட்ட உறுப்பினர்கள் சிலர் நேற்று முன்தினம் ஆவரங்கால் பகுதியில் வைத்து தாக்குதல்களுக்கு இலக்காகினர் என்று சங்கத்தின் தேசியக் குழு உறுப்பினரான எம்.மோகன் கூறினார்.

பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரம் மற்றும் விளம்பரங்களை விநியோகிக்கும் பணியில் எமது இரு உறுப்பினர் ஈடுபட்டிருந்த சமயமே மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கண்டபடி தாக்கினர். அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து உடனடியாக வெளியேறிச் சென்றுவிட வேண்டும் என்றும் மிரட்டினார்கள் - என்றார் மோகன். (ஒ-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




திரு.C.A.மோகன்றாஸ் (மேலதிக அரசாங்க அதிபர், முல்லைத்தீவு)

எமது பிரதேச செயலாளராகக் கடமையாற்றி முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபை
வலயம் 01. கோப்பாய்.



## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

பதவி வெற்றிடம்

தட்டெழுத்தாளர்

01. சம்பளக் குறியீட்டு இல. - 305 / 15
02. சம்பளத்திட்டம் - 9450 - 75 X10 - 80 X 10 - 11000
03. வயதெல்லை - 18 தொடக்கம் 45 வரை
04. விண்ணப்ப முடிவு திகதி - 31.10.2010
05. தகைமைகள்

க.பொ.த(சாதாரண தரம்) சான்றிதழ் தொடர்பு பட்ட மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியும், சிங்கள தமிழ் தட்டெழுத்து நிமிடத்திற்கு 20 சொற்கள், ஆங்கிலமாயின் 30 சொற்கள்.

06. 1) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கும், கணனி அறிவு உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
2) வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கங்கள் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
3) சங்கப் பணிப்பாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப் பட மாட்டாது.
4) சங்கத்தால் கோரப்படும் பிணையை செலுத்துதல் வேண்டும்.

07) விண்ணப்பங்கள் யாவும் ''பொதுமுகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ 31.10.10 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்

**பொது முகாமையார்,**
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை.



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**DISTANCE LEARNING UNIT**
**BBM ONLINE DEGREE PROGRAMME OF FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE**

## Post of Tutor-Mentor (On contract)

Applications are invited from suitable candidates for the post of Tutor -Mentor on contract basis for the period of one year for BBM online External Degree Programme under the Distance Education Partnership Programme (DEPP) in the Faculty of Management Studies and Commerce, University of Jaffna, up to 25.10.2010.

Qualification:
(i) A degree from a regognized University in Management Studies or Commerce.
(ii) Should have good command in English and Tamil.
(iii) Should have computer application skills in MS Office, Learning Management System, Internet & e-mail and typing skill in English and Tamil.

**Salary** : Negotiable
**Age** : Below 30 years
Selection by Interview.

Applications together with names and addresses of two referees should reach the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka with **"Post of Tutor-Mentor (on contract) - BBM online External Degree Programme"** written on left side top corner of the envelope.

**REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA**
**15.10.2010**


# மானிப்பாய் இந்துவுக்கு இன்னொரு மணி மகுடம்

நூற்றாண்டு விழாவினைக் கடந்த நிலையில் தேசியநிலைப் பாடசாலையாகத் தரமுயர்ந்த பெருமையுடன் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது மானிப்பாய் இந்துக்கல்லூரி.

புறநகர்ப் பாடசாலையொன்று தேசியத் தரத்தில் நிமிர்ந்து நிற்கின்ற செய்திகேட்டு அந்தக் கல்லூரியின் வரலாற்றுத் தடங்களைப் பதிவாக்க அங்கு சென்றோம்.




கல்லூரியின் மாணவர்கள் பலரது முகங்களிலும் சந்தோஷத்தென்றல் வீசிக்கொண்டிருந்தது. ஆசிரியர்களும் தாம் ஒரு தேசியப் பாடசாலையில் கடமையாற்றுகிறோம் என்ற பெருமிதத்தை முகங்களில் சூடியிருந்தனர்.

சுவாமி விபுலானந்தர், கூட்டுறவாளர் வீரசிங்கம், பேராயிரவர், முத்துவேற்பிள்ளை போன்ற பெரியோர்கள் அதிபர் பதவியை அலங்கரித்து கல்விப்பணிபுரிந்த அந்தக் கல்லூரி கல்விமான்கள் பலரையும் உருவாக்கிய உயர்மாண்பினைப் பெற்றிருந்தது.

தமக்கு கல்வி ஊட்டிய மானிப்பாய் இந்து அன்னைக்கு தேசியப்பாடசாலை என்ற மகுடம் சூட்டப்பட்டுள்ளது என்ற செய்தியறிந்து புளகாங்கிதத்துடன் பழைய மாணவர்கள் பலரும் கல்லூரி வாசலுக்கு வந்து கல்லூரியைப் பார்த்து மகிழ்ந்து சென்ற காட்சிகளும் எம் கண்ணில் சிக்கியது. அதிபர் அலுவலகத்தில் புன்னகை நிறைந்த இன் முகத்துடன் வரவேற்றார் மானிப்பாய் இந்துவின் அதிபர் எஸ். சிவனேஸ்வரன்.

1993 ஆம் ஆண்டுமுதல் 2005ஆம் ஆண்டுவரை சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தில் அவர் அதிபராகக் கடமையாற்றியபோது அந்தப் பாடசாலை விளையாட்டு, இணை பாடவிதானம் என்பவற்றில் உயர்வடைந்து பின்னர் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்ட நினைவுகள் மனதில் நிழலாடி மறைந்தன. எம்முடன் தனது கருத் துக்களை அதிபர் பகிர்ந்துகொண்டார்.

## புறநகர்க் கல்லூரிக்கு 'தேசியப் பாடசாலை' என்னும் ஒப்பற்ற அங்கீகாரம்

நான் 2005ஆம் ஆண்டு இந்தக் கல்லூரியின் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்ற போது இங்கு 400 பிள்ளைகள் மட்டுமே கல்விகற்றனர். ஆனால் இன்று 1051 மாணவர்களாக அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2005ஆம் ஆண்டுக்கு முன்னர் சாதாரண தரப் பரீட்சையில் 36 வீதமான மாணவர்கள்தான் சித்தியடைந்தனர். தற்போது அந்த அடைவு மட்டம் 65வீதமாக உயர்வு பெற்றுள்ளது. அது போலவே உயர்தரப் பரீட்சையில் முன்னரெல்லாம் 40வீதமானோரே சித்தியடைந்தனர். கடந்த 5வருடங்களாக அது 76வீதமாக வளர்ச்சி பெற்றுள்ளது. கடந்த 2005ஆம் ஆண்டுக்கு முன்னர் சராசரியாக 9மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிபெற்று வந்தனர். தற்போது சராசரியாக 60 மாணவர்கள் வரை பல்கலைக்கழக அனுமதி பெறுமளவுக்கு கல்வித்தரம் இங்கு வளர்முகமாகவுள்ளது. அத்துடன் நீண்ட காலத்துக்குப் பின்னர் பொறியியல்துறை, மருத்துவத்துறை ஆகியவற்றுக்கும் மாணவர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். அத்துடன் விளையாட்டுத்துறையிலும் எமதுகல்லூரி மகோன்னதமான சாதனைகளைப் பதிவாக்கியுள்ளது. குறிப்பாக உதைபந்தாட்டத்தில் தேசிய மட்டத்தில் 2009ஆம் ஆண்டு முதலாம் இடத்தையும், 1998,2010ஆம் ஆண்டுகளில் 3ஆம் இடத்தையும் எமது கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.



சி.சிவனேஸ்வரன் (அதிபர்)

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கான பௌதிக வளங்கள் அபிவிருத்தி செய்வதில் பழைய மாணவர் சங்கம், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற பழைய மாண வர்கள் நிதியுதவி களை வழங்கி வருகின்றனர். அண்மையில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் கூட 2கோடி ரூபா செலவில் கட்டட அபிவிருத்திப் பணிகளை இவர்கள் மேற்கொண்டனர். கல்லூரியின் இத்தகைய வளர்ச்சிக்கு பழைய மாணவர்களின் அளப்பரிய பங்களிப்பு தொடர்ந்து கிடைக்கின்றது. அத்துடன் எமது ஆசிரியர் குழுவின் அர்ப்பணிப்பான சேவையும் கல்லூரியின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகும்.

தொகுப்பு: கவிநேசன்

எமது கல்லூரிக்குக் கிடைத்த தேசியப்பாடசாலை என்ற கௌரவம் புறநகர் மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். அந்தக் கௌரவத்தை நாம் எல்லோரும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வோம். தேசியப் பாடசாலையென்றாலும் இங்கு 'டொனே சன்' எதுவும் அறவிடப்படமாட்டாது. இலவசக் கல்வியைக் கற்பதற்கு மாணவர்களிடம் ஏன் டொனேசன் வாங்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை அப்படி டொனேசன் வாங்குவது சீதனம் வாங்குவதற்குச் சமம். எனவே அந்தப் பேச்சுக்கு எமது கல்லூரியில் ஒருபோதுமே இடமில்லை.

கல்லூரியின் மேன்னிலைக்கு இன்னும் பல்வேறு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க அரச கல்வித் திணைக் களங்கள்மேன்மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

### ரி. தில்லைச்சிவன் (ஆசிரியர்)



நான் இங்கு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பௌதிகவியல் பாடத்தினைக் கற்பிக்கின்றேன். எங்களுடைய கல்லூரிக்குக் கிடைத்த இந்தக் கௌரவம் அதிபர் சி.சிவனேஸ்வரனதும் சக ஆசிரியர்களதும் அர்ப்பணிப்பான சேவையாலேயே கிடைத்ததென்று சொன்னால் மிகையாகாது. எங்களுடைய கல்லூரியில் ஆய்வுகூட வசதிகள்,கணனி வசதிகள் போதுமானதாக இல்லை. அவற்றை உரியவர்கள் நிவர்த்தி செய்து தரவேண்டும்.

### ஜெ. திருவன் (மாணவன்)



நான் தரம் 7இல் கல்வி கற்றுவருகிறேன். எங்களுடைய கல்லூரி தேசியப் பாடசாலையாக தரமுயர்ந்திருக்கிறதென்று அறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

சிறு வயதில் இருந்து தேசிய பாடசாலையில் கல்வி கற்கவேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. ஆனால் அது நிறைவேறவில்லை.தற்போது நான் தேசியப்பாடசாலையில் கல்வியைத் தொடரப் போகிறேன் என்று நினைக்கும்போது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.எமது கல்லூரி தரமுயர அளப்பரும் சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் மாணவர்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### விசாந்தினி அல்பேட் (ஆசிரியர்)



நான் 2005ஆம் ஆண்டு முதல் இங்கு ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறேன். உயர்தர மாணவர்களுக்கு தமிழ்,கிறிஸ்தவ நாகரிகம் பாடங்களைக் கற்பித்து வருகிறேன். நாங்கள் தேசியப்பாடசாலையில் கல்வி கற்பிக் கப்போகிறோம் என்ற மன உணர்வால் ஆனந்தம் ஏற்பட்டுள்ளது. எமது கல்லூரியின் உயர் நிலைக்கு அதிபரது அயராத முயற்சியும், ஆசிரியர்களது அர்ப்பணிப்பான உழைப்புமே முக்கிய காரணமாகும்.

### கே. உதயசூரியன் (பழைய மாணவர் சங்கத் தலைவர்)



தேசியப் பாடசாலையாக எமது கல்லூரி தரமுயர்ந்திருக்கிறது என்று தகவல் அறிந்து பழைய மாணவர்களாகிய நாம் அளப்பரும் மகிழ்வடைந்தோம். கடந்த காலங்களினை விட தற்போது எமது கல்லூரியின் வளர்ச்சி சகல துறைகளிலும் மேன்மையுற்றிருக்கிறது.

எமது மாணவர்களும்,எமது கிராமத்துப் பிள்ளைகளும் இனிமேல் நகர்ப்புறங்களை நாடிச்செல்லாமல் இங்கேயே தேசியப்பாடசாலையில் கற்கின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

இத்தகைய தரமுயர்வுக்கு சகல வழிகளிலும் உழைத்த கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மற்றும் கல்வியமைச்சுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**அன்ரன் ஜரீன்**
*தம்பதிகளின் செல்வப் புதல்வன்*
**அ.கீர்த்தாஞ்சன்**
*(யா/சென்.ஜோண்ஸ் கல்லூரி)*

*2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 177 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் 17வது இடத்தைப் பெற்று சித்தியடைந்ததைப் பாராட்டி மகிழ்வதோடு இவரது இப் பெறுபேற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அன்பொளி கல்வி நிறுவன இயக்குனர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் மென்மேலும் கல்வியில் உயர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.*

**வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அக்கா அம்மம்மா, மாமா குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## நிரந்தர நிலைப்பாட்டுக் கோலமா?

இடம்பெயர்ந்திருக்கும் ஒன்றரை லட்சம் சிங்கள மக்களையும் வடக்கு, கிழக்கில் குடியமர்த்துமாறு ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தி உள்ளது. அதற்கு அடைமொழி வைத்தால் போன்று யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் தெற்கிலிருந்து வந்து தங்கி இருக்கும் சிங்கள மக்களை யாழ்ப்பாணத்தில் அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்ற வேண்டும் என்று ஹெல உறுமயவின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் வலியுறுத்தி உள்ளார்.

யாழ்ப்பாணம் சென்றுள்ள சிங்கள மக்களின் மீள்குடியேற்றம் குறித்து மீள்குடியேற்றத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாகவும், அவர் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் இவ்விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிவரும் என்றும் எச்சரிக்கும் தொனியில் கூறியிருக்கிறார் ஹெல உறுமயவின் தலைவர்.

போர் முடிந்து ஒன்றரை வருடங்கள் கழிந்தபோதிலும் யாராலும் பேசப்படாத, கண்டுகொள்ளப்படாத விடயத்தைத் தாம் மீள்குடியேற்ற அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் தேரர் தகவல் கூறி உள்ளார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்பதில் தாம் உறுதியாக உள்ளதாகவும் தேரர் ''சத்தியம்'' பண்ணியுள்ளார்.

போர் முடிந்து விட்டது. அதனால் பாதிக்கப்பட்ட மக்களை அவரவர்களின் சொந்த இடங்களில் - அவர்கள் முன்னர் வாழ்ந்த பகுதிகளில் - மீளக்குடியேற்ற வேண்டும் என்பது சோபித தேரரின் வாதம்.

போர் நடைபெற்ற பிரதேசங்களில் வாழ்ந்து, தமது உயிரைக் காப்பாற்றினால் போதுமென்ற மனநிலையில், தமது சொந்தங்களில் பலரை இழந்து, திக்கற்றவர்களாக முட்கம்பி வேலிகள் இடப்பட்ட முகாம்களில் சிறைப்பட்டு மேன்மேலும் சொல்லொண்னா கஷ்டங்களை அனுபவித்து, வாழ்வாதாரத்தில் வெறுமை நிலைக்கு ஆளான தமிழ் மக்களின் மீளக்குடியமர்வுடன், ஏதே ஒரு சக்தியால் தூண்டப்பட்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் சிங்கள மக்களின் மீள்குடியமர்வை சமன்பாடாகக் காட்டுவது எந்த வகையில் பொருத்தம்?

இத்தனைக்கும், யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் வந்து தங்கியுள்ளவர்கள் முன்னர் இங்கு குடியிருந்தமைக்கான சான்றுகள் எதுவும் இல்லையென்றும், இது விடயத்தில் எதனையும் உடனடியாகச் செய்வதற்குச் சாதகமான நிலை எதுவும் இல்லை என்றும் அரச நிர்வாக துறையினால் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு திடீரென வந்து, மீள்குடியேறப் போவதாக யாழ்.வந்திருக்கும் பெரும்பான்மை இனத்தவர்களால் கூறப்பட்டாலும், அது குறித்து தமக்கு எதுவித உத்தியோகபூர்வ அறிவிப்பும் இல்லையென்று ஆளுநரும் கூறியிருந்தார்.

தாம் இங்கு மீளக்குடியமராமல் திரும்பிப் போகப் போவதில்லையென்று யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியிருக்கும் சிங்கள மக்கள் சபதம் கூறுகின்றனர்.

இவற்றுக்கிடையில், சிங்கள மக்களை குடாநாட்டில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்றும், அதற்கான உதவிகளையும் ஒத்தாசைகளையும் அரசாங்கம் வழங்கவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா வற்புறுத்தியிருக்கிறார்; ஒத்து ஊதியுள்ளார்.

அரசாங்கக் கட்சிகள் தரப்பில் காக்கப்பட்டு வரும் மௌனம் இது விடயத்தில் அதன் சம்மதத்துக்கு அறிகுறியாகும். ஏன் அதன் முன்னெடுப்பு என்று சந்தேகிப்பதும் தப்பாகாது.

இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் , இது தெற்கின் அரசியல் கட்சிகள் சேர்ந்து வகுத்துக்கொண்ட 'சதி' என்றே யாழ்ப்பாண மக்கள் கருதுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் வசித்துப் போரினால் இடம்பெயர்க்கப்பட்ட முஸ்லிம் மக்கள், மீண்டும் இங்கு வந்து மீளக்குடியேறி உள்ளனர். அது குடாநாட்டு மக்களுக்கு எவ்வித சந்தேகத்தையும் எழுப்பவில்லை. ஏனெனில் அவர்கள் பூர்வீகமாகவே, சொந்த நிலம், சொந்த வீடுகளில் வாழ்ந்தவர்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தவை. அதற்கான சான்றுகள் உள்ளன. மேலும் அவர்கள் இங்கு நீண்டகாலமாக சகோதரர்கள் போன்று வாழ்ந்தவர்கள்.

இப்போது திடீரென யாழ்ப்பாணத்துக்கு வந்து தம்மை மீளக்குடியேற்றுமாறு கேட்பவர்களுக்கும் உரிய சான்றாதாரங்கள் இருப்பின் அவர்களின் மீளக்குடியேற்றக் கோரிக்கையில் குடாநாட்டு மக்களுக்கு சந்தேகம் எழுவதற்கு நியாயமிருக்காது.

மேலும், இவர்கள் தாம் இங்கு முன்னர் வசித்ததாகக் கூறும் காணிகளை அன்றி அரச காணிகளில் குடியேற்றுமாறு கேட்பது சிங்களக் குடியேற்றங்களை ஏதோ ஒரு கூட்டுச் சக்தி தூண்டிவிட்டிருக்கிறது என்ற ஐயுறவையும் இங்குள்ளவர்கள் மத்தியில் உண்டாக்கியிருப்பது இயல்பே; அது இயற்கையும் கூட.

மொத்தத்தில் போருக்குப் பின்னரான காலத்தில் வளர்க்கப்பட வேண்டிய இன ஒற்றுமை, இன சௌஜன்யம் என்பவற்றுக்குப் பதிலாக மீண்டும் இன முரண்பாட்டை தோற்றுவிப்பதற்கான ஓர் ஊற்றுக்காலாக இப்போதைய முயற்சியைப் பார்ப்பதே பொருத்தம்

இன உறவும் ஒற்றுமையும் சகோதரத்துவமும் சமவாய்ப்புகளும் சகலருக்கும் கிடைக்க மனம் கொண்டு உழைப்பதற்குப் பதிலாக, இத்தகைய குறுக்குப் புத்திகள் நாட்டின் வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக விளங்கும் என்பதனை உணராதிருப்பதேனோ? இந்த நாட்டின் அரசியலை, இனவாதப் படுகுழியிலிருந்து இனி எப்போதுமே மீட்கமுடியாது என்பது நிரந்தர நிலைப்பாட்டுக் கோலமாகிவிட்டது; அவ்வளவுதான்!

# 50 வருடங்களாக இங்கு வாழ்ந்து வருகிறோம் காணி உரிமைப்பத்திரம் இன்னும் கிடைக்கவில்லை

## அராலி, சங்கானை மக்கள் ஆளுநருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஒக்.16

சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட அராலி ஊரத்தி, சங்கானை மத்தி ஆகிய பிரதேசங்களில் கடந்த 50 வருடங்களாக சுத்திகரிப்புத் தொழிலாளிகளாக வாழ்ந்து வருகின்றோம்.

சமூகத்தில் மிகவும் பின்தங்கியுள்ள எமக்கு வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காணிக்கான உரிமைப்பத்திரத்தை வழங்கி அபிவிருத்தி செய்யுங்கள்.

இவ்வாறு கோரி சங்கானை அம்பாள் சனசமூக நிலையத் தலைவர் கு.இரஞ்சித்குமார், செயலாளர் க.தவராசா ஆகியோர் கையொப்பம் இட்டு வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சங்கானை மத்தியில் சுத்திகரிப்பு தொழிலாளர்களின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட காணியில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றோம்.

எம்முடன் வாழ்ந்த 21 குடும்பங்களுக்கு 1979 இல் உள்ளூராட்சி சபையின் விசேட ஆணையாளராக இருந்த இராசு தணிகாசலம் என்பவரால் காணி உறுதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அக்காணிகளில் வாழ்வதற்கான உறுதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இத்தருணத்தில் அருகில் உள்ள நாம் கடந்த 50 வருடங்களாக வாழ்ந்து வருகின்றபோதும் இதுவரையில் எமது நலன் கவனிக்கப்படவில்லை.

மேற்படி விடயமாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கின் வசந்தத்தின் கீழ் காணி பகிர்ந்து வழங்குமாறு மாகாணசபை அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

எனினும் எமது கோரிக்கைகளுக்கு இதுவரை நிரந்தர தீர்வு எட்டப்படவில்லை.

எனவே சங்கானை மத்தியிலும், அராலி ஊரத்தியிலுமாக உள்ள 65 சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடும் எமது குடும்பங்களுக்கு வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காணி பகிர்ந்து வழங்குங்கள் - என்று கேட்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலாளர், யாழ்.அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(த-302)

# யாழ். - கொழும்பு தனியார் பஸ்களின் பயணக் கட்டணங்கள் நிர்ணயம்

கொழும்பு, ஒக். 16

யாழ்ப்பாணம் - கொழும்பு பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் அதிசொகுசு, சொகுசு மற்றும் அரைச் சொகுசு வசதிகளைக் கொண்ட தனியார் பஸ்களுக்கான பயணக் கட்டணங்களைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிர்ணயித்துள்ளது.

இதற்கமைய ஒருவழிப் பயணம் செய்யும் பயணிகளுக்கான கட்டணங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதிசொகுசு பஸ்களில் புத்தளம் ஊடான மார்க்கத்தில் பயணிக்கும் பஸ்ஸுக்கு ஆயிரத்து 35 ரூபாவும் குருநாகல் ஊடான மார்க்கத்தில் பயணிக்கும் பஸ்களுக்கு ஆயிரத்து 105 ரூபாவும் ஒரு பயணிக்கான கட்டணமாக அறவிடப்படவுள்ளன.

சொகுசு பஸ்களில் புத்தளம் ஊடான மார்க்கத்துக்கு 700 ரூபாவும் குருநாகல் ஊடான மார்க்கத்துக்கு 740 ரூபாவும் ஒரு பயணியிடமிருந்து அறவிடப்படவுள்ளது.

அரைச் சொகுசு பஸ்களில் புத்தளம் ஊடான மார்க்கத்துக்கு 516 ரூபாவும், குருநாகல் ஊடான மார்க்கத்துக்கு 552 ரூபாவும் ஒரு பயணியிடமிருந்து அறவிடப்படும்.

மேலும், வழி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் - கொழும்பு பயணங்களை மேற்கொள்ளும் அனைத்து தனியார் பஸ்களும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு அமையவே பயணிகள் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிக்கப்பட்ட கட்டணங்களைவிட அதிகரித்த கட்டணங்களை அறவிடும் பஸ்களின் வழி அனுமதிப் பத்திரங்கள் ரத்துச்செய்யப்படுமெனவும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் போக்குவரத்துப் பணிப்பாளர் விபுல ஹேவாவனிமுனி தெரிவித்துள்ளார்.

தற்போது, யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் 106 பஸ்கள் வரை அனுமதி பெறாது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன. அத்துடன் சொகுசு பஸ்களில் பயணியொருவரிடமிருந்து பயணக் கட்டணமாக ஆயிரத்து 100 ரூபா வரை அறவிடப்படுவதுடன் அதிசொகுசு பஸ்களில் பயணியொருவரிடமிருந்து ஆயிரத்து 400 ரூபா வரை அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-22)

# வழக்குகள் குவிவதைத் தவிர்ப்பதற்காக ஜனவரி முதல் தற்காலிக நீதிமன்றங்கள்

கொழும்பு, ஒக். 16

நீதிமன்றங்களில் வழக்குகள் பெருந்தொகையில் குவிவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக, அடுத்த ஆண்டு ஜனவரிமுதல் தற்காலிக நீதிமன்றங்களை நிறுவுவதற்கு நீதியமைச்சு தீர்மானித்துள்ளது.

நீதியமைச்சர் அத்தாவுட செனவிரத்னவின் பணிப்புரையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் இரண்டாண்டு காலத்துக்கு மட்டும் இந்த நீதிமன்றங்கள் தற்காலிகமாகச் செயற்படும்.

அதிகளவில் வழக்குகள் குவிந்துள்ள நீதிமன்ற அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு அமைய இத்திட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் நிறுவப்படவுள்ளன.

இந்த நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளாக ஓய்வுபெற்ற நீதிபதிகள் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் நீதியமைச்சின் உயரதிகாரியொருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்விதம் தற்காலிக நீதிமன்றுகளை நிறுவுவது குறித்து பிரதம நீதியரசர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் ஆலோசித்து வருவதாகத் தெரிவித்துள்ள உயரதிகாரி, இன்றைய அளவில் நாடு முழுவதும் ஏழு லட்சம் வரையான வழக்குகள் குவிந்துள்ளதாக நீதியமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆகப்பிந்திய கணிப்பீடுகள் மூலம் வெளிப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (த-22)

# யாழ். - பருத்தித்துறை வீதி அகலிப்பு நவம்பர் மாத இறுதியில் முடிவடையும்

யாழ்ப்பாணம், ஒக். 16

கோப்பாய் முதல் பருத்தித்துறை வரையிலான யாழ். - பருத்துறை வீதியின் அகலிப்புப் பணிகள் அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்குள் முடிவடையும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வீதி அகலிப்பு பணிகளின் போது சில இடங்களில் உள்ளூர் கற்களும் சில இடங்களில் 'கிறனைற்' கற்களும் பயன்படுத்துவது தொடர்பில் அவரிடம் கேட்டபோது -

இந்த வீதி அகலிப்பு பணிகளுக்கான ஒப்பந்தம் செய்யப்படும் பொழுது ஏ - 9 வீதி மூடப்பட்டிருந்தது. ஆகையால் உள்ளூர் கற்களைப் பயன்படுத்தி வீதி அகலிப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு ஒப்பந்தகாரர்களுக்கு கூறப்பட்டுள்ளது. பின்னர் இங்கு கற்களை அகழ்வதற்கான தடை வந்தமையாலும், ஏ- 9 வீதி திறக்கப்பட்ட காரணத்தினாலும 'கிரனைற்' கற்களை வீதி அகலிப்பு பணிகளுக்கு பயன்படுத்தினார்கள். தற்போது உள்ளூர் கற்கள் கிடைப்பதனால் மீண்டும் அதனை அவர்கள் பயன்படுத்துகின்றனர் என்றார்.

கோப்பாய் பால வேலைகள் தாமதம் அமைவது பற்றிக் கேட்ட போது, கோப்பாய் பால வேலைகளும். இந்தப் பால வேலையும் வீதி அகலிப்பு ஒப்பந்தக்காரர் மேற்கொண்டு வருகின்றார் - என்றார் அவர். (த-15)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 30 | 16.10.2010 சனிக்கிழமை |
| திதி: | நவமி மு.இ 08.48 வரை |
| நட்சத்திரம் : | உத்தராடம் காலை 07.37 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

# தம்பாட்டி செல்ல மறுக்கும் பஸ் பொதுமக்கள் பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறை சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 777 ஆம் இலக்க மாலை 6.00 மணி, இரவு 9.00 மணி பஸ் சேவைகள் சில வேளைகளில் தம்பாட்டிக்கு செல்லாமையால் இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

777 ஆம் இலக்க பஸ் சேவை அண்மையிலேயே தம்பாட்டிக்குச் செல்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்திருந்தனர்.

தற்போது சில வேளைகளில் தம்பாட்டிக்குச் செல்லாமல் பஸ்கள் செல்வதனால் இப்பகுதி மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன் இச் சேவையை தொடர்ந்தும் தமக்கு வழங்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SPECTRA SKILLS
(2nd floor, People's bank building)
19 Stanley road, Jaffna.
Tel: 021 222 1422 / 1423

யாழ்ப்பாணத்தில் தொழில்சார் தகமைகளை வழங்கும் தலைசிறந்த நிறுவனம்!

Special Classes by: SENIOR QUALIFIED TEACHERS

**ENGLISH**
நீங்களும் ஆங்கிலம் பேசலாம்!
- English for Business ( 3 months )
- Certificate in English ( 4 months )
- Practical English ( 5 months )

அத்தனை அலகுகளுக்கும் தனித்தனியாக பயிற்சிகள்.
கணணிமூலமான விளக்கங்கள்.
எளிய புதிய அணுகுமுறையிலான விரிவுரைகள்.
மாணவர்களின் வசதிக்கேற்ப வார மற்றும் வார இறுதி நாட்களிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன!

**CIMA**
விசேட கட்டண சலுகைகளுடன்... விஜயதசமியை முன்னிட்டு
**CIMA** புதிய வகுப்புகள் ஆரம்பம்!

| Award | Examination | Results | Discount |
|---|---|---|---|
| BRONZE | G.C.E. Ordinary Level | 8 As' | 20% |
| SILVER | G.C.E. Advanced Level | 3 As' | 25% |
| GOLD | G.C.E. Ordinary Level | 8 As' | 30% |
| | G.C.E. Advanced Level | 3 As' | |


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 690 திகதி 14-10-2010

வெற்றி எண்கள்

**11 33 34 49 Q**

ஜக்பொட் பரிசு ரூ. 18,731,410/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 18,731,410/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 22 | 2,000/= | 44,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 407 | 1,000/= | 407,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 663 | 1,000/= | 663,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16121 | 60/= | 967,260/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7575 | 40/= | 303,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 189912 | 20/= | 3,798,240/= |
| | | மொத்தம் ரூ. | 6,982,500/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 700458145-3-23 |
| நுவரேலியா | 700442112-4-24 |
| காலி | 700?455301-7-17 |
| இரத்தினபுரி | 700444167-5-25 |
| அம்பாந்தோட்டை | 700443129-7-17 |
| திருகோணமலை | 700446161-8-38 |
| கொழும்பு | 700?445547-6-46 |
| பொலன்னறுவை | 700447539-7-27 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,382,500/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 19,244,710/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஒக்டோபர் 18 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

# 'கேற்வே'யின் ஆங்கிலக் கற்கைக்கு தெரிவான மாணவருக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.16

கேற்வேயின் 'ஜேன் கீல்ஸ்ஹேல்டிங்' வழங்கும் புலமைப்பரிசில் கற்கை நெறியான 'இங்லிஸ் போஃர் ரீன்ஸ்'(English for teens)க்குத் தெரிவான மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு 'உதயன்' கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

கற்கை நெறிக்கு பதிவு செய்து கருத்தரங்கில் பங்குகொள்ள அழைக்கப்பட்டுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:-

யாழ்.இந்துக்கல்லூரி:
ஜி.ஜெகஜீவன், கே.விதுரன், தி.இளமாறன், வி.சுபாகரன், சி.அனோஜன்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி:-
ச.பிரவீனா, ரா.சாரங்கா, ஜெ.நித்தியா, மோ.பகீரதி, வி.விதுசாளினி.

செங்குந்தா இந்துக்கல்லூரி:-
ஜெ.கேதுசா, மு.தட்சாணி, து.சகானா, பா.விசாகன், ஞா.கிருசாந்தன்.

பெரியபுலம் மத்திய வித்தியாலயம்:-
செ.துர்க்கேசன், க.பாமினி, ஞா.செந்தூரன், தி.திலக்ஸன், சு.நிறோஜினி.

நல்லூர் ஸ்ரேசன் சி.சி.ரி.எம். பாடசாலை:-
தெ.சஜீவா, ச.அபிஷா, ஜெ.ஹரிதரன், ர.ஜனுசாந், த.சோபிகா.

சென்.ஜேம்ஸ் ம.வித்தியாலயம்:-
ம.மயூதினி, டி.ரிமோலிண்டா, அ.சாகனா, அ.அஜித்தா, பி.நிரோசா.

கந்தர்மடம் சிவப்பிரகாச ம.வி:-
சி.லக்சனா, அ.கிருசாந்தினி, சி.விதுஜன், ஜோ.கனிஸ்டா, ஜோ.கவிநிலா.

நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை:-
பி.மேரிகனிஸ்டா, வ.நியந்தினி, அ.சுமித்தா, அ.அனோஜா, அ.பாஸ்ரீனா.

முத்துத்தம்பி ம.வி.:-
ச.யசிந்தா, கோ.விணோஜிதா, த.டினோசா, வி.தனுசியா.

நல்லூர் இந்து மகளிர்:-
ஜெ.சஞ்சீவன், பி.விதுசிகன், ர.சுலக்ஸன், யெ.டிசாந், அ.சதீஸ்குமார்.

செங்குந்தா ம.வி:-
வை.மன்மதகரன், ச.சங்கீதா, சி.தர்சிகன், ந.கீர்த்தனா, ப.தனுஜன்.

உடுவில் மகளிர் கல்லூரி:-
த.கிருஸ்ரீன் தேவஅமிர்தா, சி.தனுஜா, வி.விதுஜா, செ.விதுர்திகா, பா.மச்சாஜினி, ரா.நிசானா, வே.பொன்மகள், கு.காறன்யா, உ.தட்சயா, ச.பிரணவி, ஜெ.சலோமி.

மாணவர்கள் அனைவரும் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் சமுகமளிக்குமாறும் மேலதிக விவரங்கள் கருத்தரங்கில் விவரிக்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-6)

## தந்துதவவும்

ஆறுகால் மடத்துக்கும் கோம்பயன்மணல் மயானத்துக்கும் இடையில் மூக்குக் கண்ணாடி ஒன்று (கறுப்புக் கலர் நாடா போடப்பட்டது) பெட்டியுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
சாமியார், ஆறுகால்மடம்
தொ.பே:- 0772189721, 0215682510


## டோல்பின் வான் விற்பனைக்குண்டு

மிகவும் நல்ல நிலையில் உள்ள 58-XXXX Power Steering, A/C Alloy Wheels, New Tyres, Cut Glass 113 வெள்ளைநிறம், 1992 மொடல் 1996 இல் பதிவு செய்யப்பட்ட வான் விற்பனைக் குண்டு.

சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:- 0776157326 (104725)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் விலங்கியல் ஆசிரியரும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக இருந்தவருமான

**அமரர் சொர்ணலிங்கம் பாலகிருஸ்ணன்**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரி விப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

ஆசிரியர் கழகம்,
**யா/கொக்குவில்இந்துக்கல்லூரி.**

## பிரார்த்திக்கின்றோம்



01-10-2010 இல் வழக்கம்பரை சிவபூமியில் சிவபதமடைந்த வித்தகன், தெய்வக் கவிமாமணி விஸ்வப் பிரம்மஸ்ரீ தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் அவர்களின் ஆன்மா சாந்தியடைய 16 ஆம் நாள் நினைவான இன்று இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

த.பரராசசிங்கம், செயலாளர்.
காமாட்சி அம்பாள் இந்து பரிபாலனசபை, நீர்வேலி.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. இளங்கோவின் அன்பு மாமனார்

**அமரர் வேலுப்பிள்ளை வரதராசா**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைச் செய்வதோடு அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி. (104726)

# ஜனஜய லொத்தர்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வாரம் **168** சீட்டிழுப்புத் திகதி 14.10.2010

வெற்றி இலக்கங்கள்: **02 23 45 62** சுப்பர் இலக்கம்: **08**

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 6,366,560/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 62908 | ரூ. 20/= | ரூ. 12,58,160/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 5768 | ரூ. 40/= | ரூ. 2,30,720/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 4891 | ரூ. 100/= | ரூ. 4,89,100/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 455 | ரூ. 200/= | ரூ. 91,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 121 | ரூ. 1,500/= | ரூ. 1,81,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 11 | ரூ. 3,000/= | ரூ. 33,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 6,366,560/= | |
| மொத்த எண்ணிக்கை | 74154 | | ரூ. 2,283,480/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 6,556,670/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

## 2 ஆம் ஆண்டு நினைவலையில்...



அமரர்

**எஸ். அமலதாஸ்**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19-07-1966 | 16-10-2008 |

இன்ப வாழ்வில் இதயம் மகிழ
துன்ப சுவடே தெரியாமல்
தூய உள்ளத்துடன் வாழ்ந்தாயே
உம்மைப் பிரிந்து தவிக்கின்றோம்
உமது உடல் தான் மறைந்தது
உருவம் மறைய வில்லையே அமலா
நெஞ்சை விட்டு நீங்காமல் என்றும்
உள்ளத்தில் நிறைந்திருக்கின்றாய் அமலா
பசி என்று உணவு எடுக்கச் சென்ற உன்னை
பலி தீர்த்தனர் ஏனோ?

பழைய பூங்கா வீதி,
கண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

மனைவி (அன்னை)
குடும்பத்தினர்.

(104700)

# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 839 திகதி: 14.10.2010

ஆங்கில எழுத்து: **B** வெற்றி இலக்கங்கள்: **12 20 52 55** போனஸ் இல.: **39**

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 21,069,400.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 317 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15280 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 213799 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 31685 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. **8,471,680.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை **21,438,720.50**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை முதல் படத்திலும், முன்னாள் அதிபர் எஸ்.ஜயரட்ணத்தின் உருவச் சிலையைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி திரைநீக்கம் செய்து வைப்பதை இரண்டாவது படத்திலும், 'மகாஜனன்' நூற்றாண்டு மலரை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்க கல்லூரி பழைய மாணவர் 'மகாஜனன்' சின்னத்தம்பி ஸ்ரீலஜயன் பெற்றுகொள்வதை மூன்றாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# மயிலிட்டி றோ.க.த.க. மாணவர்கள் அனைவருக்கும் கற்றல் உபகரணங்கள்

## 'யாழ். எய்ட்' நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஒக். 16

மயிலிட்டி றோ.க.த.க பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு 'யாழ்.எய்ட்' நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்களும் காலணிகளும் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட இந்த 'யாழ். எய்ட்' நிறுவனம், யாழ். மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உரிய உதவிகளைச் செய்துவருகிறது.

இதன் ஒரு கட்டமாக ஆனைக்கோட்டையில் இயங்கிவரும் மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள மாணவர்கள் அனைவருக்கும் அண்மையில் இந் நிறுவனம் கற்றல் உபகரணங்களை வழங்கியது.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் திருமதி எல்.அருளையா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பாதணிகளை வழங்கினர். (ஒ-16)

# பனம் விதைகளை நடும் பயனாளிகளுக்கு. உலக உணவு நிறுவனத்தின் பொதிகள்

## பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.16

ஐந்து லட்சம் பனம் விதைகள் நடும் திட்டம் தற்போது யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பிரகாரம் 21 குழிகளில் பனம் விதைகளை நடும் பயனாளிகளுக்கு உலக உணவு ஸ்தாபனத்தின் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் இந்தத் திட்டம் இடம்பெறவுள்ளது. இதற்கென உலக உணவு ஸ்தாபனம் 100 மெற்றிக்தொன் உலர் உணவை பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் பனை வளத்தை விருத்தி செய்யும் நோக்கில் அமுல்படுத்தப்பட்டு வரும் இந்த பனம் விதை நடுகைத் திட்டத்துக்கு என பல லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாகப் பனம் விதை நடுகை பண்ணப்பட்டு வருகிறது. பனம் விதை நடுகைக்கு என யாழ்.மாவட்டத்தில் பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளது. பிரதேச செயலகங்கள் ஊடாக இந்தப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பனம் விதைகள் நடப்பட்டு வருகின்றன.

ஒரு குழியில் இரண்டு பனம் விதைகள் என நடப்பட்டு வருகின்றன. 21 குழிகளில் பனம் விதை நடும் பயனாளி ஒருவருக்கு உலக உணவு ஸ்தாபனம் உலர் உணவுப் பொதிகளை விரைவில் வழங்கவுள்ளது. அது பிரதேச செயலகங்கள் ஊடாகவே வழங்கப்படவுள்ளது.

இதேவேளை பனம் சார் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (த-14-22)




# சிவபூமி பாடசாலை சிறார்களின் ஓவியம் கனடா முத்திரைகளில் இடம்பெற வாய்ப்பு

## செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக்.16

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலைச் சிறார்கள் வரைந்த ஓவியங்கள் கனடா நாட்டு முத்திரைகளில் இடம்பெறலாம் என சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் வாணி விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய ஆறு.திருமுருகன் மேலும் கூறியவை வருமாறு:

கனடா, கியூடெக் மாநிலத்தில் நடைபெற்ற சிறுவர்களின் ஓவியக் கண்காட்சியில் மேற்படி பாடசாலைச் சிறுவர்களின் ஆக்கங்களும் இடம்பெற்றிருந்தன. அவற்றில் மூன்று வரைந்த ஓவியங்கள் பற்றிய முத்திரைப் போட்டிகளில் தெரிவாகியுள்ளன. உலகம் முழுவதும் மனவலுக்குறைந்த பிள்ளைகள் பற்றிய சிந்தனை இப்போது வலுப்பெற்று வருகின்றது.

அமெரிக்காவின் ஹவாய் ஆதீனத்தில் இருந்து சிவபூமி சிறுவர் பாடசாலை. முதியோர் இல்லம் குறித்த பல்வேறு விடயங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. தொண்டுநாதசுவாமிகளின் இந்தப் பணியில் எமது பாடசாலைச் சிறுவர்கள் குறித்த விடயங்கள் பல்வேறு நாடுகளின் கவனத்தையும் ஈர்க்கத் தொடங்கியுள்ளன. மனவலு குறைந்த பிள்ளைகளுக்கான தொழிற் பயிற்சிகளும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை பாடசாலைக்கு அருகில் உள்ள காணி கிடைத்துள்ளது. எனவே தொழிற் பயிற்சிக்கான இயந்திரங்கள் எடுத்துவர வேண்டும். ஆனால் அவற்றை வைப்பதற்குப் போதிய இடவசதிகள் இல்லாமல் இருக்கின்றது.

இந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் நம்பிக்கை நிறைந்ததாக அமைய வேண்டும். எனவே அதற்குப் பெற்றோர்கள் உறுதுணையாக இருத்தல் அவசியம். இவர்களின் நலனில் அக்கறை கொண்ட பலர் இருக்கின்றார்கள். சிவபூமியின் இந்தப் பணி என்றும் உயர்ந்ததாக விளங்கத் தமது அர்ப்பணிப்புடனான சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் இறைவனின் அருளுக்குரியவர்கள்- என்றார் அவர்.

நிகழ்வில் கலாநிதி எஸ். மிகுந்தன், காரைநகர் உதவி அரச அதிபர் எஸ்.ஜெயசீலன், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றுள்ளதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த -201-7)

# இளவாலை கன்னியர் மாணவிகள் மாகாண மட்டத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக்.16



எமறென்சியானா



மடுஷனா

வடமாகாணக்கல்வித்திணைக்களத்தால் ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட வாய்ப்பாடு மனனப் போட்டி மற்றும் கோலப் போட்டி ஆகியவற்றில் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவிகள் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளனர்.

வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் வாய்ப்பாடு மனனப் போட்டியில் எமறென் சியானா மதுரநாயகம் முதலிடத்தையும், கோலப் போட்டியில் மடு[illegible] பியன்வெனு முதலிடத்தையும் பெற்றுள்ளனர். [illegible]

## மணல் எடுக்க அனுமதியில்லை; வீட்டுத்திட்டம் அரைகுறையில்

யாழ்ப்பாணம்,ஒக்.16

நெடுந்தீவில் கட்டப்படும் வீட்டுத்திட்டத்திற்கு மணல் எடுப்பதற்கான அனுமதி இன்மையால் வீடுகளைக் கட்டி முடிக்க முடியாதுள்ளதாக வீட்டுத்திட்டத்தை அமைக்கும் நிறுவனங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

இந்த வீட்டுத்திட்டத்தின் கீழ் இன்னமும் 242 வீடுகள் கட்டி முடிக்க முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (6-7)

## சாவகச்சேரி பொலிஸாரின் நடமாடும் சேவை இன்று

தென்மராட்சி,ஒக்.16

சாவகச்சேரி பொலிஸாரின் நடமாடும்சேவை இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

தவறவிடப்பட்ட அடையாள அட்டை, கடவுச்சீட்டு, வாகன அனுமதிப்பத்திரம் ஆகியவற்றுக்குப் பொலிஸ் அறிக்கை வழங்கல், புதிய முறைப்பாடுகளைப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளல், வறிய குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கல், தென்னங்கன்றுகள் வழங்கல், இரத்ததானம் வழங்கல் ஆகியவை மேற்படி நடமாடும் சேவையில் இடம்பெறவுள்ளன.

அத்துடன் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆகியவை இடம்பெறுமென தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (207)

# மலசலகூடங்களை அமைக்க சமூக சேவைத் திணைக்களம் உதவி

தென்மராட்சி, ஒக்.16

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐந்து மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளனர்.



பயனாளி ஒருவருக்கு தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் புதிதாக அமைக்கப்பட்ட மலசலகூடத்தைஸையளிப்பதையும் அருகில் யாழ்.மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஆ.ஞானவேல், தென்மராட்சிப் பிரதேச சமூக சேவைகள் அலுவலர் க.வரதபாஸ்கரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

விதவைகள் மற்றும் மாற்று ஆற்றலுடைய ஐந்து பேருக் குத் தலா ஒரு லட்சம் ரூபா செலவில் மலசலகூடங் களை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

மலசல கூடம் அமைத்துக் கொடுக்கப்பட் டுள்ள மாற்று ஆற் றலுடையோரின் விவரம் வருமாறு:

சிவஞான மூர்த்தி இராசம்மா (மந்துவில் வடக்கு), வடிவேலு அருட்செல்வி (மீசாலை வடக்கு), வரதராசா பர மேஸ்வரி (மீசாலை வடக்கு), இரத்தினம் கந்தசாமி (கச்சாய் தெற்கு), சிவபாலசுந்தரம் குணமணி (அல்லாரை வடக்கு) ஆகியோருக்கே மலசலகூடங்கள் அமைத்துக் கையளிக்கப்பட்டன. (த-201-207)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு எப்போது கிடைக்கும்?

யாழ்ப்பாணம், ஒக்.16

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டுத் தொகை உயிருடன் இருக்கும் காலத்தில் கிடைக்குமா? என பாதிக்கப்பட்ட 'உ' பங்கீட்டு அட்டையாளர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களால் தமது சொத்துக்களை இழந்த மக்கள் மீள் குடியமர்வின் பின்னர் உரிய படிவங்கள் மூலம் நட்டஈடு கோரி யாழ்.புனர்வாழ்வுப் பிரிவுக்குக் கடிதம் அனுப்பியும் மாதக் கணக்கில் பதில் கிடைக்காமல் காத்திருப்பதாகத் தெரிவித்தனர்.

2002ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியேறிய வேளையில் 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருந்தோர் நட்டஈட்டு விண்ணப்பங்களைப் பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பங்களை அனுப்பியோருக்குப் புனர்வாழ்வுப் பிரிவிலிருந்து இலக்கம் குறித்த கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

பாதிப்புத் தொகை விரைவில் கிடைக்குமென நம்பிய 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் கடந்த எட்டு வருடங்களாக தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை நிவர்த்தி செய்யமுடியாமல் காத்திருக்கின்றனர்.

பாதிப்பு ஏற்பட்டு நட்டஈடு கிடைக்காமல் காத்திருக்கும் 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு விடிவு கிடைக்குமா எனவும் பாதிக்கப்பட்டோர் விசனம் தெரிவித்தனர். (த-201-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி சுத்தம் செய்து 1Kg 500/= விற்பனைக்கு. அத்துடன் அல்சேசன் நாய்க்குட்டி விற்பனைக் குண்டு. தொடர்பு: தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## BARATHY

சித்தன்கேணி

சிறந்த பேறுபேறுகளை பெற்ற எம்மாணவர்களை வாழ்த்தி

விஜயதசமி நன்னாளில் புதிய வகுப்புகள்

தரம் 5
புலமைப்பரிசில் வகுப்பு

**ஆசிரியர் : திரு. கலாமோகன் (B.A. Dip in Tech)**

ஆரம்பம் : 17.10.2010
ஞாயிறு 4.30 p.m
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி/571943)

## சிறுவர்களுக்கான சிங்களம்

ஆரம்பம் : 17.10.2010
விஜயதசமி அன்று
(சனி/ஞாயிறு நாள்களில்)
காலை 8.15 - 9.15, 9.15 -10.15

G.C.E. O/L Paper Class
(இரண்டாம் மொழி)
17.10.2010 ஞாயிறு அன்று
மதியம் 12.00 - பி.ப. 2 மணிவரை
(ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெறும்)

சிங்கள வகுப்பு
வேலைசெய்பவர்களுக்கு மற்றும் மாணவர்களுக்கான வகுப்புகள் கிழமை நாள்களிலும் சனி/ஞாயிறு நாள்களிலும் நடைபெறும்.

ஸ்ரீ மாஸ்டர்
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
இல. 41, றக்கா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 0777033729

(104732)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மக்கள் வங்கியின் அன்பளிப்புப் பொருள்கள்

தென்மராட்சி,ஒக். 16

மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையினர் இன்று சனிக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி பொருள் களை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

2 குளிர்சாதனப் பெட்டிகள், 15 மின்விசிறிகள், 4 வாங்குகள் ஆகியவற்றை வழங்கவுள்ளனர்.

வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் இவற்றை வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிப்பார் என்று சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார்.(ஒ-207)

## உளமார வாழ்த்துகின்றோம்



கடந்த (06.10.2010) அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (தொல்லியல் சிறப்புக்கலை) பட்டத்தைப் பெற்ற

**திருமதி பிரசன்னா நித்யா**
{(B.A.) Hons}

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பெரியப்பா, பெரியம்மா, அக்கா, தம்பிமார், அம்மம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை.

மடத்தடிச் சந்தி,
கல்வயல்,
சாவகச்சேரி.

(104731)

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



யா/நவக்கிரி அ.மி.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி 16.10.2010 இல் மணிவிழாக் காணும் நாயகன்

**திரு.சின்னத்தம்பி பகவத்சிங்கம்**

இலங்கை அதிபர் சேவை 1
(Special Trained-Social Study)
அவர்களை நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

கல்விப்பணியில்
ஆசிரியராக 1979.01.08-1991.05.30
அதிபராக.1991.06.01.-2010.10.15

அதிபர் சங்கம், கோப்பாய்க் கோட்டம்.

## இளவாலை கன்னியர் ம.வி. பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஒக். 16

இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தின் வருடாந் தப் பரிசளிப்பு விழா அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது

இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறைச் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார். (த-15)

## வாழ்த்துகின்றோம்



**திரு.ஆ.இராஜேந்திரம் (SLEAS-I)**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
எமது வலயத்தில் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளராக சிறப்பாக கடமையாற்றி வலிகாமம் கல்வி வலயத்திற்கு வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்றுச்செல்லும்

திரு.ஆ.இராஜேந்திரம் (SLEAS-I) அவர்களின் பணி சிறக்கவும் மேலும் பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும் சக உத்தியோகத்தர்களும்.
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மணற்காடு றோ.க.த.க.பாடசாலை மாணவி பேபிசுதாசன்-கொலின்கலிஸ்ரா தம்பதிகளின் செல்வப்புதல்வி

**மேரிடியூலினி**

அவர்கள் 2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளி களைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 101 ஆவது இடத்தினையும் மருதங்கேணிக் கோட் டத்தில் முதல் இடத்தையும் பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாகவும் சித்தி யடைந்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடை கின்றோம். மேலும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்து வதுடன் இவருக்கு கல்வி கற்பித்த ஆசி ரியர்களான முன்னாள் அதிபர் குருகுல லிங்கம் தற்போதைய அதிபர் பொன்னம் பலம், வகுப்பு ஆசிரியை திருமதி மரிய றூபன்,குடத்தனை நியூட்டன் அக்கடமி ஆசிரியைகளான கேமா, கிருபா அனைவ ருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அன்ராம்மா, அன்ரா, மாமா, அண்ணாமார், தம்பி, தங்கை.

மணற்காடு, குடத்தனை.

With the Best Compliments From:

# ESWARRAN
*Traders & Transport Service*



ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
அதிசொகுசு பஸ்சேவை
யாழ்ப்பாணம் ⟺ கொழும்பு

★தீபத் திருநாளை முன்னிட்டு 10.11.2010 ஆம் திகதிவரை விசேட கட்டணக்குறைப்பு
★தனிவழிக்கட்டணம்-1000/- மட்டும் இருவழிக் கட்டணம்-1900/-
★முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பொதிகள் சேவைக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
★உள்ளூர் விவசாயிகளின் நன்மைகருதி உள்ளூர் உற்பத்திப்பொருள்களை தம்புள்ள, புத்தளம் மற்றும் கொழும்பு கொண்டு செல்வதற்கு 1 கிலோவுக்கு 1.50 மட்டுமே அறவிடப்படும்.
★மேலும் உள்ளூர் விவசாய உற்பத்திப்பொருள்களை வெளிமாவட்டங்களில் விற்பனை செய்வதற்கு விவசாயிகள் எம்முடன் தொடர்புகொண்டால் அதற்கான ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.




இல.115, 69,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222813/2224317/0773865439

இல.01, கரடிப்போக்கு,
கிளிநொச்சி. (செலான் வங்கிக்கிளை அருகில்)
தொ.பே: 0212285306
பக்ஸ்: 0212285307

இல.201B, டாம் வீதி,
கொழும்பு-12
தொ.பே: 0112433889
பக்ஸ்: 0112435247

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகளை அபகரிக்க முண்டியடிக்கும் நிலச் சொந்தக்காரர்கள்

கிளிநொச்சி,ஒக்.16

நெல்விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படும் 4 ஆயிரம் ரூபாவையும் விதை நெல்லையும் அபகரித்துச் செல்ல நில உரிமையாளர்கள் முண்டியடிக்கின்றனர்.

காலம் காலமாக விவசாயத்தில் ஈடுபட்டு வந்த மீள்குடியேறிய விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபா வீதம் முதல் இரண்டு ஏக்கர்களுக்கு மட்டும் வழங்கவும் பயிரிடும் எல்லா வயல்களுக்கும் விதை நெல்லை வழங்கவும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க ஆய்வுகள் நிறைவு பெற்றுள்ள என அரசாங்க செயலகம் அறிவித்துள்ளது.

ஆனால் கிளிநொச்சியில் உள்ள பெருமளவிலான காணிகளின் உரிமையாளர்கள் வெளி மாவட்டங்களில் வசிக்கின்றனர்.

அரசாங்கத்தின் இந்த அறிவித்தல் வெளிப்பட்டவுடன் இந்த நில உரிமையாளர்கள் நேரடியாக வந்து இந்த உதவு தொகையைப் பெற முயற்சி செய்கின்றனர். இதனால் அக்காணிகளில் காலம் காலமாக விவசாயம் செய்து வந்த விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த உதவு தொகை இரண்டு ஏக்கருக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தமது காணி களை மனைவி, மக்கள் மற்றும் உறவினர்களின் பெயர்களுக்குப் பிரித்து எழுதிக் கொண்டு குறுக்கு வழியில் உதவியைப் பெற நில உடமையாளர்கள் முயற்சிக்கிறனர் எனவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இதேவேளை பெருமளவில் இலவசமாகக் கிடைக்கும் விதை நெல்லை கிளிநொச்சிக்கு வெளியே கொண்டு சென்று விற்பதாகவும் அரிசியாக்கி உணவுக்காகப் பயன்படுத்துவதாகவும் கூறுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளரிடம் கேட்ட போது வெளியில் இவ்வாறு கூறப்பட்டாலும் நேரடியாக எவ்விதமான புகார்களும் கிடைக்கவில்லை என்றார். இவ்வுதவித் தொகை இங்கு காலம் காலமாக விவசாயம் செய்து கொண்டு பிரதேச விவசாய கழகங்களில் அங்கத்தினர்களாகப் பதிவு செய்துள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இங்கு விவசாயம் செய்பவர்கள் எல்லோருமே விவசாய கழகங்களில் அங்கத்தினர்களாகவே இருக்கின்றனர்.

கமநல சேவை நிலையங்களில் உரம், விதை, மருந்து வகைகளையும் பெற்று வந்துள்ளனர். இவ்வாறான அடிப்படை தகைமைகளைப் பரிசீலித்தே உதவு தொகைகளை வழங்க திட்டமிட்டுள்ளோம். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள உண்மையான விவசாயிகளுக்கே இந்த உதவிகள் கிடைக்கும். எவரும் அச்சப்பட தேவையில்லை, என்று கூறினார். (த)



இயக்கச்சி அ.த.க. பாடசாலை மீள்குடியேற்றத்தின் பின்னர் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டபோது பளைக் கல்விக் கோட்ட அதிகாரி எஸ். ஆனந்தசிவம் மங்கல விளக்கு ஏற்றுவதையும், கேணல் வர்ணகுல, பாடசாலை அதிபர் செல்வி என்.நகுலேஸ்வரி ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: கண்டாவளை நிருபர்)




# சர்வமதப் பேரவை மன்னாரில் அமைப்பு

மன்னார்,ஒக்.16

மன்னாரில் சர்வ மதப் பேரவையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மன்னாரின் சமாதானத்திற்கும் மீளிணக்கத்திற்குமான வளங்கள் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை தேசிய சமாதானப் பேரவை இதனை அண்மையில் மன்னாரில் அமைத்துள்ளது.

இந்த நிகழ்வில் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா, மன்னார் மறைமாவட்ட ஆயர் அருட் கலாநிதி இராயப்பு யோசேப் ஆகியோர் விசேட விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இலங்கையில் சர்வமத ஒத்துழைப்பு, யுத்தத்தினால் ஏற்பட்ட துன்பங்களிலிருந்து விடுதலை அளித்தல், பன்மைத்துவ இனங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துதல், போரினால் பாதிப்படைந்த பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு மனிதாபிமானத் தீர்வினை வழங்குதல் என்பனவே இந்தப் பேரவையின் குறிக்கோள்களாக உள்ளன. (க-80)

# மீள்குடியேறிய பச்சிலைப்பள்ளி மக்களை எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்து

கிளிநொச்சி,ஒக்.16

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேறிய மக்களை மிதிவெடிகள் மற்றும் நிலத்தில் காணப்படும் மர்மப் பொருள்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பளை நகரம், புலோப்பளை கிழக்கு, புலோப்பளை, முள்ளியடி, தம்பகாமம்,தர்மக்கேணி, சோரன்பற்று , மாசார், இயக்கச்சி ஆகிய கிராமங்களில் இதுவரை மக்கள் மீள்குடியேறியுள்ளனர். இவர்களின் கண்களுக்கு ஏதாவது மர்மப் பொருள்கள் தென்பட்டால் அவற்றைக் கைகளால் எடுக்காமல் உடனடியாக இதுபற்றி பிரதேச செயலகம் அல்லது பிரதேச சபைக்கு அறிவிக்குமாறு இவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். மேலும் பொது மக்களால் சேகரிக்கப்படும் குப்பைகளை எரிக்காமல் வெட்டிப் புதைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்கள் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் அவதானமாக இருப்பது அவசியமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-313-311)

# பிறப்பு, இறப்பு,விவாகப் பதிவுகள் முல்லை மாவட்டத்தில் கணனி மயம்

முல்லைத்தீவு,ஒக்.16

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளைக் கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற்றுவருகின்றன.

இரண்டு வாரங்களின் பின்னர் பொதுமக்கள் கணனிப்பிரதியினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கைகள் கடந்த இரண்டு வாரங்களாகத் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

பொது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இத்தகைய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்னும் இரண்டு வாரங்களில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளின் கணனிப்பிரதிகளைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க-9)

# மாகாண மட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் கிளிநொச்சி மாணவர்களுக்கு 4 இடங்கள்

கிளிநொச்சி,ஒக்.16

வடமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான ஆக்கத்திறன் போட்டியில் கிளிநொச்சி வலயப் பாடசாலைகள் நான்கு இடங்களை வென்றுள்ளன.

கடந்த 9,10 ஆம் திகதிகளில் இந்தப் போட்டிகள் வவுனியாவில் நடைபெற்றன. மாகாண மட்டத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் கிளிநொச்சி மாணவர்கள் நான்கு இடங்களை வென்றுள்ளனர்.

**வாய்ப்பாடு மனனம் செய்தல்**

**தரம் -4**

முதலாமிடம் - க.தாருஷா (வட்டக்கச்சி ம.வி).

**தரம் -5**

முதலாமிடம் - சி.ரேணுஜன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

**கோலம் போடுதல்**

**தரம் -4**

இரண்டாமிடம் - யோ.சிந்துஜா (தருமபுரம் இல-01 அ.த.க.பாடசாலை).

**தரம் -1**

மூன்றாமிடம் - சி.நிதர்சிகா (கனகபுரம் ம.வி). (க-405)

# கிளிநொச்சியில் வீதிக்குறியீடுகள் இல்லை விபத்துக்கள் ஏற்பட நிறைய வாய்ப்பு

கிளிநொச்சி,ஒக்.16

கிளிநொச்சி வீதிகளில் வீதிக் குறியீடுகள் பொருத்தப்படாமையால் பயணிகள் பாதிப்புக்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

ஏ-9 வீதியில் கூட இன்னமும் வீதிக் குறியீடுகள் பொருத்தப்படவில்லை. மக்கள் மீள்குடியேறிப் பத்து மாதங்கள் கடந்த நிலையிலும் உரியவர்கள் இந்த விடயத்தில் ஏனோ அக்கறை செலுத்தவில்லை.

தென்பகுதியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் இப்பிரதான வீதியால் தினமும் பல நூற்றுக் கணக்கான வாகனங்களில் மக்கள் பயணிக்கின்றனர். ஆனால் இவர்கள் இப்பகுதியில் உள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள், ஆபத்தை விளைவிக்கும் இடங்கள் என்பனவற்றை அறிந்திருக்கவில்லை. இதனால் வீதிகளில் விபத்துக்கள் ஏற்பட நிறைய வாய்ப்புக்கள் உண்டு. உரியவவர்களின் துரித நடவடிக்கையினை மக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-405)

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,ஒக். 16

ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட முடிவுகள் வருமாறு:-

**சிறுவர் நாடகம்**

தருமபுரம் இல 01- அ.த.க. பாடசாலை, கனகபுரம் ம.வி, ஞானிமடம் அ.த.க.பாடசாலை.

**விரைவு கணிதப் போட்டி**

**தரம் - 2**

ஜோ.வினுசன் (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை), ஜெ.திவானுஜன் (பளை மத்திய கல்லூரி), பா.அபிநிஷா (பளை மத்தியகல்லூரி)

**தரம் - 3**

இ.சுதர்சனா (தருமக்கேணி அ.த.க.பா), பா.சிநேகா (பளை மத்திய கல்லூரி),தெ.நிகோபன் (பளை மத்திய கல்லூரி).

**தரம் - 4**

பா.சிவேகா - (தருமபுரம் 01- அ.த.க. பாடசாலை), பா.சதுஸ்டிகன் (பரந்தன் இந்து ம.வி), ச.சதுர்சிகன் (பிரமந்தனாறு ம.வி)

**தரம் - 5**

சி.ரேணுஜன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), யோ.தர்சிகன் (தருமபுரம் இல 1 - அ.த.க.பா), வி.மிதுசிகா (புனித திரேசா பெண்கள் கல்லூரி)

**வாய்ப்பாடு மனனப் போட்டி**

**தரம் - 3**

வ.மேரி சுதர்சினி (சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), ஜீ.சுகீர்தன் (ஸ்கந்தபுரம் இல 1- அ.த.க.பா),ஜீ.சுகிர்தன் -(தருமபுரம் இல 1- அ.த.க.பா)

**தரம் - 4**

க.தாருகா (வட்டக்கச்சி ம.வி), கி.ஜஸ்வரியா (கிராஞ்சி அ.த.க.பா),த.அனுபரன் (தருமபுரம் இல 1- அ.த.க.பா)

**தரம் - 5**

சி.ரேணுஜன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி),ஜே.அனுஷா (முரசுமோட்டை முருகானந்த ம.வி),ர.ரஜீபா (கிராஞ்சி அ.த.க.பா)

**திருக்குறள் மனனப் போட்டி**

**தரம் - 1.**

ச.மதியரசி (கிளிநொச்சி ம.வி), இ.தனஞ்செயன் (பரந்தன் இந்து ம.வி), சி.தேநிலா (தருமக்கேணி)

**தரம் - 2**

க.தீபிகா (பளை மத்திய கல்லூரி) ,டி.துவாரகா (கரியாலை நாகபடு வான் இல-3 அ.த.க.பா), யோ.யதுலயா (முரசுமோட்டை முருகானந்த ம.வி)

**தரம்- 3**

து.சங்கவி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), பிரிந்தா (ஜெயபுரம் ம.வி), வே.திசோபிகா (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா)

**தரம் - 4**

ர.மதுஷா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), யே.சுஜீபா (பளை மத்திய கல்லூரி), சு.ஜதுர்சிகா (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா)

**தரம் - 5**

ச.சஜிந்தா (ஞானிமடம் அ.த.க.பா), ஸ்ரீ.சஜித்தா (பளை மத்திய கல்லூரி),சு.கம்சா (முரசுமோட்டை முருகானந்தா ம.வி)

**கோலப்போட்டி**

**தரம் - 1**

சி.நிதர்சிகா (கனகபுரம் ம.வி), [illegible] (பரந்தன் இந்து ம.வி), [illegible] (தருமக்கேணி அ.த.க.பா)

**தரம் - 2**

மு.கோலப்பிரியன் (ஜெயபுரம் ம.வி), தி.அபிராமி (பளை மத்திய கல்லூரி), ச.சிலோனியா (புனித பற்றிமா றோ.க.த.க.பா)

**தரம் - 3**

ஜீ.ஆரணி (மாசார் அ.த.க.பா), உ.ஹரிராம் (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா),ஜெ.பூந்தமிழ் (பரந்தன் இந்து ம.வி)

**தரம் -4**

யோ.சிந்துஜா (தருமபுரம் இல-1 அ.த.க.பா),ஜீ.டிலக்சனா (புனித பற்றிமா றோ. க.த.க. பா), கோ.நிலுக்ஷன் (பளை றோ.க.த.க.பா),

**தரம் - 5**

ஜே. பவித்திரா (தருமபுரம் இல-1 அ.த.க.பா),மு.நர்மதா (ஆனைவிழுந்தான்குளம் அ.த.க.பா), த.மதுசியா (பளை றோ.க.த.க.பா)

இந்தப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (6-405)

# சனசமூக நிலைய புனரமைப்புக்கு 6 லட்சம் ரூபா நிதி

யாழ்ப்பாணம்,ஒக்.16

பெரியபளைப் பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக கமநெகும திட்டத்தின் கீழ் 6 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

போரின்போது இந்தப் பிரதேசத்திலிருந்த அநேகமான கட்டடங்கள் அழிவடைந்துள்ளன. இவற்றுள் பெரியபளை சனசமூக நிலையக்கட்டடமும் மோசமான பாதிப்புக்களைச் சந்தித்தது. மீளக் குடியேறிய மக்களின் தேவை கருதி இதன் புனரமைப்பு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன.

கிடைக்கப்பெற்ற இந்த நிதியின் மூலம் அழிவடைந்த சனசமூக நிலையக் கட்டடம் புனரமைக்கப்பட்டதோடு தளபாட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சன சமூக நிலையத்திற்குரிய மலசலகூடம், கிணறு என்பனவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

தற்போது புதுப்பொலிவுடன் மக்களின் பாவனைக்காக இந்தச் சனசமூக நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (க-313-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாவற்றிலிருந்தும் தப்பித்துக்கொள்ள தற்கொலைதான் ஒரேவழியா?

தற்கொலை மிகப்பழமையான ஒன்று. ஒவ்வோர் நாகரிகத்திற்கும் தகுந்த மாதிரி தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன. பழமையான கிரேக்க ரோம நாகரிகங்களில் இம்மாதிரியான தற்கொலைகள் கௌரவமான ஒன்றாகக் கருதப்பட்டுள்ளது. நமது சங்கப்பாடல் ஒன்றில் வடக்கிலிருந்து உயிர்துறத்தல் பற்றிக் கூறப்படுகிறது. இதுவும் கூட ஒரு வகையில் தற்கொலையே. இம்மாதிரி உலகெங்கும் தற்கொலை பரவலான ஒரு விடயம்.

17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சீர்திருத்த எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நூல்களில் தற்கொலை கடவுளுக்கும் சமூகத்துக்கும் விரோதமானது என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் இச் செயல்களே உளவியல் நிபுணர்களை இத்துறை தொடர்பாக ஆராய்ச்சியில் ஈடுபட வைத்தது.

தற்கொலை என்பது மனப்பான்மை, வயது, இனம், வேலை, மதம் மற்றும் சமூக அந்தஸ்தைக் கடந்த ஒன்று. அதிகமான தற்கொலைகள் 25 - 34 வயதிற்குள்ளேயே நடைபெறுகிறது. இதில் வருத்தப்பட வேண்டிய செய்தி என்னவென்றால் 5 - 14 வயதில் உள்ளவர்கள் கூட தற்கொலைக்கு முயல்வதுதான். கத்தியால் குத்திக்கொள்வது, தீயில் விழுவது, தூக்க மாத்திரைகளைச் சாப்பிடுவது. மற்றும் உயரமான இடங்களில் இருந்து குதிப்பது போன்ற செயல்களில் குழந்தைகளும் ஈடுபடுகின்றனர். பொதுவாக அவர்களுடைய மனநிலையை ஆராய்ந்தால் தற்கொலை முயற்சிக்கான காரணங்கள் தெரியவரும்.

Dr.க.கஜவிந்தன்,
உளவியல் விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

01. நம்பிக்கையின்மையிலிருந்து விடுபடுவதாக நினைத்தல்.
02. தாக்குப்பிடிக்க முடியாத சூழ் நிலையில் இருந்து தப்பிக்க நினைத்தல்.
03. தான் விரும்புபவர்களின் கவனத்தை தன்மீது ஈர்க்க நினைப்பது.
04. மற்றொருவருக்காக தான் தண்டனை அனுபவித்துக் கொள்வதாக நினைத்தல்.
05. தண்டனையில் இருந்து தப்பிக்கக் கருதுதல்.
06. தான் மற்றவருக்கு துன்பமாக இருப்பதாகக் கருதுதல்
07. தாளமுடியாத நோய்க்கொடுமை.
08. தியாகி என்ற பட்டத்தைப் பெற முயற்சித்தல்.
09. மற்றவர் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துதல்.
10. நடை முறைக்கு ஒத்துவராத கருத்துக்களைக் கொண்டு இருத்தல்.



## தங்கள் மீதே நம்பிக்கையற்றவர்களே தற்கொலை முயற்சிகளில் இறங்குகின்றனர்

என்பன போன்ற விடயங்களே பல தற்கொலைகளுக்கு பின்னணி ஊக்கிகளாக இருந்துள்ளன.

உளவியல் ஆராய்ச்சியாளர்கள் குழு தற்கொலைக்கான மரபுக் கூறுகள், சமூக, பொருளாதார மனோதத்துவ சுற்றுப்புறச் சூழ்நிலைக் காரணிகள் என்பவற்றை இன்றும் ஆராய்ந்து வருகிறது.

உளவியல் முன்னதாக ஒரு வரைமுறை வைத்துக்கொண்டே மனிதர்கள் செயற்படுகின்றனர். அந்த வரைமுறையை விட்டு மீறும் போதுதற்கொலை செய்து கொள்கின்றனர் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். எனினும் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளே மனிதனைத் தற்கொலைக்கு துண்டுகின்றன எனச் சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றமே தற்கொலைக்கு காரணம் என்று உடற் கூற்றியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்கொலைக்கு முயற்சிப்பவர்கள் அனைவருமே அதில் வெற்றி பெறுவதில்லை. ஏனென்றால் பலர் மற்றவர் கவனத்தை ஈர்ப்பதற்கே அவ்வாறு செய்கின்றனர். ஆனால் சில பேர் மூளை பாதிக்கப்படுதல் போன்றதுன்பங்களுக்கு ஆளாகின்றனர். ஆராய்ச்சியாளர்கள் முடிவின்படி தற்கொலை செய்ய முனைபவர்கள் வாழ்க்கையை எந்த அளவு வெறுக்கிறார்களோ அதே அளவு சாவையும் வெறுக்கிறார்கள். அதனால்தான் தற்கொலை முயற்சியில் இறங்கிய பிறகு உதவிக்கு மற்றவர்களை அழைக்கின்றனர். இம்முயற்சியில் ஈடுபட்டு பின் காப்பாற்றப்பட்டவர்கள் எப்போதும் சாவைப் பற்றியே பேசுகிறார்கள். அவர்களுடைய நினைவு சாவு, வாழ்வு என்ற இரண்டுக்கும் இடையிலேயே சுற்றிக்கொண்டிருக்கும். சிலர் தற்கொலை முயற்சியைத் திருப்பு முனை என்று வர்ணிப்பர். ஏனென்றால் அதன் பிறகு தான் அவர்கள் மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்திருப்பர். இவர்கள் தங்கள் மீது நம்பிக்கை இல்லாதவர்கள். எந்த ஒரு காரியத்தையும் திசை திருப்புவதன் மூலமே செய்ய முடியும் என நம்புபவர்கள் வெகு சிலரே. தாங்கள் செய்தது தவறு என்றெண்ணி வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்கிறார்கள்.

சமீபகால ஆய்வு முடிவுகளின் படி தற்கொலை பல்வேறு காரணங்களுடன் பின்னிப்பிணைந்துள்ளது. உளவியல் கூறுகள், ஆளுமைக் குறைபாடுகள், இரசாயன மாற்றம் மற்றும் சூழ்நிலை என்பவையே அக்காரணிகள். எமிலிடர்க்கீம் என்ற சமூகவியல் நிபுணர் சமுதாய சிதைவே தற்கொலைக்குக் காரணம் என்றார். ப்ராய்ட் என்ற உளவியல் நிபுணர் மரணத்தைப் பற்றியே எண்ணம் வலுப்பட்டு அடிமனதில் தூண்டப்படுவதால் தற்கொலை நிகழ்கிறது என்று கூறியுள்ளார். தற்கொலைக்கு முயல்பவர் எப்படி நடந்து கொள்வார்? (வளரும்)

# வாயிலே 'கொள்ளியை' ஏந்தி...!

அந்தக்கல்லூரிக்கு முன்னால் இருந்த தேநீர்க் கடையில் ''ரீ'' குடிப்பம் என்று உள்ளே நுழைந்தேன்.

நேரம் பகல் 11 மணியிருக்கும். பள்ளிக்கூட மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் அந்தக் கடை யில் நிறைந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் தங்களின் சுவைக்கேற்ற வகையில் வேண்டி சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி' என்ற பாடல் அந்த வேளையில் வானொலியிலிருந்து ஒலித்துக்கொண்டிருந்தது.

'எல்லாவற்றையும் இழந்து போய் நிர்க்கதியாய் நிற்கும் எங்களுக்கு இந்த நிகழ்கால இளஞ்சிட்டுக்கள்தானே எதிர்காலத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்று எனக்குள்ளே நினைத்தபடி வானொலியில் ஒலித்த தத்துவ கீதத்தைக் கேட்டு ரசித்தபடி ரீ குடித்துக் கொண்டிருந்தேன்.

அங்கு கூடியிருந்த மாணவர்களில் பலரும் கலைந்து செல்ல நான்குபேர் மட்டும் அங்கேயே தொடர்ந்தும் நின்றுகொண்டிருந்தார்கள். 'இவர்கள் மட்டும் ஏன் நசிந்து நசிந்து நிற்கிறார்கள்?' யோசனை மனதுக்குள் துளிர்த்தது.

''அண்ணை அயிட்டத்தைத் தாங்கோ. இன்ரேவல் முடிஞ்சு 'பெல்' அடிக்கப்போகுது'' என்று கடைக்காரரிடம் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

''எட சொன்னால் கேளுங்கோடா :உங்களுக்கு தரக்கூடாதடா. பொலிஸ் பிடிப்பாண்டா.. தரமாட்டேன் என்கிற ரீதியாகமுரண்டு பிடித்துக் கொண்டிருந்தார் கடைக்காரன்.

''அண்ணை! நாங்கள் உங்களுக்கு பிரச்சினை வராமல் அயிட்டத்தைப் பாவிப்போம் என்று மாணவர்களும் மன்றாட்டமாக அழுங்குப்பிடியாக கேட்டுக்கொண்டிருந்தார்கள். குழந்தை தாயிடம் பாலுக்கழுவது போல....




என்னடா? ஏதோ அயிட்டம் எண்டுசொல்றாங்கள் என்று என்னையே நான் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தேன். சற்று நேரத்தில் அவர்கள் அமைதியாகிவிட்டார்கள். திடீரென அந்த நாலுபேரும் 'நைஸா' கடையின் பின்பக்கமாய் போனார்கள். இப்பத்த பொடியளைப் புரிஞ்சு கொள்ளேலாமல் கிடக்குது. அவங்கள் என்ன கதைக்கிறாங்கள்என்ன சொல்லுறாங்கள். அப்பாடா என்னத்தைச் சொல்ல ... என்னத்தைக் கதைக்க என்று என்னுள்ளே சின்னதாய் ஒரு பெருமூச்சு!

.... 'ரீ' யும் குடித்து முடிந்திருந்தது. இருந்த பத்திரிகையையும் படித்து முடித்தாகிவிட்டது. 'இனி வெளிக்கிடுவம்' என்று நினைத்துக்கொண்டு புறப்பட்டேன். எனினும் மனம்கேட்காததால் நானும் பின்பக்கமாக என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறியத்தலைநீட்டினேன். அடக்கடவுளே! அங்க கண்ட காட்சி தலையைச் சுழல வைத்துவிட்டது. பின்னுக்குப் போன நான்கு மாணவர்களும் வரிசையாக இருந்து சிகரெட் குடித்துக் கொண்டிருந்தார்கள். புகையை உல்லாசமாக விட்டுக்கொண்டிருந்தார்கள்.

கவிநேசன்

அந்த நான்கு பேரும் இந்தமுறை 'ஓ. எல்' எடுக்கிற மாணவர்கள் என்று கடை முதலாளியிடம் கேட்டறிந்து கொண்டேன்.

போரழிவிற்குப் பின்னர் சமூகச் சீரழிவுகள் யாழ்ப்பாணத்தில் தலைவிரித்தாடுகிறது. அந்த மாணவர்கள் புகை பிடிப்பதை பார்த்ததும் என் வயிறு பற்றி எரிந்தது. 'பள்ளிப்பருவத்தில் இப்படிக்கொள்ளிக் கட்டை'' யோடவல்லவா திரிகிறார்கள். இதுகள் எப்படித்தான் எங்கட சமூகத்துக்கு உதவப்போகுதுகளோ?' என்று மனதுக்குள் வெந்து வெடித்துக்கொண்டு கடையை விட்டு வெளியேறினேன். அப்போது அங்கிருந்த வானொலியில் 'என்னதான் நடக்கும் நடக்கட்டுமே' என்ற கீதம் ஒலித்தது.

பார்த்தீர்களா! மேற்படி சம்பவம் நகரத்தில் உள்ள பிரபல பாடசாலையொன்றின் முன்பாக உள்ள தேநீர்க் கடையொன்றில் இடைவேளை நேரத்தின்போது கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. என்னதான் கடமையுணர்வுகளுடன் செயற்பட்டாலும் சிலவிடயங்களில் இன்னும் ஆழமான கண்காணிப்பினை மேற்கொள்ள வேண்டும். இது கடமைக்கப்பால் சமூகப் பொறுப்புணர்ந்த பணியாகும். உரியவர்கள் சிந்திப்பார்களா?

# சிங்கராஜவனத்தில் ஒரு சிங்கார உலா



க.வாணி முகுந்தன்,
யா/மகாஜனக் கல்லூரி.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பல்வேறு சிறப்புக்களை கொண்ட சிங்கராஜ வனத்தினைத் தரிசிக்க மூன்று கிலோ மீற்றர் வரை கால்நடையாக அழைத்துச் செல்லப்பட்டோம். நாம் நடந்து சென்ற பிரதேசம் Buffer zone என அழைக்கப்படும் பிரதேசமாக இருந்தது.சரியாக முப்பது நிமிட நடையின் பின்னர் நாம் தங்க வைக்கப்பட இருந்த காட்டு பங்களாவின் வாசற்புறத்தை அடைந்தோம். அங்கு எங்களை வரவேற்பதற்காக இரண்டு சிங்கங்கள் காத்திருந்தன.

காட்டு பங்களாவின் சுற்றுப்புற அழகை வார்த்தைகளால் வர்ணிக்கவே முடியாது. நான்கு புறமும் அடர்ந்த காடு, அருகே சலசலத்து ஓடும் அழகிய நீர் வீழ்ச்சியுடன் இணைந்த சிற்றாறு, எந்நேரமும் சோ எனப் பெய்யும் எவருக்கும் தீங்கு செய்யாத நன்மழை, ஆங்காங்கே கீதமிசைத்து நாத சங்கமத்தில் வண்ணமிகு புள்ளினங்கள், 'சில்லென்று சத்தமெழுப்பும் சிங்கார வண்டினங்கள். இவைகளின் மத்தியில் அழகுடன் மிளிர்வதுதான் மாட்டின் ஐயாவின் காட்டு பங்களா. எமக்கெல்லாம் மூன்று வேளை சோறு போட்டு மனம் மகிழ வைத்தவரும் இந்த மாட்டின் ஐயா தான். இவரது பங்களாவில் வெளியில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் தங்கி நின்று வனத்தினை சுற்றிப் பார்ப்பதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு ஒரு அறைக்கான வாடகை இரண்டாயிரத்து ஐந்நூறு, அத்துடன் உணவு பெற்றுக்கொள்வதற்கு மேலதிக கொடுப்பனவு வழங்க வேண்டும். ஒரு நாளைக்கு காட்டினை சுற்றிக்காட்டும் வழிகாட்டிக்கான கொடுப்பனவு ரூபா ஐந்நூறு வழங்க வேண்டும். இந்த பங்களாவிற்கான மின்னிடும் மின்சாரம் நீர்வீழ்ச்சியில் இருந்து பங்களாவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனால் மின்சார பட்டில் செலுத்த வேண்டிய தொல்லையான வேலையும் இங்கு இல்லை.

முகத்தினை மூடி மறைத்து வளர்ந்திருக்கும் அடர்ந்த தாடி, மயில் தோகை விரித்தாற் போல பரந்து நீண்டு வளர்ந்த தலைமுடி, இரு சூரியன்கள் அருகமர்ந்திருப்பது போல ஒளி வீசும்கண்கள், நிமிர்ந்த நன்நடை, நேர்கொண்ட பார்வை, வனத்தில் எதற்கும் அஞ்சாத ஞானச்செருக்கு இத்தனையும் கொண்டவர் தான் பேராசிரியர் சரத் கொட்டகம. இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறைத்தலைவர். உலக நீதி மன்றத்தின் விஞ்ஞான விடயங்களுக்கான நிபுணர். இவரது பெயரில் ஒரு வலம் வந்து கொண்டிருக்கிறமை (Bufo kotagamae) பெருமைக்குரியது.

முதல் நாள் வாங்கிய லவீச் அட்டைக் கடிக்கு அளவே இல்லை. அட்டைக்கடி எம்மை மிகவும் பயமுறுத்தியது. ஒரு சிலர் வாய்விட்டு அலறியே விட்டார்கள். இது 7687989 வகுப்பைச் சேர்ந்த அட்டை இனமாகும். இது உடற்சூட்டை நோக்கி விரைவாக நகரக்கூடியது. கண் இமைக்கும் நேரத்திற்குள் காலில் ஏறிவிடும். இது காலில் கடித்துவிட்டால் 2-3 மி.லீ இரத்தம் குடித்த பின்னரே கீழே தானாகக் கழன்று விழும். ஆனால் லீச் அட்டை கடித்தால் எள்ளளவும் பயப்பட தேவையில்லை. ஏனெனில் எந்தவித பாதிப்பும் இல்லை. இதனால் நாள்கள் செல்லச் [illegible] முழுதாக நீங்கிவிட்டது. (வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘சண்டே ரைம்ஸு’க்கு கிடைத்த விருதை விமர்சித்து ஆசிரியர் தலைப்பு எழுதினேன்

## ‘சண்டே லீடர்’ ஆசிரியர் நேற்று முன்தினம் சாட்சியம்

கொழும்பு, ஒக்.16

‘ஸ்கூப் ஒவ் தி இயர்’ என்ற ஊடக விருது ‘சண்டே ரைம்ஸ்’ பத்திரிகையாளருக்கு வழங்கப்பட்டதை விமர்சித்து ஆசிரியர் தலையங்கம் எழுதியதாக ‘சண்டே லீடர்’ ஆசிரியர் பிரெட்ரிகா ஜான்ஸ் உயர்நீதிமன்றில் தெரிவித்தார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் உயர்நீதிமன்றில் தீபாலி விஜேசுந்தர தலைமையிலான நீதிபதிகள் கொண்ட ஆயம் முன்னிலையில் ஆறாவது நாளாகவும் இடம்பெற்றது.

இதன்போது, பிரதிவாதியின் சட்டத்தரணி நலின் லத்துவஹெட்டி, பிரெட்ரிகா ஜான்ஸைக் குறுக்கு விசாரணை செய்தார். அதன்போதே பிரெட்ரிகா ஜான்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சாட்சியமளிக்கும்போது கேட்கப்பட்ட கேள்விகளும் - பதில்களும் வருமாறு:-

கேள்வி:- சரத் பொன்சேகாவுடனான செவ்வியின்போது குரல் பதிவுக்காக நீங்கள் எதையும் கொண்டுசெல்லவில்லை என்று கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சாட்சியமளிப்பின்போது, கூறினீர்களா?

பதில்:- ஆம்.

கே:- சாதாரணமாக செய்தியோ அல்லது கதையோ பூரணமடைந்ததன் பின்னரா வெளியிடுவதற்கு அனுமதிக்கப்படும்?

ப:-ஆம்.

கே:-பத்திரிகை ஒன்று முதலாவது அச்சுக்கு அனுமதி கிடைத்தவுடனா அச்சிடப்படும்?

ப:-ஆம்.

கே:-இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதி முடித்தவுடன் அதனைக் கணனியில் பதிவு செய்ய வழங்கப்பட்டது. பின்னர் அதன் இரு பிரதிகள் அதாவது ஒன்று வெள்ளை, மற்றொன்று கறுப்பில் கிடைக்கும். அது அச்சிடப்பட்டே உமது கைக்கு வரும். பின்னர் அதில் சரி-பிழை பார்க்கப்படும். பிழைகள் இருப்பின் சரி செய்யப்பட்டு இரண்டாவது முறையாகவும் அச்சிடப்பட்டு பிரதி எடுக்கப்படுமா?

ப:-ஆம்.

கே:- சாதாரணமாக ஒரு பத்திரிகை நிறுவனத்தில் வெள்ளை, கறுப்பு இரு பிரதிகளும் ஆசிரியர் கைக்கு ஒப்படைக்கப்படும். அவரின் அனுமதியை அடுத்தே அச்சுக்கு அனுப்பப்படுமா?

ப:-ஆம்.

கே:-அதேபோல் முதலாவது அச்சு உமக்குக் கிடைத்ததா?

ப:-ஆம்.

கே:- இந்த முக்கியமான ஆசிரியர் தலையங்கத்தில் உமது எதிர்காலமே அடங்கியுள்ளது என நீர் நினைத்தீரா?

(பிரெட்ரிகா சார்பில் ஆஜரான சட்டத்தரணி குறிக்கிட்டு, சாட்சியாளர் பதிலளிப்பதற்கு ஏற்ற வகையில் கேள்விகளைக் கேட்கவும்)

கே:-பத்திரிகை நிறுவனமொன்றில் சம்பிரதாய பூர்வமா கப் பத்திரிகையின் அச்சு சரி,பிழை பார்க்க ஆசிரியரிடம் வழங்கப்படுமா?

ப:- ஆம்.

கே:-அவ்வாறு உமக்கு முதல் அச்சு வழங்கப்பட்டபோது அதில் நீர் சரி, பிழை பார்த்தீரா?

ப:-ஆம்.

கே:- இந்தச் செய்தியானது சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் என்று அப்போது உமக்குப் புரியவில்லையா? சரி, சரத் பொன்சேகா அவருக்கு மூன்றாம் தரப்பினரிடமிருந்து தெரிந்துகொண்டவற்றையே உமக்குத் தெரிவித்தார் என உமக்குத் தெரியும். அதை வாசகர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் எந்த இடத்திலும் மூன்றாம் தரப்பினரிடம் இருந்து தெரிந்துகொள்ளப்பட்ட விடயமே என செவ்வியின் போதும் கூறினார் என நீங்கள் எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்படவில்லையே?

ப:-பதிப்பில் முதற்பக்கத்திலும், ஆசிரியர் தலையங்கத்தின் இறுதிப் பந்தியிலும் நான் குறிப்பிட்டுள்ளேன்.

கே:- இதே கேள்வியை நான் ஒக்டோபர் 12ஆம் திகதி உம்மிடம் கேட்டபோது, அதனை ஆசிரியர் தலையங்கத்தின் இறுதியில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறினீர் அல்லவா?

ப:- நீங்கள் என்னிடம், ஆசிரியர் தலையங்கத்தில் எந்த இடத்தில் மூன்றாம் தரப்பினர் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டீர்கள். நான் அது குறித்து 4ஆம் பக்கத்திலுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தேன்.

கே:-நீர் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தை சரத் பொன்சேகாவுடன் டிசம்பர் 12ஆம் திகதி தொடர்புகொள்ள முடியாமல் போனால் வெளியிட மாட்டீர் எனக் கூறியிருந்தீர்?

ப:-ஆம்.

கே:- அப்படியே சரத் பொன்சேகாவைத் தொடர்பு கொள்ள உமக்கு முடியாமற் போனது. பின்னர் நீர் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தை டிசம்பர் 20ஆம் திகதியே வெளியிட்டுள்ளீர்?

ப:-ஆம்.

கே:-ஐக்கிய தேசியக் கட்சியினால் ‘சண்டே லீடர்’ பத்திரிகைக்கு 11 வாரங்களுக்கு தலா 10லட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டமை தொடர்பில் மலிக் சமரவீரவுக்குத் தொடர்பு உள்ளதா?

ப:-ஆம். அவரும் தொடர்புபட்டுள்ளார்.

கே:- இந்த சண்டே லீடர் பத்திரிகையின் 10ஆம் பக்கத்தில் பிறிதொரு விடயம் காணப்படுகிறது. அதாவது, சரத்பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் என்றும், இராணுவ ஆட்சியுள்ள நாடுகளின் நிலை குறித்தும் காணப்படுகிறதே?

ப:-ஆம்.

கே:- அதிலேயே தொடர்ந்து 12ஆவது பக்கத்தில் ‘ஹெட்டு ஹெட் கண்டிடேட்ஸ் புரொபைல்ஸ்’ (Head to Head Candidates Profiles) அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களது விவரங்கள் காணப்படுகின்றன.

ப:-ஆம்.

கே:- சரியாகப் பாருங்கள். அந்தப் பக்கத்தின் அதிகூடிய பகுதியை ஒரு வேட்பாளருக்கு வழங்கியுள்ளீர்கள். அது யாருக்கு?

ப:- ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு.

கே:-‘சண்டே லீடர்’ ஆசிரியர் பீடம் சரத் பொன்சேகாவுக்கு அனுசரணை வழங்கியபோது ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் பக்கத்தின் கூடிய பகுதியை வழங்கியுள்ளீர்கள்......

ப:- அது, ஆசிரியர் பீடத்தின் தீர்மானம். எனக்குத் தெரியாது.

கே:- நீங்கள் எழுதிய ஆசிரியர் தலையங்கம் குறித்து விசேட எதிர்பார்ப்பு வைத்திருந்தீர்களா?

ப:- இல்லை. வழமையாக எழுதியவை போன்றே எழுதினேன்.

கே:- இந்த ஆசிரியர் தலையங்கம் ஆசிரியர் பீட விருது ஒன்றுக்காக முன்மொழியப்பட்டதா?

ப:-ஆம்.

கே:- உங்களது பெயரிலேயா?

ப:- ஆம்.

கே:-''ஸ்கூப் ஒவ் த இயர்'' "Scoop of the year' என்ற விருதுக்கா?

ப:- ஆம்.

கே:- 2010 ஒகஸ்ட் முதலாம் திகதி ‘சண்டே லீடர்’ பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கம் ஒன்று சிறு தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டதா? அதனை நீங்களா எழுதினீர்கள்?

ப:-ஆம்.

கே:-ஆனால் நடுவர்களால் உங்களுக்கு விருது வழங்கப்படவில்லை.....

ப:- ஆம்.

கே:- விருதுக்கான நடுவர்களாகக் கடமைபுரிந்தவர்கள் யார் எனத் தெரியுமா?

ப:- ஞாபகமில்லை.

கே:- இலங்கை ஊடகத்துறையின் முக்கிய நபர்களே பங்குபற்றியிருந்தனர். அந்த விருதை வென்ற பத்திரிகை ஆசிரியர் ஒருவரைத் தாக்கும் விதத்தில் நீங்கள் ஆசிரியர் தலையங்கம் ஒன்றை எழுதியுள்ளீர்களா?

ப:-ஆம்.

கே:- Sunday Times பத்திரிகை ஆசிரியரா?

ப:-ஆம்.

கே:- போட்டி ஒன்றில் பங்குபற்றி, தோல்வியடைந்த ஒருவர் வெற்றிபெற்றவரை நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ தாக்குவது சாதாரண செயலா?

அதன் பின்னர் அந்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் தெளிவுபடுத்தும் இன்னொரு ஆசிரியர் தலையங்கத்தை எழுதினீர்களா?

ப:-ஆம்.

கே:- அதுவும் ஒரு சவாலாகவே காணப்பட்டது..... நீங்கள் உங்கள் கொள்கைக்குப் பாதிப்பு ஏற்படுத்துபவர்களைத் தாக்கும் மனோபாவமுடைய ஒரு பெண்.

(அரச தரப்பு சட்டத்தரணி குறுக்கிட்டு சாட்சியாளரைக் கொள்கைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் கேள்விகளைக் கேட்க வேண்டாம்)

இதனை அடுத்து இந்த வழக்கு இன்று (நாளை) காலை 10.30மணிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-சி)



யாழ்.மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் அண்மையில் முதியோர், சிறுவர் தின விழா நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மங்கள விளக்கேற்றுதைப் படத்தில் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

# ஐ.தே.க. தலைமையைத் தெரிவுசெய்ய இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

## கட்சியின் முன்னாள் எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, ஒக். 16

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைத் தெரிவுசெய்வதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் - என்று கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளனர்.

கட்சித் தலைமைத்துவம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை நிலைமைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கட்சித் தலைவரைத் தெரிவு செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் வாக்களிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பின் தலைவர் மஹேந்திர விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து விலக வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்தக் கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த சில காலமாக ஐக்கிய தேசியக் கட்சி பல்வேறு பின்னடைவுகளை எதிர்நோக்கி வருகிறார் எனவும் கூடிய விரைவில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# பத்துவயதில் திருமணமுடித்த தாயின் ஓய்வூதியத்திற்கு மகள் விண்ணப்பம்

கொழும்பு, ஒக்.16

பத்துவயதில் பால்ய திருமணம் செய்துகொண்ட பெண்ணொருவரின் ஓய்வூதியத்தைக் கோரி அவரது 53 வயது மகள் விண்ணப்பித்துள்ளார் என ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

54 வருடங்களுக்கு முன்பு குருநாகல் பிரதேசத்தில் இத் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பெண் இறந்ததும் அவரது அங்கவீனமான மகள் அனுப்பி வைத்த விண்ணப்பத்தைப் பரிசீலித்தபோதே இந்த விடயம் தெரிய வந்தது என ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.ஏ. திலகரத்ன தெரிவித்தார்.

1946 ஜூன் 16ஆம்திகதி பிறந்துள்ள இப்பெண் 1956 செப்ரெம்பர் 6 இல் திருமணம் செய்துள்ளார். 1971இல் அரச சுகாதாரசேவையில் இணைந்து கொண்ட இப்பெண் 1987இல் ஓய்வுபெற்று, 1993 இல் மரணமாகியுள்ளார்.

அவரது மகளுக்கு தற்போது 53 வயதாகிறது. இவர் சிறுமியாக இருக்கும் போதே தந்தை பிரிந்து சென்று வேறு திருமணம் செய்துகொண்டுள்ளார். தந்தைக்கு தற்போது 75 வயதாகிறது. தனது மனைவியின் ஓய்வூதியத்தை மகளுக்கு கொடுப்பதில் தனக்கு ஆட்சேபனை இல்லையென்று அவர் ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார் - இவ்வாறு திலகரத்ன கூறினார். (சி)

# வெள்ளைக்கொடி வழக்கு நடைபெறும் உச்ச நீதிமன்றத்துக்குள் ‘கமெரா’!

கொழும்பு, ஒக். 16

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்றுவரும் கொழும்பு உச்ச நீதிமன்றினுள் ‘கமெரா’ பொருத்தப்பட்டுள்ளது.

சாதாரணமாக வழக்கு இடம்பெறும் தருணங்களில் நீதிமன்ற வளாகத்துக்குள் மற்றும் நீதிமன்றத்துக்குள் ‘கமெரா’ பயன்படுத்த அனுமதியளிக்கப்படுவதில்லை.

இந்நிலையில், வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு இடம்பெறும் உச்ச நீதிமன்றில் நீதிபதிகள், சாட்சியாளர்கள், வழக்கோடு சம்பந்தப்பட்ட தரப்பினர் எவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்பதை அறிந்துகொள்ளவே ‘கமெரா’ பொருத்தப்பட்டுள்ளது எனச் சட்டத்தரணிகள் கூறுகின்றனர்.

இந்த ‘கமெரா’ மூலம் பதிவாகும் காட்சிகளை அரச மேலிடத்தைச் சேர்ந்த ஒருவர் அவதானித்துக்கொண்டிருப்பதாகவும் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
திட்டமிட்ட காரியங்கள் தங்கு தடையின்றி நடக்கும் நாள். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று பாசம் கூடும். தொழில் நலன் கருதி சில முக்கிய முடிவு எடுப்பீர்கள். தந்தை வழியில் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள்.

**இடபம்:**
நீங்கள் எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் உதவி கேட்டு வரலாம். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள்.

**மிதுனம்:**
எதிலும் ஒரு முறைக்குப் பல முறை சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். அயலாரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். எதிர் பார்த்த பண வரவுகள் கடும் இழுபறிக்கு பின்னர் வந்து சேரலாம். புதிய பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்திக்கலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள்.

**கடகம்:**
சஞ்சலங்கள் நீங்கி சந்தோஷம் அதிகரிக்கும் நாள். பொதுவாழ்வில் உள்ளோருக்கு புகழ், செல்வாக்குக் கூடும். பயணங்கள் பலன் தரும் விதத்தில் அமையும். கடன் பாக்கிகளைக் கேட்டு வாங்குவீர்கள். வெளியிடங்களுக்கு செல்லும் போது, பால்ய நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். ஓய்வாக உட்காராமல் ஏதாவது வேலையைச் செய்வீர்கள்.

**சிங்கம்:**
கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள். உறவினர்களின் பாச மழையில் நனைவீர்கள். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல் விலகும். தந்தையிடம் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும். எதிர்பார்த்த பணவரவு ஒன்று சரியான நேரத்தில் கைக்குக் கிடைக்கும்.

**கன்னி:**
கவலைகள், குழப்பங்கள் அதிகரிக்கலாம். கடன் மிகுதிகளை திருப்பிச் செலுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள். நாடி வந்த ஒருவருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். மற்றவர்களை நம்பி வேலைகளை ஒப்படைக்கும் போது யோசித்து செயற்பட வேண்டும். இறைவழிபாடுகளை மேற்கொள்வீர்கள்.

**துலாம்:**
தொழில் ரீதியான கவலைகள் ஏற்படலாம். பணி புரிவோர் மேலதிகாரிகளின் கண்டிப்பற்கு ஆளாகலாம். பாசமிக்க உறவினர்கள் பகையாகாமல் இருக்க யோசித்துச் செயற்பட வேண்டும். ஆடம்பரப் பொருள்கள் வாங்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

**விருச்சிகம்:**
நினைத்தது நினைத்தபடி நடக்கும் நாள். சந்தோஷமான அனுபவங்களைச் சந்திக்கலாம். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். தொழில் முன்னேற்றம் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். சகஊழியர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**தனுசு:**
சிலருடன் கடும் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலருக்குப் புத்திமதி சொல்வீர்கள். செலவுகளை நினைத்து கவலை கொள்வீர்கள். பிறரை நம்ப யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். கடும் அலைச்சலில் இருந்து ஓய்வு பெறலாம். அரசு காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும்.

**மகரம்:**
தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே கைக்குக் கிடைக்கலாம். சக ஊழியர் ஒருவரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாட்டால் எரிச்சல் அடையலாம். வாகனங்களில் செல்லும் போது கவனம் அவசியம்.

**கும்பம்:**
தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். வீண்பழிகளைத் தவிர்க்க பணியில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவது நல்லது. வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். மற்றவர்களுக்காகச் செலவு செய்யலாம். கணவன், மனைவி இடையே சிறு சச்சரவுகள் ஏற்படலாம். மறதியால் அவதியுண்டு.

**மீனம்:**
வருவாய் பெருகி வளம் பெறும் நாள். நீண்ட நாள் நண்பர்களின் சந்திப்பால் முக்கிய காரியம் ஒன்று முடிவிற்கு வரும். வாகன யோகத்திற்கும் வாய்ப்பு உண்டு. இரண்டு நாள்களுக்கு முன்னர் இழுபறியாக இருந்த காரியம் ஒன்று விரைவில் முடிவிற்கு வரும். அரசியல்வாதிகள் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பணவரவு உண்டு.



கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற வாணிவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் ஆறு திருமுருகன் உரையாற்றுவதையும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் எஸ்.ஜெயசீலன், கலாநிதி எஸ்.மிகுந்தன், திருமதி மிகுந்தன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், கோப்பாய் சுப்பிரமணிய சுவாமிகள், கோட்ட ஸ்தாபகர் திருமதி கனகரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மனவிருத்திப் பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வையும் படங்களில் காணலாம். (படம்:-லக்ஸ்மன்)

# பொன்சேகாவிற்கு ஆதரவாக களனியில் முடிந்தால் போராட்டம் நடத்திப் பார்க்குக

## எதிர்க்கட்சிகளுக்கு மேர்வின் சில்வா சவால்

கொழும்பு, ஒக். 16

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக களனித் தொகுதிக்குட்பட்ட பிரதேசத்தில் போராட்டம் ஒன்றை நடத்திப் பார்க்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு பிரதியமைச்சர் மேர்வின் சில்வா சவால் விடுத்துள்ளார்.

பொன்சேகாவுக்கு ஆதரவாக மாதுளுவாவே சோபித தேரர் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்தால் அரசு அவருக்கு நல்லதொரு பாடம் புகட்டத் தயங்காது - என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

சிலாபம் தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவர் தலைவர்களுக்கான பதக்கம் சூட்டும் வைபவத்தில் கலந்து கொண்ட பிரதியமைச்சர் மேர்வின் சில்வா அங்கிருந்த ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுவிக்கும் படி ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி.யும் நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை நடத்தி வருகின்றன எனவும் முடிந்தால் அவர்களோ, சோபித தேரரோ களனித் தொகுதிக்குட்பட்ட பிரதேசத்தில் அவ்வாறான போராட்டமொன்றை நடத்திப் பார்க்கு மாறு, தான் சவால் விடுகிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# விநோத உயிர்கள்



மனிதன் எந்த நேரத்தில் எப்படி நடப்பான் என அறிவது கடினம். உயிருடன் இருக்கும் போதே தனக்குப் பின் பணம், சொத்து யாருக்குச் சேர வேண்டும் என எழுதி வைக்கிறான். அதுதான் 'உயில்' என்று கூறுவார்கள்.

பொதுவாக உயிலை பேப்பரில் தானே எழுதுவார்கள். மெக்சிக்கோ நாட்டிலே ஒருவர் என்ன செய்தார் தெரியுமா? தன்னுடைய மார்பிலே உயிலை பச்சை குத்தினாராம். நினைப்பெல்லாம் சரிதான். இருந்தாலும் பலபேருக்கு யோசனை.

ஒருநாள் அவர் இறந்து போனார். பிணத்தைப் புதைப்பதற்கு உறவினர்கள் சம்மதித்தார்கள். புதைத்தால் உயிலும் அழிந்திடுமே என்பதனால் நீண்ட நாள்களுக்கு அதைப் புதைக்காமல் பக்குவப்படுத்தி வைத்தார்கள்.

இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. உயிலின் பிரதியை எடுத்துவிட்டு அதன்பின் பிணத்தை அடக்கம் செய்தனர்.

இன்னொரு சம்பவம் ஒன்று உண்டு. வேடிக்கையான ஆசாமி ஒருவர் இருந்தார். அவர் உயில் எழுதி வைத்தார். அவர் எப்படி எழுதி வைத்தார் தெரியுமா? தான் இறந்த பின் ஊர்வலத்திலே பாண்ட் வாசிப்பவர்களுக்கு தலா 40 டொலர் கொடுக்க வேண்டும் என எழுதி வைத்தார். அத்துடன் 20 டொலர் செலவிலே நிலக்கடலையும் வெல்லமும் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

தனது 6 பிள்ளைகளுக்கும் தலா 2 டாலர் மட்டுமே கொடுக்க வேண்டும் என எழுதி வைத்தார்.

இதைவிட இன்னொரு வேடிக்கையான சம்பவம்- பிரான்ஸ் நாட்டிலே 90 வயதான அம்மா உயில் எழுதிவைத்துவிட்டு இறந்து விட்டார்.

வக்கீல் உயிலை வாசிக்க ஆரம்பித்தார்.

'என்னுடைய நீண்ட ஆயுளுக்கு நான் என்னுடைய குடும்ப மருத்துவருக்கு கடமைப்பட்டுள்ளேன். என் அறைக்குள் 35 மரப்பெட்டி வைத்துள்ளேன். அந்தப் பெட்டிக்குள் இருப்பது அனைத்தும் அவர்களுக்குத்தான் சொந்தம். சாவி என் படுக்கைக்கு அடியில் உள்ளது' என அந்த உயிலில் எழுதி இருந்தது.

உடனே மருத்துவருக்கு தகவல் சொன்னார்கள். அவர் வந்தார். வீட்டுக்காரர்கள் பெட்டியைத் திறந்தார்கள். அந்த மருத்துவர் 20 வருடங்களாகக் கொடுத்த மாத்திரை, சீட்டு எல்லாம் பத்திரமாக இருந்ததாம் அந்தப் பெட்டிக்குள்.

இதற்கு என்ன விளக்கம் தெரியுமா?

குடும்ப மருத்துவர் கொடுத்த மருந்துகளைச் சாப்பிடாமலே இருந்ததாலேதான் அந்த அம்மா 90 வயதுவரைக்கும் இருந்ததாகவும் அதனாலே தன்னுடைய நீண்ட ஆயுளுக்குக் காரணம் அவர் தான் என்பது விளக்கம்.

இதைத்தான் அந்த அம்மா அந்த உயிலில் சொல்லாமலே சொல்லியிருக்கு! கில்லாடிக் கிழவி.

**கோ.சுவாமிநாதன்.**

# இரண்டு பிச்சைக்காரர்கள்

ஓர் இடத்திலேயே தொடர்ச்சியாக ஒருவன் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். இதனால் அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பிரபலம் அடைந்து விட்டான். சில காலத்துக்குப் பின் அவன் இறந்து விட்டான். ஊரே கூடி அவனுக்கு அஞ்சலி செய்தது.

அவன் பிச்சை எடுக்கும் இடத்திலே அவனைப் புதைத்து நினைவுச் சின்னம் வைக்கத் தீர்மானித்தார்கள்.

அவன் நின்ற காலடிப் பூமியைத் தோண்டிய போது தங்கம், வைரம் என்று விலை மதிக்க முடியாத புதையல் ஒன்று இருந்தது.

இந்தப் பிச்சைக்காரனின் நிலையில் தான் நம்மவரும் தமக்குள்ளேயே பெரும் செல்வத்தை வைத்துக் கொண்டு வேறு யாரிடமாவது இலவசமாக எதுவும் கிடைக்காதா? என ஏங்குவார்கள்.

ஏழைப் பிச்சைக்காரன் ஒருவன் அரச மருத்துவமனையில் சாவுடன் போராடிக் கொண்டிருந்தான். இவனது நிலை அறிந்த மருத்துவமனை மதகுரு ஒருவரை அழைத்து இறுதிப் பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்தார்கள்.



அந்த மதகுரு 'இரண்டு கைகளையும் குவித்து உயர்த்து' என்று பிச்சைக்காரனிடம் கூறினார். ஆனால் அவன் ஒரு கையை மட்டும் உயர்த்தி மற்றதை மூடி மடக்கியபடி வைத்திருந்தான்.

கடவுளை இரண்டு கைகளாலும் தான் வணங்க வேண்டும். ஆனால் அவன் மற்றக்கையை அசைக்கவே இல்லை. அவன் உயிர் பிரிந்தது. சுற்றி இருந்தவர்கள் அவனது கையில் என்ன இருக்கிறது என ஆவலோடு கையைத் திறந்தார்கள். அதில் நான்கு அழுக்கடைந்த நாணயங்கள் இருந்தது. இறக்கும் வேளையிலும் அவனுக்கு அதைவிட மனம் இல்லை. இப்படித்தான் கீழ்த்தரமான அனுபவங்களை மனசுக்குள் மூடி வைத்திருக்கிறோம்.

**சுகி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலைஞரின் கேள்வி

தமிழகத்தின் ஊடகங்கள் மீது கருணாநிதி குடும்பத்தின் பிடி எந்த அளவுக்கு இறுக்கமாக இருக்கிறது என்பதை அண்மையில் நாளிதழ் ஒன்றில் வெளியான கேலிச் சித்திரம் விமர்சித்தது. ''கலைஞர் கதை வசனத்தில், கலைஞர் தயாரிப்பில், கலைஞர் பேரன் இயக்கத்தில், கலைஞர் பேரன் நடித்த புத்தம் புதிய திரைக் காவியம் கலைஞர் தொலைக்காட்சியில் மிக விரைவில் காணத் தவறாதீர்கள்'' என்ற அந்த கார்ட்டூன் தி.மு.க . தலைவர் கருணாநிதியை கோபத்தின் உச்சிக்கே தள்ளியது.

கலைஞருக்கு மகன் இருக்கக் கூடாதா; பேரன் இருக்கக் கூடாதா; அவர்கள் சினிமாத்துறையில் ஈடுபடக்கூடாதா; ராஜ் கபூர் குடும்பத்தினர் பலரும் சினிமாவில் இல்லையா? என்றெல்லாம் கோபமாக, திரைத் துறையினருக்கு நிலம் வழங்குவதற்கான விழாவில் கேள்வி எழுப்பினார் கலைஞர். யார் எந்தத் துறையில் செல்வது என்பது அவரவர் தனிப்பட் ட விஷயம் என்பதால் தி.மு.க. தலைவர் சொல்வது சரிதான்.

நீங்கள் சினிமாவுக்கு வரக்கூடாது என்றோ. அரசியலுக்கு வரக்கூடாது என்றோ தொழில்துறைக்கு வரக்கூடாது என்றோ யாரும் யாருக்கும் தடைவிதிக்க முடியாது. ஆனால் சினிமா - அரசு அதிகாரம் - தொழில் இந்த மூன்று துறைகளும் சங்கமிக்கும் இடத்தில் தமிழக முதல்வரின் குடும்பம் இருக்கும் போது சில விமர்சனங்கள் எழுந்து விடுவதைத் தவிர்க்க முடியாது.

இந்த மூன்று துறைகளும் ஒன்றையொன்று பல்வேறு வகைகளில் சார்ந்து இருக்கின்றன. திரைத்துறை சம்பந்தமான பல்வேறு கட்டுப்பாடுகள் அரசாங்கத்திடம் உள்ளன. அதற்கு திரைத்துறையினர் பயந்தே தீர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் என்பதால் கலைஞர் குடும்பத்தின் ஏகபோகம் குறித்துக் கருத்துக்கூட சொல்ல முடியவில்லை எனப் பலர் விமர்சிக்கிக்கின் றார்கள். ராமனின் அம்பால் குத்தப்பட்ட தேரையின் கதையைப் போலாகிவிட்டது கோடம்பாக்கத்தின் நிலை.

# கு'பேர' ராஜ்ஜியம்

**3**

தமிழக முதல்வர் கருணாநிதி குடும்பத்தின் ஊடக ஆதிக்கம் பற்றி 'இந்தியா ருடே' சஞ்சிகை வெளியிட்ட கட்டுரை உதயனில் தொடராக வெளியாகிறது. ஈழத் தமிழர்களும் இந்த ஊடக ஆதிக்கத்துக்குள் சிக்கி சின்னாபின்னமாகி வரும் சூழலில் இக்கட்டுரை முக்கியத்துவம் பெறுகிறது.

**தொலைக்காட்சி அலைவரிசைகள் முதல் திரைப்படத் தயாரிப்பு வரை ஒட்டுமொத்த ஊடக உலகமும் கருணாநிதி குடும்பத்தின் ஆளுகைக்குள் இருப்பதாகக் குற்றம்சாட்டப்படுகிறது. இது நல்லதுதானா?**

இன்று தமிழகத்திலுள்ள 90 சதவீத திரை அரங்குகள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் பேரன்களான கலாநிதி அல்லது உதயநிதி அல்லது துரை தயாநிதியின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழகத்திலுள்ள 30 சதவீத திரையரங்குகள் சண் குழுமத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

சென்னை - திருச்சி பகுதிகளில் உள்ள பல திரையரங்குகள் உதயநிதியின் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கோயம்புத்தூர் - மதுரை வட்டாரம் துரை தயாநிதியின் ராஜ்ஜியம் என்றும் சொல்லப்படுகிறது. குறிப்பிட்ட காலக்கட்டங்களுக்கு திரையரங்குகள் வாடகைக்கு எடுக்கப்படுகின்றன.

அந்தக் காலக் கட்டம் முழுவதும் திரையரங்குகள் அதன் முதலாளிகளுக்கு அல்லாமல் வாடகைக்கு எடுக்கும் இவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. இதனால் இந்தக் குடும்பத்திற்கு வெளியே உள்ள ஏராளமான தயாரிப்பாளார்கள் தயாரிக்கும் படங்கள் திரை அரங்குகள் கிடைக்காமல் திண்டாடும் அவல நிலைக்குத் தள்ளப்படுவதாகச் சொல்லப்படுகின்றது.

உதாரணத்திற்கு கருணாநிதி திரைக் கதை எழுதிய *பெண் சிங்கம்* படம் ரிலீஸான போது திரையரங்குகள் கிடைக்காமல் 12 படங்கள் காத்திருக்க வேண்டி வந்ததாகத் தெரிகிறது. ''வசூல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு சில படங்களை 20 நாள்கள் வரை ஓட்டுமாறு நிர்ப்பந்திக்கிறார்கள்'' என்கிறார் திரையரங்கு உரிமையாளர் ஒருவர்.

திரையரங்குகள் கிடைப்பதில் உள்ள நெருக்கடியால் 64 திரைப் படங்கள் தயாரான பிறகும் வெளி வரமுடியாமல் இருட்டறையில் கிடப்பதாக திரைப்பட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திரையரங்குகளின் வாடகை என்ற பெயரில் இந்தத் துறையில் ஏற்பட்டு இருக்கும் ஏகபோகமே இதற்குக் காரணம் என்று ஆதங்கப்படுகிறார்கள் திரைத் துறையினர். சினிமா தயாரிப்பையும் கணிசமான திரையரங்குகளையும் ஒரே தரப்பினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் போது, அவர்களுக்குப் போக மிச்சமுள்ள திரையரங்குகளை மட்டுமே ஒட்டுமொத்த கோடம்பாக்கமும் நம்பியிருக்க வேண்டி வருகிறது.

தமிழ்த் திரையுலகம் ஆண்டுதோறும் 150 படங்களைத் தயாரித்தாலும் அதில் 120 மட்டுமே திரையரங்குகளை எட்டுவதாக 'ஃபிக்கி' நடத்தியிருக்கும் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. 2009 - 2010 இல் கோடம்பாக்கம் ரூ.800 கோடி வருவாயை ஈட்டியிருப்பதாகவும் அதில் 65 சதவீதம் பெரிய பட்ஜெட் படங்களின் மூலம் வந்ததாகவும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது. ஆனால் 50 சதவீதமாக இருந்த திரைப் படங்கள் வெற்றி பெறும் விகிதம் கடந்த நான்கு ஆண்டுகளில் 15 சதவீதமாகக் குறைந்து விட்டது.

ஒரு பக்கம் திரையரங்குகள் மீது ஏகபோகம். மறுபுறம் அரசு அதிகாரத்திற்கு நெருக்கம். இந்த வசதிகளைக் கொண்டிருக்கும் கருணாநிதி குடும்பத்தினரின் தயாரிப்பில் படங்களை இயக்குவது அனுகூலமான ஒன்றாக இருப்பதாகச் சொல்கிறார் ஒரு பிரபல இயக்குநர். இதற்குப் பல காரணங்கள். அரசியல் பின்னணி இல்லாதவர்கள் தயாரிக்கும் படங்கள் சர்ச்சைகளில் சிக்கினால் அதோகதிதான். ஆன்ால் கருணாநிதி குடும்பத்தினர் தயாரிக்கும்போது யாருக்கும் வம்பு செய்யத் துணிவு இருக்காது. சர்ச்சை உருவானாலும் [illegible] அதனை முளையிலேயே கிள்ளி எறிய முடியும். அதோடு இந்தக் குடும்பத்தினர் தயாரிக்கும் படங்களை திரையிட்டு இருக்கும் திரையரங்குகள் மீது எந்தக் கலாசார காவலர்களும் வன்முறையை ஏவிவிட முடியாது. இவர்களுக்குச் சொந்தமான அலைவரிசைகளில் கிடைக்கும் விளம்பரம் அதையெல்லாம்விட முக்கியமானது. ஆனால் இத்தகைய பின்புலத்தால் பலன் அடைகிற இயக்குநருக்கு இந்த விடயங்கள் நல்லதாகவும் அதனால் பாதிப்படைகிற இயக்குநருக்கு கெட்டதாகவும் தெரிகிற விஷயம் இது.

அவர்களுக்குச் சொந்தமான அலைவரிசைகளில் எக்கச்சக்க விளம்பரம் தரப்படுவதால் சுமாரான படத்தைக்கூட வெற்றிகரமாக ஓட்டிவிடலாம் எனத் தெரிய வந்திருப்பது சாதாரண இயக்குநர்களுக்கு பெரு உற்சாகம் தரக்கூடும். உதாரணத்திற்கு *தில்லாலங்கடி* போன்ற நல்ல கதையம்சம் இல்லாத படத்தைக்கூட அவர்களால் தோல்வியடையாமல் பார்த்துக்கொள்ள முடிகிறது. அதே நேரத்தில் தரமான படத்தை எடுத்தாலும் ஒரு குறிப்பிட்ட அலைவரிசையின் திரை விமர்சனத்தில் அது இடம்பெறாமல். அந்த அலைவரிசைத் தரப்பினர் தயாரிக்கும் படமே முதல் இடத்தைப் பிடிப்பது பல இயக்குநர்களுக்கு கடுப்பைத் தருகிற விஷயம்.

ஆனால், ''இவர்கள் அதிகாரப் பின்னணியில் இருப்பதால் இவர்கள் மீது முறைப்பாடுகூடச் சொல்ல முடியாத அவல நிலையில் இருக்கிறோம்'' என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு இயக்குநர். உதயநிதி இதை மறுக்கிறார். ''*களவாணி, சுப்ரமணியபுரம், பசங்க* போன்ற படங்கள் மிகப்பெரிய வெற்றி பெற்றிருக்கின்றன. இவற்றை வெளியிட்டவர்கள் புதிய தயாரிப்பாளர்கள் . எந்த தயாரிப்பாளரிடம் அல்லது நிறுவனத்திடம் இருந்து திரைப்படம் வெளியிடப்படுகிறது என்பது அல்ல படம் நன்றாக இருந்தால் போதும். பெரிய தயாரிப்பாளர், சின்னத் தயாரிப்பாளர் என்று எதுவாக இருந்தாலும் கடின உழைப்பும் போராட்டமும் எல்லாத் தயாரிப்பாளர்களுக்கும் பொதுவானதுதான்'' என்கிறார் அவர். திறமை மட்டுமே கோடம்பாக்கத்தில் மதிக்கப்படுவதாகச் சொல்லும் உதயநிதி, வெற்றியும் தோல்வியும் எல்லாத் தயாரிப்பாளர்களுக்கும் ஒன்றுதான் என்கிறார். ''மக்கள்தான் தீர்ப்பளிக்கிறார்கள். எங்களால் படத்தை ஓட வைக்க முடியாது'' என்கிறார் அவர்.

இன்று தொலைக்காட்சி அலைவரிசைகளை விநியோகிக்கும் கேபிள் இணைப்பு, செய்மதி தொலைக்காட்சி அலைவரிசைகளை விநியோகிக்கும் டி.டி.எச் சேவை, நாளிதழ், வார இதழ், பண்பலைவரிசைகள் என ஊடகங்களின் ஆதிமுதல் அந்தம் வரை (வெர்ட்டிகல் இன்டக்ரேசன்) ஒரே குழுமத்தின் கட்டுப்பாட்டில் வந்து இருப்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஊடகத் துறையில் இத்தகைய ஏகபோகம் உருவாகும்போது . உண்மையோ இல்லையோ அவர்கள் சொல்வதுதான் செய்தி என்ற நிலைமை உருவாகிறது.

இலங்கையில் போர் உச்சத்திலிருந்த போது இத்தகைய ஊடக ஏகபோகத்தால் பல உண்மைச் செய்திகள் தமிழ் மக்களை சென்றடையவே இல்லை என்று சொல்கிறார் ஊடக நோக்கர் ஒருவர். அத்தகைய செய்திகளை வேறு தொலைக்காட்சிகள் ஒளிபரப்ப முற்பட்டபோது தொலைக்காட்சி அலைவரிசை விநியோகத்திலிருந்த ஏகபோகம் மூலம் அதன் ஒளிபரப்பு மக்களை எட்ட விடாது தடுக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்ததை அந்த ஊடக நோக்கர் தனது வலைப்பதிவில் பதிவு செய்திருக்கிறார்.

''அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் ஏற்கனவே இத்தகைய சட்டங்கள் உள்ளன. ஒரு ஊடகத்தை முழுமையா கட்டுப்படுத்தும் ஒரு நிறுவனமோ, தனி நபரோ மற்ற எந்த ஊடகத்தையும் கட்டுப்படுத்தும் அளவுக்கான பங்குகளை வைத்துக் கொள்ள முடியாது (controlling stake). மக்களுக்கு உண்மையான செய்திகள் சென்று சேர்வதற்கு ஒரு ஜனநாயக தேசத்தில் இத்தகைய சட்டம் மிகவும் அவசியமாகும்'' என்கிறார் அந்த் ஊடக நோக்கர்.

*(வளரும்)*



பேரன் அருள்நிதியின் *வம்சம்* பட இசை இறுவட்டை வெளியிட்டு வைத்தார் முதல்வர் கருணாநிதி. விஜய், சூரியா போன்ற முன்னணி நட்சத்திரங்களும் வந்திருந்தார்கள்.

**இலங்கையில் போர் உச்சத்தில் இருந்த போது இவர்களின் ஊடக ஏகபோகத்தால் பல உண்மைச் செய்திகள் தமிழ் மக்களைச் சென்றடையவில்லை. வேறு தொலைக்காட்சிகள் ஒளிபரப்ப எடுத்த முயற்சிகளும் தடுக்கப்பட்டன.**

### துரைதயாநிதி அழகிரி



**ஆரம்பம்: கௌதம் மேனன் இயக்கிய வாரணம் ஆயிரம் படத்தை இவரது கிளவுட் நைன் நிறுவனம் 2008ல் வெளியிட்டது.**

**வெளிவந்த படங்கள்: இவர் தயாரித்த முதல் படமான *தமிழ்ப்படம்* பெரு வெற்றி. தமிழ் கதாநாயகர்களைக் கிண்டல் செய்ததற்காக பேசப்பட்டது. கார்த்தி நடித்த *பையா, நான் மகான் அல்ல* படங்களையும் வெளியிட்டார்.**

அடுத்து: *மங்காத்தா, தூங்கா நகரம்* தயாரிப்பில். *ரத்தச் சரித்திரம், வா (குவார்ட்டர் கட்டிங்)* வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்தான் ஆடைத் தொழிற்சாலையில் 2000 இலங்கையர் பணிப் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஒக். 14

ஜோர்தான் அம்மான் நகரிலுள்ள 'கிளெனிக்' எனும் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த 2 ஆயிரம் ஆண், பெண் பணியாளர்கள் கடந்த சனிக்கிழமை முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த தொழிற்சாலையில் பணிபுரியும் இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கு மிடையில் ஏற்பட்ட முரண்பாடொன்றே பணிப் பகிஷ்கரிப்பில் முடிந்துள்ளதாக ஜோர்தான் நாட்டுக்கான இலங்கை தூதுவராலய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தங்கியிருக்கும் விடுதியில் ஏற்பட்ட சர்ச்சையொன்று கைகலப்பில் முடிந்தபோது இரு இலங்கை வாலிபர்கள் சிறு காயங்களுக்குள்ளானதாகவும், படுகாயமுற்ற பங்களாதேஷ் வாலிபன் ஒருவர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதனையடுத்து தங்களுக்கென வேறான தங்கும் விடுதி வேண்டுமென இலங்கையர்கள் தொழிற்சாலை நிர்வாகமும் அவர்களது வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்தது. எனினும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் தமது பணிப் பகிஷ்கரிப்பைத் தொடர்கின்றனர்.

'களெனிக்' நிறுவனம் உலகெங்கும் வியாபித்துள்ள பிரபலமான நேரத்தில் சம்பளம் மற்றும் இதர வசதிகளை ஊழியர்களுக்கு வழங்குவதில் முன்னுதாரணமாக விளங்கும் ஒரு நிறுவனமெனவும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)


## மணமக்கள் தேவை

78இல் பிறந்த 4இல் செவ்வாய் 39½ பாவமுடைய கனடா பிரஜாஉரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.

80இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 15½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற சொப் வெயர் இஞ்சினியருக்குப் படித்த அழகான மணமகள் தேவை.

79இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 15 பாவமுடைய சிங்கப்பூரில் வேலை செய்யும் இஞ்சினியருக்குப் பட்டதாரி மணமகள் தேவை.

86இல் பிறந்த 4இல் செவ்வாய் 47¼ பாவமுடைய ஜேர்மன் பிரஜா உரிமைபெற்ற மணமகளுக்கு ஜேர்மனியில் அல்லது ஊரில் பட்டதாரி மணமகன் தேவை.

82இல் பிறந்த 2இல் செவ்வாய் 23 பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.

தொடர்பு:
காலக்கண்ணன் திருமண சேவை
இல. 171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி,
நல்லூர் வடக்கு வீதி, நல்லூர்.
தொ. பே.: 0214920266,
(104714) 0776070862.


## வர்த்தக நிலையங்களின் முன்னால் நிறுத்தப்படும் சைக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஒக். 16

யாழ்.நகரின் வர்த்தக நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வருவோர் சைக்கிளை வீதியில் பூட்டி வைத்து விட்டுச் சென்றும் சைக்கிள்கள் திருடப்படுகின்றன எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஆஸ்பத்திரி வீதியில் பெண் ஒருவர் சைக்கிளை நிறுத்திவிட்டு பொருள்கள் கொள்வனவு செய்வதற்காக சென்றவேளை அவரின் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பதனால் மக்கள் தமது சைக்கிள்களைப் பாதுகாப்பு தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204-26)

## மேசன் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஒக். 16

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்தால் மேசன் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப் பயிற்சிநெறிக்கு தரம் 9வரை கல்விகற்ற 16-35 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். (ஒ-10)


## விற்பனைக்கு

கறவை பசு, ஆடு மற்றும் புளியமரம், வேப்பமரம் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 'செல்லவேல்',
10, கல்லூரி வீதி,கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## விற்பனைக்கு

யாழ்.நவீன சந்தையில் உள்ள கடை ஒன்றின் சோக்கேஸ், தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776306733, 0213201090. (104680)

## மணமகள் தேவை

வயது 31 BSC (Computer Science) MCSA (MESSAGING), MCSE படித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு A/L படித்த பெண் தேவை.
தொடர்பு: 0712924878. (104696)

## விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள, வெள்ளை நிற, ISUZU டபிள்கப் (பிக்கப்) விற்பனைக்குண்டு. நிறுவனங்களிற்கும் வீட்டுப் பாவனைக்கும் ஏற்றது.
தொடர்பு:
0776306733, 0213201090. (104681)

## மணப்பெண் அலங்காரம்

கொழும்பின் முன்னணி அழகுக் கலை நிபுணரால் மணப் பெண் அலங்காரம் (Full Package) உங்கள் இரசனைக்கேற்ப மிகச் சிறந்த முறையில் நியாயமான கட்டணங்களில் செய்து தரப்படும்.
தொடர்பு:- 0777581332


# ரூபா 25 லட்சம் மோசடியின் பின்னணியில் பாடசாலை அதிபர் வெளிநாடு செல்லத் தடை

கொழும்பு, ஒக். 16

25 லட்சம் ரூபா பணமோசடியில் சிக்கிய கொழும்பு-தெஹிவளைப் பகுதி பாடசாலை ஒன்றின் அதிபர் நாட்டைவிட்டு வெளியேறக் கூடாதென கல்கிசை நீதிவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்கிழமை உத்தரவிட்டது.

கல்கிசை பிரதான நீதிவான் நிரோஷா பெர்ணான்டோ இத்தடை உத்தரவைப் பிறப்பித்தார். தடை உத்தரவின் பிரதி ஒன்று குடிவரவு - குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

மோசடி தொடர்பில் ஜனாதிபதிக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து ஜனாதிபதி பிரிவைச் சேர்ந்த பொலிஸார் விசாரணை நடத்தினர்.

அப்போது, குறிப்பிட்ட அதிபர் கடந்த மூன்று வருடங்களில்பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்துள்ளார் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார் - என நீதிமன்றில் பொலிஸாரால் குறிப்பிடப்பட்டது. (சி)


## காணி விற்பனைக்கு

நல்ல தண்ணீர்க்கிணறு, சுற்று மதில் என்பவற்றுடன் யாழ். கல்வி வலயத்துக்கு அருகில் இல.151, செம்மணி வீதி, ஆடியபாதம் வீதி ஆகிய இருவழிப்பாதை கொண்ட 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர் மானிக்கலாம். பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0779051432

## German, Swiss மொழிகள்

German, Swiss மொழி வகுப்புகள் German இல் இருந்து வந்த ஆசிரியையால் நடத்தப்படுகின்றன.
தொடர்புகளுக்கு:- No.10, Palaly Road, Jaffna.
T.P: 0771604823

## காணி விற்பனைக்கு

5 பரப்பு தோட்டக்காணி கிணற்றுடன் இராசவீதி, கோப்பாயில் (லைடன் பாமுக்கு அருகில்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: வே.தேவராசா, மானிப்பாய் றோட், அராலி, கோப்பாய் மத்தி. தொ.பே. 0776514776

# IDM Affiliated Campus-Jaffna
## School of Software Engineering

அனேக பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்



மென்பொருள் கட்டமைப்புப் பொறியியல் துறையில் உங்கள் பிள்ளைகளும் Engineer ஆகிட முடியும் என்பது உங்களுக்குத்தெரியுமா?

வெற்றிகரமான 2வது பிரிவு

C Language | C ++ | Java | ASP.net

October 17 ற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்

இலங்கையின் புகழ்பூத்த விரிவுரையாளர்
திரு.G.ரமணன்
(கொழும்பு தலைமை அலுவலகத்திலிருந்து)

Scholarships available for University Students

முன்பதிவுகளுக்கு 021 222 9901

IDM City Campus # 3

IDM Affiliated Campus-Jaffna
# 216,Navalar Road,Jaffna


## சேவை நலன் பாராட்டும் 60ஆவது அகவையும்

16.10.2010



### திரு. சின்னத்தம்பி பகவத்சிங்கம்

SLPS I (Social St.SPE.TRD)

(அதிபர், யா/நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை)

மூன்று பத்தோடு இரண்டு வருடங்கள் சேவை செய்து
ஆன்ற நல் அதிபராகி அவனியோர் போற்றும் வண்ணம்
ஐந்துடன் நான்கு வருட அரும்பணி இங்கு செய்த
நெஞ்செலாம் நெகிழுதையா நிந்தனின் பிரிவையெண்ண
பிஞ்சுகளோடு எங்கள் நெஞ்செலாம் நிறைந்த உந்தன்
வஞ்சகமற்ற பேச்சும், வாய்மை நிறைந்த அன்பும்
கடமையே கண்ணென்றேத்தி கருதிநீர் செய்த சேவையை
மண்ணது இருக்குமட்டும் மக்களும் போற்றி நிற்பர்
இன்றுமது பிறந்த நன்நாளிலே
கருதரிய மனைவி மக்களுடன் பலவளமும்
பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

யா/நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை,
நவக்கிரி, புத்தூர்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.சங்கத்தினர், பெற்றோர்,
பழைய மாணவர்கள்.

(104678)


## Piano/Violin Notes

Organ, Guitar வயலின், புல்லாங்குழல், வீணை, நாதஸ்வரம் ஆகிய இசைக்கருவிகளுக்கான 310 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு Organ, Guitar புல்லாங்குழல் ஆகிய பயிற்சி வகுப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
கரவீணா இசை மன்றம்
75,கோயில் வீதி, நல்லூர். T.P:- 0777031293

## ENGLISH

ஆங்கிலத்தினை பேசுவதாயின்
1. இலக்கண வசன உருவாக்கம் வேண்டாம்
2. தமிழிலிருந்து மொழிமாற்றம் வேண்டாம்
இலகுவாக வேகமாக ஆங்கிலத்தை பேசுவதற்கான
3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறியின்
புதிய பிரிவுகள் இன்று ஆரம்பம்
பிரிவுகள்: 9-10, 11-12, 1-2, 3-4, 5-6
பல்கலைக்கழக மற்றும் A/L எடுத்த மாணவர்கள், அரச, தனியார் அலுவலர்கள் பயிற்சியில் சேரலாம்
ஆங்கிலம் பேசுவதற்கும், இதுவரைகாலம் கற்பிக்கப்படும் இலக்கண விளக்கங்களுக்கும் எந்த தொடர்புமில்லை
My Way English
182, Stanley Road, Jaffna. 0771 2 ... 35


## 25 ஆவது திருமண நிறைவு விழா



இத்தாலியில் வசிக்கும் திரு.அந்தோனிமுத்து ஜோர்ஜ் (மகேந்திரன்), திருமதி ஜோர்ஜ் ஞானமலர் (குயின்) இவர்கள் புனித சாந்த நின்பா தேவாலயத்தில் 25 ஆவது நிறைவு விழாவை இன்று (16.10.2010) சனிக்கிழமை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

இவர்களை வாழ்த்தும்:
திரு.திருமதி அன்ரன் ஞானசீலி (அருள்)
மகள் மேர்ஜியா (இத்தாலி)
நாரந்தனை, ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பாடசாலைக் கல்வி கிழக்கில் சீராக வேண்டும்

## திருகோணமலை திறப்பு விழாவில் முதலமைச்சர் உரை

திருகோணமலை, ஒக்.16

கிழக்குமாகாணப் பாலர் பாடசாலைகளை ஒன்றிணைக்கும் வகையில் மாகாண பாலர் பாடசாலைகளின் தலைமைப் பணிமனை, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தனால் புதன்கிழமை திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்குமாகாணத்திலுள்ள அனைத்து பாலர் பாடசாலைகளையும் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டு இதற்கான திட்டம் மாகாணசபையில் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனால் கொண்டு வரப்பட்டது. 'பாலர் பாடசாலை கல்வி நியதிச்சட்ட மூலம்' அங்கீகரிக்கப்பட்டு இதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. இதையடுத்தே தலைமைப்பணிமனை திருகோணமலையில் அமைக்கப்பட்டது.

முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் இத்திறப்புவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு:-

''இப்பணிமனை கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாலர் பாடசாலைகளையும், ஆசிரியர்களையும் பதிவு செய்தல், பாலர்பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் ஆகியவை குறித்து ஆராய்தல், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கானசம்பளசமமேம்பாட்டை அமுல்படுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும். கிழக்குமாகாண சபை பல்வேறு சட்ட மூலங்களை இயற்றியுள்ளது. எனினும் அவற்றில் பல இன்றும் அங்கீகரிக்கப்படவில்லை. இந்நிலையில் தற்போது பாலர் பாடசாலைப் பணியகத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

கிழக்கு மாகாணம் பாலர் பாடசாலைக் கல்வியில் 9ஆவது இடத்தில் உள்ளது. இது வேதனைக்குரியது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் காலத்தில் பாலர் பாடசாலைக் கல்வியை சீரமைப்பது தொடர்பாக இப் பணியகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நான் நம்புகிறேன்.

சமூகத்திற்காகப் பாடுபடும் புத்திஜீவிகள் குழாமைக் கொண்டு இப்பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது. தன்னாலான தியாக சிந்தனையோடு சேவையாற்றும்போது நாம் எதிர்பார்க்கும் பலனை எம்மால் அடைய முடியும்.

கடந்த காலங்களில் பல்வேறு இன்னல்களால் சிறுபிள்ளைகளுக்கான கல்வியை வழங்குவதில் பல இடர்பாடுகள் இருந்தன. பெற்றோர்கள்,கல்விகற்பதற்குப் பிள்ளைகளை வெளியில் அனுப்புவதற்கு அச்சப்பட்டார்கள். ஆனால் தற்போது அவ்வாறில்லை. இப்போதைய சாதகமான சூழலை எமது மக்கள் தக்கவகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

விசேடமாக நகரப்புறங்களை அண்டிய முன்பள்ளிகள் மிகவும் திறமையாகச் செயற்படுகின்றன. எனினும் பாலர் கல்வி அபிவிருத்தி அடைந்து விட்டது எனக் கூறமுடியாது. முக்கியமாக நாம் அக்கறை கொள்ள வேண்டிய பிரதேசங்கள் கிராமங்களே.

கிராமங்களிலுள்ள பிள்ளைகளுக்காக ஊதியம் இல்லாமல் அநேக ஆசிரியர்கள் சரியாகக் கல்வி புகட்டி வருகிறார்கள். இது ஓர் அர்ப்பணிப்பு. பெருந்தொண்டு. இது கல்வி மேம்பாட்டுக்கு ஒரு சாதகமான அம்சம்.

அதேவேளை, பெற்றோர்களின் அக்கறை இன்மை பொருத்தமற்ற சூழல் ஆகியவற்றால் பிள்ளைகளின் கல்வி சீராக இடம்பெறுவதில்லை. இவ்வாறான பிரச்சினைகளை எல்லாம் நிவர்த்தி செய்யும் ஒருமையமாக இப்பணிமனை திகழ வேண்டும்'' -இப்படி அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணப் பாலர் பாடசாலைக் கல்விப் பணியகத் தவிசாளர் என்.நடராஜா, கிழக்கு மாகாண முதலமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி எஸ்.விக்கினேஸ்வரன், முதலமைச்சரின் செயலாளர் கலாநிதி எஸ்.அமலநாதன் ஆகியோர் இதில் பங்குபற்றினர். கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம், திருகோணமலை வலயக் கல்விப்பணிப்பாளர் சுலோசனா ஆனந்த ராஜா, கிழக்கு மாகாணப் பிரதி பிரதம செயலாளர் நிர்வாகம் எஸ்.கருணாகரன் ஆகியோர் உட்படப் பெற்றோர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (ஸி)

# ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கை ஒத்திகை, மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஒக்.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.மாலை 3 மணிக்கு ஆரம்பமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சிலமணிநேரம் வரை நீடித்தன.

இம்மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட திருச்செந்தூர், டச்பார் கிராம சேவகர் பிரிவுகள் ஆகியவை தெரிவு செய்யப்பட்டு, ஒத்திகைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் வழிகாட்டலில் ஒத்திகைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திருச்செந்தூர், டச்பார் பிரதேசங்களில் ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கையால் ஒன்று திரண்ட மக்கள் மட்டக்களப்பு விபுலானந்தாக் கல்லூரியில் ஒன்று சேர்ந்து அங்கிருந்து கலைந்து சென்றனர்.

கடந்த 2004 டிசம்பர் 26ஆம் திகதி ஆழிப்பேரலைத் தாக்கத்தின்போது திருச்செந்தூர், டச்பார் கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. சுமார் 1,200 பேர் அக் கிராமங்களில் பலியாகினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2,800 பேர் பலியாகினர். சுமார் 600 பேர் காணாமல் போய்விட்டனர். இம்மாவட்டத்தில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன. (ஸி)




# மருதமுனை அல்- மனார் கௌரவிப்பு வைபவம்

மட்டக்களப்பு, ஒக். 16

மருதமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த அதிபர்கள்,ஆசிரியர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் வைபவமொன்று கடந்த செவ்வாய்க் கிழமை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. மருதமுனை ஹியூமன்லின்க் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு அவ்வமைப்பின் தலைவர் கே. எம். ரொஷான் தலைமை தாங்கினார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. தௌபீக் பிரதம அதிதியாகவும், கல்முனை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜலீல், மட்டக்களப்பு மத்திய கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மேற்படி வைபவத்தில் மருதமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் என 400 பேர் பாராட்டிக் கௌரவிக் கப்பட்டனர். (ஸி)

# மலையக மாணவரின் கணனி அறிவை மேம்படுத்துவதே எங்களது நோக்கம்!

## இந்திய உதவித் தூதுவர் மிஸ்ரா தெரிவிப்பு

கண்டி, ஒக். 16

மலையக மாணவர்களின் கணனிக் கல்வியினை மேம்படுத்துவதே எமது நோக்கம். இதற்காக மலையகப் பாடசாலைகளுக்கு கணனிக் கூடங்களை வழங்கினோம். அத்துடன் கணனி ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளையும் வழங்கி வருகிறோம். ஏற்கனவே கடந்த ஒகஸ்டில் இந்திய வளவாளர்களை வரவழைத்து 45 நாள் பயிற்சியை வழங்கினோம். அதேபோன்று எதிர்வரும் நவம்பர் மாதத்திலும் 21 நாள் பயிற்சியை வழங்கவுள்ளோம். - இவ்வாறு கண்டி இந்திய உதவித் தூதுவர் ஆர்.கே. மிஸ்ரா தெரிவித்தார்.

மடுல்கலை கந்தகெட்டிய தமிழ் வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாணவர்களுக்கு கணனி நூல்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

13 பாடசாலைகளைச் சேர்ந்த 305 மாணவர்களுக்கு கற்கை உபகரணங்கள் வழங்கப்பட்டன. அதிபர் பி. ராஜகோபால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மிஸ்ரா இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த முறை கணனி ஆசிரியர்களுக்கு மென்பொருள் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டன. அடுத்த ஆசிரிய பயிற்சி நவம்பரில் நடைபெறும்.

இதன்போது இந்திய வளவாளர்களினால் கணனி மென்பொருள், வன்பொருள் மற்றும் கணனி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும் என்று மிஸ்ரா மேலும் தெரிவித்தார்.

இந்திய உதவித் தூதுவர் தென்னங்கன்று ஒன்றை நட்டு வைத்ததுடன், இந்திய அரசு வழங்கிய கணனிக் கூடத்தையும் பார்வையிட்டார். அத்துடன், இவ்வித்தியாலயத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு (யோகானந்தன் ஹரிந்திரன்-160, மகாதேவன் சுவேதிகா -157, மகாதேவன் பிரபாழினி-153) பதக்கம் அணிவித்து கௌரவித்தார். (ஸி)




# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதில் இ.தொ.கா. பின்நிற்காது

## அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 16

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் வரப்பிரசாதங்களைப் பெற் றுக் கொடுப்பதில் இ.தொ.கா. ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை. தக்க தருணத்தில் இதனை நிரூபித்துள்ளோம்.- இவ்வாறு அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும், தேசிய அமைப் பாளருமான எஸ்.ஜெகதீஸ்வரன், நிர்வாகச் செயலாளர் எம். சந்திரன் ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக் கையில் தெரிவித்துள்ளனர். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவைவருமாறு:-

அரசுகள் மாறிமாறி ஆட்சிக்கு வந்தாலும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் இ.தொ.கா. அக்கறை செலுத்தியே வந்திருக்கிறது. 70 வருடங்களைக் கடந்த நிலையிலும், தனது பேரம்பேசும் சக்தியை கைவிடாது முதலாளிமார் சம்மேளத்துடனும், அரசுடனும் துணைபோகாத வண்ணம் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுத்து வந்துள்ளது.

2008ஆம்ஆண்டில் அரச - தனியார் துறைக்கு அறிவித்த சம்பள உயர்வு, தோட்டத் தொழிலாளர்களுக்கும்கிடைக்கவேண்டுமெனப் போராடியது. இதைத் தவிர கூட்டு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க முன்னரும், பின்னரும் சம்பள உயர்வைத் தீர்மானிப்பது இ.தொ.கா. என்பதை மறுப்பதற்கில்லை. இவ்வாறான தொரு நிலையில் மலையக தொழிற்சங்க வாதிகளின் அறிக்கைகள் எமக்கு மிகுந்த கவலையைத்தந்துள்ளன.

அறிக்கைப் போரால் தொழிற் சங்கம் நடத்துபவர்களுக்கு வரலாறில்லை. முகவரி தொலைந்து போனதையே காணமுடிகிறது. தொழிலாளர்களின் விடயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டு வரும் இ. தொ.காவுக்கு பாடம் கற்பிக்க முனைபவர்கள் தோட்டத் தொழிலாளர்களுக்காக இதுவரை என்ன செய்திருக்கிறார்கள்? பத்திரிகை அறிக்கைகளையும்,செய்திகளையும்விடுப்பதைத்தவிர வேறுஒன்றுமில்லையே.

அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செய லாளருமான ஆறுமுகன் தொண்டமான், பிரதிய மைச்சரும், தலைவருமான முத்து சிவலிங்கம் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாக தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் முதலாளிமார் சம்மேளத்துடன் பேச்சுகளுக்கான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2011 மார்ச் 31 இல் கூட்டு ஒப்பந்தம் நிறைவடைகிறது. அதனைப் புதுப்பிக்கும் போது தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உள்ளிட்ட இதர விடயங்களையும் பரிசீலனை செய்ய இ. தொ.கா. எண்ணியுள்ளது.- இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஸி)

# சகல இறப்பர் தோட்டங்களுக்கும் ரூ.25 கோடி செலவில் மழைக்கவசம்

கொழும்பு, ஒக். 16

நாட்டிலுள்ள சகல இறப்பர் தோட்டங்களுக்கும் மழைக் காலங்களில் பயன்படுத்தக் கூடிய பாதுகாப்புக் கவசங்கள் இலவசமாக வழங்கப்படும். இதற்கென 25 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும் - என பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் முகமாக நிவித்திகலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு-

இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு கடந்த காலங்களிலும் மழைக் கவசங்கள் வழங்கப்பட்டன. அவை தரமற்றவை. இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவை. அத்துடன் அனுபவ மற்ற வர்களால் அவை பொருத்தப்பட்டன. இவற்றால்எதிர்பார்த்தபலன்கிட்டவில்லை.

எனவே, இனிமேல் வழங்கப்படும் கவசங்களின் தரமும், அவற்றைப் பொருத்துபவர்களின் தராதரமும் கவனத்தில் கொள்ளப்படும். ஐந்தாண்டுத் திட்டமொன்றின் கீழ் இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு காப்புறுதி மற்றும் ஓய்வூதிய வசதிகள் பெற்றுத் தரப்படும்.- இவ்வாறு சமரசிங்க தெரிவித்தார்.

# பொகவந்தலாவை வைத்தியசாலைக்கு மத்திய மாகாண சுகாதார அமைச்சர் விஜயம்

கொழும்பு, ஒக். 16

இலங்கைத் தொழிலாளர் காங்கிஸின் உதவிச் செயலாளரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான கணபதி கனகராஜின் அழைப்பையேற்று, மத்திய மாகாண சுகாதார அமைச்சர் சுனில் அமரதுங்க கடந்த புதன்கிழமை பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார்.

இவருடன் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் உட்பட அதிகாரிகள் பலரும் வருகை தந்திருந்தனர்.

44 தோட்டங்களை உள்ளடக்கிய பொகவந்தலாவையில் வாழும் சுமார் அறுபதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த மாவட்ட வைத்தியசாலை மூலமாகவே தமது வைத்தியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் பழைமை வாய்ந்த கட்டடங்கள் திருத்தப்பட வேண்டியதுடன் மேலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

குறைபாடுகளை அவதானித்த மத்திய மாகாண சுகாதார அமைச்சர், 2011ஆம் ஆண்டில் மத்திய மாகாண வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், அப்போது பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பாக தமக்கு விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கும், சுகாதாரத் திணைக்கள இயக்குநருக்கும் அமைச்சர் உத்தரவிட்டார். (ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
### கல்விப் பொதுத்தராதர (சா/த) மாதிரிவினாத்தாள்

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்கள்
திரு.கே.கே.உதயகுமார்,
பிறிலியன்ட் கல்வி நிலையம்
தொலைபேசி: 077 7703118
திரு.எஸ்.ரி.ஜனார்த்தனன்
தொலைபேசி: 0779 522 522

G.C.E.(O/L) கொழும்பு வலம்
வெளியீடு - 4
விஞ்ஞானம்

பரீட்சையில் வெற்றிபெற என்றும் இணைந்திருங்கள் உதயனுடன்...

## விஞ்ஞானம் 01 பகுதி - நேரம் 1 மணித்தியாலம்

01. வித்துகள் இல்லாத தோடம்பழங்களை உண்டாகும் தாவரத்தின் அரும்பு (ஒட்டுமுளை) எடுக்கப்பட்டு வித்துகள் உள்ள தோடம்பழங்களை உண்டாகும் தாவரத்தில் (ஒட்டுக்கட்டையில்) ஒட்டப்பட்டது. உண்டாகும் தோடம்பழங்கள் தொடர்பாக பின்வரும் எக்கூற்று திருத்தமானது?
    1) ஒட்டுக்கட்டை-வித்துகள் உள்ளனவும் வித்துகள் இல்லாதனவுமான தோடைகளை உண்டாக்குகின்றது.
    2) ஒட்டுக்கட்டை - வித்துகள் இல்லாத தோடைகளை மாத்திரம் உண்டாக்குகின்றது.
    3) ஒட்டுமுளை - வித்துகள் இல்லாத தோடைகளை மாத்திரம் உண்டாக்குகின்றது.
    4) ஒட்டுமுளை - வித்துகள் உள்ளனவும், வித்துகள் இல்லாதனவுமான தோடைகளை உண்டாக்குகின்றது.
02. உணவுச்சங்கிலியைக் காட்டிலும் உணவுவலை சூழற்தொகுதிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதற்குப் பின்வருவனவற்றில் எது காரணம்?
    1) உணவுச்சங்கிலியிலே மேல் இணைப்புகளில் பதார்த்தங்கள் ஒன்றுசேரும் அதேவேளை உணவு வலையில் அவை அவ்வாறு ஒன்றுசேராமல் இருத்தல்.
    2) உணவு வலையில் உள்ள அங்கிகளின் எண்ணிக்கை உணவுச்சங்கிலியில் உள்ள அவ் எண்ணிக்கையைக் காட்டிலும் குறைவாக இருத்தல்.
    3) உணவு வலையில் ஓர் இணைப்பு தகர்ந்துபோனாலும் மேல் இணைப்புகளில் உள்ள அங்கிகள் தேவையான சக்தியைப் பெறத்தக்கதாக இருத்தல்.
    4) உணவு வலையில் போலன்றி உணவுச்சங்கிலியில் உற்பத்தியாக்கி இருக்கவேண்டியமை.
03. மனிதச் செவியின் ஊத்தேக்கியாக் குழாயின் மூலம் நிறைவேற்றப்படும் தொழில்,
    1) நடுச்செவிக்கும் தொண்டைக்கும் உள்ளே வளியின் அமுக்கத்தைச் சமமாய்ப்பேணல்.
    2) தடிமன் போன்ற தொற்றின்போது நடுச்செவியைப் பாதுகாத்தல்.
    3) தொண்டையில் இருந்து ஒலியை ஊடுகடத்தல்.
    4) சமநிலை பற்றிய உணர்ச்சிகளைப் பெறுதல்.
04. உயிர்ப்பல்வகைமையைப் பேணுதல் தொடர்பாகப் பின்வரும் எக்கூற்று பிழையானது?
    1) உயிர்ப்பல்வகைமையைப் பேணுதல் அங்கிகள் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதற்கு முக்கியத்துவமானதன்று.
    2) உயிர்ப்பல்வகைமையைப் பேணுதல் புவியில் அங்கிகள் நிலைத்திருப்பதற்கு உதவுகின்றது.
    3) உயிர்ப்பல்வகைமையைப் பேணுதல் இயற்கையாகப் புதிய பேதங்கள் உண்டாவதற்குத் தடையாக இருப்பதில்லை.
    4) உயிர்ப்பல்வகைமையைப் பேணுதல் மனிதன் மூலம் செய்யப்படவேண்டிய செயலாகும்.
05. பின்வருவனவற்றுள் ஒருமடிய (n) கலம்,
    1) நரம்புக்கலம். 2) விந்து.
    3) காவற்கலம். 4) புடைக்கலவிழையக் கலம்.
06. பெற்றோரிடமிருந்து எச்சங்களுக்குச் சிறப்பியல்புகளை ஊடுகடத்தும் பரம்பரை அலகுகள் காணப்படுவது,
    1) இழைமணிகளில். 2) புன்வெற்றிடங்களில்.
    3) குழியமுதலுருவில். 4) நிறமூர்த்தங்களில்.
07. கீதாவின் கை சூடான தேநீர்ப் பாத்திரத்தைத் தொட்டவுடன் அவள் உடனே கையை அப்பால் எடுத்தாள். இச்செயற்றொடரினிடத்து நரம்புக் கணத்தாக்குகள் செல்லும் ஒழுங்குமுறை,
    1) தோல் → புலன் நரம்பு → இடை நரம்புக்கலம் → இயக்கு நரம்பு → தசை
    2) தோல் → இயக்கு நரம்பு → இடை நரம்புக்கலம் → புலன் நரம்பு → தசை
    3) தசை → புலன் நரம்பு → இடை நரம்புக்கலம் → இயக்கு நரம்பு → தோல்
    4) தசை → இயக்கு நரம்பு → இடை நரம்புக்கலம் → புலன் நரம்பு → தோல்
08. குறித்த சாகியம் ஒன்றில் ஒரே இனத்தைச் சேர்ந்த உறுப்பினர் அழைக்கப்படுவது,
    1) குடித்தொகை என. 2) குடும்பம் என.
    3) வருணம் என. 4) கணம் என.
09. செவிச்சிற்றென்புகள் காணப்படும் செவியின் பகுதி,
    1) அகச்செவி. 2) நடுச்செவி.
    3) நத்தைச்சுருள். 4) அரைவட்டக் கால்வாய்.
10. கருக்கட்டிய நுகம் கருப்பையை அடைய எடுக்கும் காலம்,
    1) 5-6 நாட்கள். 2) 6 வாரங்கள். 3) 4 வாரங்கள். 4) ஒரு மாதம்.
11. முதிர் மூலவுரு விருத்தி தொடர்புடைய கூற்றில் பிழையானது எது?
    1) 3 மாதங்களில் மனிதத் தோற்றம் பெறும்.
    2) 5 மாதங்களில் இதயத்துடிப்பு வெளியில் கேட்கும்.
    3) 6 மாதங்களில் கண்மடல் திறக்கும்.
    4) பிறப்புக்கு அண்மையில் 5 கி.கி நிறை உடையது.
12. பிறப்புரிமைப் பொறியியல் மூலம் மனித இன்சுலின் தயாரிக்கும் முறையின் படிகள் ஒழுங்கு மாறித் தரப்பட்டுள்ளன, அவற்றை சரியான ஒழுங்கில் காட்டும் விடை யாது?
    a பரம்பரை அலகு புகுத்தப்பட்ட பிளாஸ்மிட் மீண்டும் E.coli பக்றீரியாவில் புகுத்தல்.
    b மட்டுப்படுத்தும் (Restriction) நொதியம் மூலம் இன்சுலினின் தொகுப்புக்கு உரிய DNA ஐ வெட்டி எடுத்தல்.
    c DNA புகுத்திய பக்றீரியாவைப் பெருகவிடல்.
    d பக்றீரியாவில் இருந்து பிளாஸ்மிட்டை வெளியே எடுத்தல்.
    e பிளாஸ்மிட்டில் வெட்டிய DNA ஐப் பொருத்துதல்.
    1) a,b,c,d,e 2) b,a,c,d,e 3) b,d,e,a,c 4) c,d,b,e,a
13. பின்வருவனவற்றில் தள ஆடியினால் உண்டாக்கப்படும் விம்பத்தின் சிறப்பியல்பாக அமையாதது,
    1) விம்பம் மெய்விம்பமாக இருத்தல்.
    2) விம்பம் பக்கநேர்மாறலுக்கு ஆளாகியிருத்தல்.
    3) விம்பத்தின் பருமன் பொருளின் பருமனுக்குச் சமனாக இருத்தல்.
    4) விம்பம் எப்போதும் ஆடிக்குப் பின்னால் உண்டாதல்.
14. கடதாசியினால் செய்யப்பட்ட படகு ஒன்று குளத்தில் உள்ள அமைதியான நீரின் மீது வைக்கப்பட்டுள்ளது. அந்நீரின் மீது சிறு கல்லை எறியும்போது அலை உண்டாகையில் நிகழ்வது பின்வருவனவற்றுள் எது?
    1) அலை செல்லும் திசையிலே நீர் பாய்தல்.
    2) படகு அலை செல்லும் திசையிலே செல்லல்.
    3) படகு நீரின்மீது ஓர் இடத்திலே மேலும் கீழும் செல்லல்.
    4) அலை செல்லும் திசைக்கு எதிரான திசையில் படகு அசைதல்.
15. நிலத்தில் இருந்து பந்து ஒன்று மேலே எறியப்பட்டது. நிலைக்குத்தாக மேல்வேகம் நேரானது எனக் கருதும்போது பின்வரும் எந்த வேக - நேர வரைபின் மூலம் பந்தின் இயக்கம் காட்டப்படும்?




16. ஆய்வுகூடத்திலே வாயுக்களைச் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் முறைகள் சில இங்கே உருக்கள் A, B, C ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளன. காபனீரொட்சைட்டு வாயுவைச் சாடியிலே சேகரிக்க பயன்படுத்தத்தக்கது,




    1) A மாத்திரம்.
    2) B மாத்திரம்.
    3) A, C ஆகியன மாத்திரம்.
    4) B, C ஆகியன மாத்திரம்.
17. மின்கலத்தை முதன்முதலாக அமைத்தவர்,
    1) லூயிஜி கால்வானி.
    2) அலெக்ஸ்சாந்திரோ வோல்ற்றா.
    3) ஹம்பிறி டேவி. 4) மைக்கல் பரடே.
18. செறிந்த ஐதரோகுளோரிக் அமிலத்தில் நனைக்கப்பட்ட பென்சில் கூரிலே ஓர் உலோகக் குளோரைட்டு X இல் சிறிதளவை இட்டு பன்சன் சுவாலையில் பிடிக்கும்போது கடும் சிவப்புநிறச் சுவாலை காணப்படுகின்றது. உப்பு X யாதாக இருக்கலாம்?
    1) NaCl 2) KCl 3) LiCl 4) $MgCl_2$
19. மின்னோட்டம் செலுத்தப்படும்போது மென்னிரும்பு காந்தமாக மாற்றப்படும். இக் காந்தத்தின் முனைகள் சரியாகக் குறிப்பது,




    1) ஓட்டம் வலஞ்சுழியாகப் பாயுமாயின் அந்த அந்தம் மின்காந்தத்தின் தென்முனைவு.
    2) மின்னோட்டம் வலஞ்சுழியாகப் பாயுமாயின் அந்த அந்தம் மின்காந்தத்தின் வடமுனைவு.
    3) ஓட்டத்தின் திசையைக்கொண்டு காந்தத்தின் முனையைக் கண்டுபிடிக்க முடியாது.
    4) மேற்கூறப்பட்ட மூன்றும் பிழையானவை.
20. ஒரு கம்பிச் சுற்றின் ஊடாக மின்னோட்டம் செலுத்தப்படும்போது காந்தப்புலம் ஒன்று பெறப்படுவதை உருகாட்டுகின்றது. உரு தொடர்பான கூற்றுக்களுள் எக்கூற்றுப் பிழையானது?



    1) மின்னோட்டத்தின் திசைக்குச் செங்குத்தாகக் காந்தப்புலம் பெறப்படும்.
    2) மின்னோட்டத்தை கீழிருந்து மேலாகச் செலுத்தும்போது உருவில் காட்டப்பட்டுள்ளவாறு பெறப்படும் மின்னோட்டம், மேலிருந்து கீழாகச் செலுத்தப்படும்போது அதன் எதிர்த்திசையில் காந்தத்தின் திசை இருக்கும்.
    3) உருவில் காட்டப்பட்டுள்ள புலத்தின் திசை வலஞ்சுழியாக அமைந்துள்ளது.
    4) மின்னோட்டத்தின் திசைக்கேற்ப காந்தப்புலக் கோடுகளின் திசையைக் கண்டறிய வலக்கை விதியை அல்லது நியூட்டனின் விதியைப் பயன்படுத்தலாம்.
21. கழியொலி அலைகள் தொடர்பான பிழையான கூற்று,
    1) மனிதன் உட்பட நாய், வெளவால் போன்ற விலங்குகள் இவ்வொலி அலையைக் கேட்கக்கூடியதாக இருக்கும்.
    2) சிறிய கடிகாரம் போன்ற நுண்ணிய உபகரணங்களைக் கழற்றாமல் சுத்திகரிக்க கழியொலி பயன்படுகிறது.
    3) உலோகப் பகுதிகளை காய்ச்சி இணைப்பதற்குப் பயன்படும்.
    4) அலுமினியம் அதன் கலப்புலோகம் போன்றவற்றின் ஒட்சைட்டுப் படையை அகற்றுவதற்கும் கழியொலி பயன்படுகிறது.
22. நீரினுள் அலை ஒன்று செல்லுகையில்,
    1) நீர்த்துளிகளில் எவ்வித இயக்கமும் நிகழ்வதில்லை.
    2) நீரும் அலையுடன் செல்லும்.
    3) அலையானது சக்தியைக் கொண்டுசெல்லும்.
    4) நீர்த்துகளோ, சக்தியோ கொண்டுசெல்லப்படுவதில்லை.
23. இலத்திரனியல் சுற்றில் பயன்படுத்தப்படும் படலை வகைகள் தரப்பட்டுள்ளன. இவற்றைச் சரியாகக் குறிப்பது முறையே,



    1) OR படலை, NOT படலை, AND படலை.
    2) AND படலை, OR படலை, NOT படலை.
    3) NOT படலை, OR படலை, AND படலை.
    4) OR படலை, AND படலை, NOT படலை.
24. பின்வரும் கொள்ளளவிகள் முறையே குறிப்பது,



    1) முற்றுணிந்த, மாறும், மின்பகுப்பு, சாதாரணம்.
    2) மின்பகுப்பு, சாதாரணம், முற்றுணிந்த, மாறும்.
    3) சாதாரண, மின்பகுப்பு, மாறும், முற்றுணிந்த.
    4) மாறும், முற்றுணிந்த, மின்பகுப்பு, சாதாரணம்.
25. கற்றயன் பரிமாற்றத்தகவு பற்றிக் கருதுக.
    A - களிமண் துணிக்கைகளால் புறத்துறிஞ்சப்பட்டிருக்கும் கற்றயன்கள் மண்ணீருக்கு விடுவிக்கப்படக்கூடியவை.
    B - இது தாவரங்களால் உள்ளெடுக்கப்படும் கனிப்பொருள்களின் அளவைப் பாதிக்கும் காரணியல்ல.
    C - மண்ணில் உள்ள கற்றயன்கள் மண்ணீர்க் கரைசலுக்குப் பரிமாற்றப்படுதல். இவற்றுள் சரியானவை,
    1) A யும், B யும் மாத்திரம். 2) A யும், C யும் மாத்திரம்.
    3) B யும், C யும் மாத்திரம். 4) A, B, C ஆகிய எல்லாம்.
26. வாயு ஒன்று நீரில் கரையும் அளவைப் பாதிக்கும் காரணி,
    1) வாயுவின் தன்மை. 2) நீரின் வெப்பநிலை.
    3) அமுக்கம். 4) யாவும் சரி.
27. NaOH இன் 0.2mol, $4.0dm^3$ நீர்க்கரைசலில் கரைந்திருப்பின் அக்கரைசலின் மூல் செறிவு,
    1) $1.0moldm^{-3}$ 2) $0.5moldm^{-3}$ 3) $2dm^{-3}$ 0mol 4) $4.0moldm^{-3}$
28. $2moldm^{-3}$ செறிவுள்ள $1dm^3$ குளுக்கோசுக் கரைசலைத் தயாரிப்பதற்கு தேவையான குளுக்கோசின் திணிவு ($C_6H_{12}O_6$ = 180g),
    1) 45g 2) 90g 3) 180g 4) 360g
29. 0.1M $AgNO_3$ கரைசலின் 250ml இல் அடங்கியுள்ள $AgNO_3$ இன் திணிவு (Ag = 108, N = 14, O = 16)
    1) 42.5g 2) 0.435g 3) 0.0425g 4) 4.35g
30. தரப்பட்டுள்ள யாதேனும் திரவம் ஓர் அமிலமாகுமா என்பதைத் தீர்மானிப்பதற்காகப் பின்வரும் அவதானிப்புக்களுள் எவற்றைப் பயன்படுத்தலாம்?
    A - அதனுள் இடப்பட்ட நீலப்பாசிச் சாயத்தாள் செந்நிறமாதல்.
    B - சோடியம் காபனேற்று சேர்க்கப்படின் காபனீரொட்சைட்டு வெளியேறுதல்.
    C - மக்னீசிய உலோகம் சேர்க்கப்படின் ஐதரசன் வெளியேறுதல்.
    1) A யும், B யும் மாத்திரம். 2) A யும், C யும் மாத்திரம்.
    3) B யும், C யும் மாத்திரம். 4) A, B, C ஆகிய எல்லாம்.
31. அம்புஜம் அக்கா தேயிலைச்சாயம் கொண்ட 150g சுடுநீரில் தேநீர் தயாரிக்க 25g சீனி சேர்த்த போது தேநீரின் சுவை போதாதிருந்தமையால் மேலும் 25g சீனி சேர்த்தாள். எனின், கரைசலின் w/w% யாது?
    1) 25/150 × 100% 2) 50/150 × 100%
    3) 50/200 × 100% 4) 25/200 × 100%
32. 2M, NaOH-250ml கரைசலையும், 0.5M, NaOH-250ml கரைசலையும் சேர்க்கும் போது உருவாகும் கரைசலின் மூலர்த்திறன்,
    1) 2M 2) 2.5M 3) 4M 4) 1.5M
33. உப்பளங்களில் கடல்நீரைப் பாத்திகளில் இட்டு ஆவியாக்குவதன் மூலம் கறியுப்புப் பெறப்படுகின்றது. இவ்வாறு பெறப்பட்ட கறியுப்பை வளிமண்டலத்தில் வைக்கும்போது நீர்க்கசிவு ஏற்படுவதற்குக் காரணம்,
    1) கறியுப்புக்கட்டியின் மேற்பரப்பில் உள்ள நீரில் உப்பு கரைதல்.
    2) கறியுப்பில் உள்ள மக்னீசிய மாசுக்கள் நீரை உறிஞ்சுதல்.
    3) கறியுப்பு வளிமண்டலத்தில் உள்ள நீரை உறிஞ்சுதல்.
    4) கறியுப்புக் கட்டிகளுக்கு இடையில் சேமிக்கப்பட்ட நீரில் கரைதல்.
34. சுண்ணாம்பு உற்பத்திக்காக முருகைக்கற்களை அகழ்ந்து எடுப்பது சட்டத்திற்கு முரணானது. இதனால் சூழல் மாசடைவதோடு கடல் அரிப்பும் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு மிகவும் பொருத்தமான நடவடிக்கை,
    1) முருகைக்கற்கள் அகழ்ந்து எடுப்பவர்களுக்கு கடும் தண்டனை வழங்குதல்.
    2) முருகைக்கற்கள் அகழ்ந்து எடுப்பவர்களின் வதிவிடங்களை மாற்றுதல்.
    3) அவர்களுக்கு வேறு வேலைவாய்ப்புக்களை வழங்குதல்.
    4) குறிப்பிட்ட சிலருக்கு அனுமதி வழங்குதல்.
35. அல்லுலோக மூலகங்கள்,
    1) C, P, S 2) Cl, Ar 3) Si, Ge
    4) விடைகள் 1, 2 சரியானவை.
36. பின்வரும் அமிலங்களுள் வன்மையானது,
    1) $CH_3COOH$ 2) $H_2CO_3$ 3) $H_2SO_4$ 4) HCOOH
37. ஒரு நாடு தாங்கத்தக்கதாக நிலைத்திருத்தலை மதிக்கும் சுற்றாடற் பற்றுள்ளவர்களின் உளப்பாங்கு எவ்வாறு இருத்தல்வேண்டும்?
    1) சுற்றாடலைப் பாதுகாத்தல் அரசாங்கத்தின் பொறுப்பாக இருத்தல்வேண்டும் என்பதாகும்.
    2) ஒருவர் தமது வீட்டைச் சுற்றியுள்ள சுற்றாடலைப் பாதுகாத்தலைத் தான் மாத்திரம் செய்யலாம் என்பதாகும்.
    3) சுற்றாடல் பற்றுள்ளவர்கள் சுற்றாடலில் இருப்பவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்பதாகும்.
    4) சுற்றாடல் வளத்தைச் சிக்கனமாக நுகரவும் பேணவும் வேண்டும் என்பதாகும்.
38. ''இது எமது நகர். இந்நகரைத் துப்புரவாக வைத்துக்கொள்வோம்.'' இது நகர் அதிகாரிகளினால் காட்சிப்படுத்தப்படும் அறிவிப்பாகும். இவ்வறிவிப்பில் உள்ள வேண்டுகோளை உமது பாடசாலையில் பின்வரும் எம்முறைகளில் நிறைவேற்றலாம்?
    A - உணவைச் சுற்றிக்கொண்டுவரும் பொலித்தீன் தாள்களுக்குப் பதிலாக மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துதல்.
    B - ரொபி சுற்றும் தாள்கள் போன்ற பொருட்களைப் பாடசாலை வளவில் அங்குமிங்கும் எறியாமல் குறித்த இடத்தில் இடுதல்.
    C - மீதி உணவுப்பொருள்களைப் பாடசாலைக் கானில் எறிதல்.
    1) A யும், B யும் மாத்திரம். 2) B யும், C யும் மாத்திரம்.
    3) A யும், C யும் மாத்திரம். 4) A, B, C ஆகிய எல்லாம்.
39. சுற்றாடலைப் பாதுகாத்தல் பற்றிய தலைப்பைத் தெரிவுசெய்யும் போட்டி உமது பாடசாலையில் நடைபெறும் எனின், உமது தீர்ப்புக்கு அமைய சுற்றாடல் பற்றிய மனப்பான்மையை விருத்தி செய்யத்தக்க சிறந்த தலைப்பு,
    1) சுற்றாடலை அழித்தால் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை.
    2) சுற்றாடலைப் பாதுகாத்தல் எமது பொறுப்பு.
    3) சுற்றாடல் எமதே; அது எமது செல்வம்.
    4) கரு ஆராய்ச்சி விரைவாக நின்றுவிடும்.
40. பகலிலே நுளம்பு கடித்த ஒருவருக்கு ஏற்படத்தக்க நோய்,
    1) மலேரியா. 2) யானைக்கால் நோய்.
    3) டெங்கு. 4) மூளை மலேரியா.

(17 ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்களே: உங்களுக்கு எழும் விளக்கமின்மை, தெளிவின்மைகள் என்பவற்றை குறித்த ஆசிரியர்களின் தொலைபேசி இலக்கங்களினூடாகத் தொடர்புகொண்டு இன்றைய தினம் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். (ஆசிரியர்கள்: திரு.கே.கே. உதயகுமார், திரு.எஸ்.ஜனார்த்தனன் தொலைபேசி இலக்கங்கள்: 077 7703118, 0779522522)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானம் - II

நேரம்: 3 மணித்தியாலங்கள்

(16 பக்கத் தொடர்ச்சி)

01. 1) கீழே ஒரு கலங்களின் கூட்டம் காட்டப்பட்டுள்ளது.




1. மேற்படி கலங்கள் தாவரக்கலமா? விலங்குக்கலமா?
2. நீர் மேலே கூறிய விடையை உறுதிப்படுத்த இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக.
3. A,B,C ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பெயரிடுக.
4. A,B,C ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளின் தொழில்களைப் பெயரிடுக.
5. மேற்படி கலங்களில் ஒன்றை இலத்திரன் நுணுக்குக்காட்டியினூடாக அவதானிக்கும் போது பெறப்படும் மேலதிக மூன்று கட்டமைப்புக்களைப் பெயரிடுக.

2) ஒத்த தொழில்களைப் புரிகின்ற ஒரு வகையான கலங்களின்கூட்ட இழையம் எனப்படும்.




1. ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டவற்றைப் பெயரிடுக.
2. B யின் அமைவிடங்களைக் குறிப்பிடுக. பிரதான தொழிலையும் குறிப்பிடுக.
3. D,E ஆகியன ஆக்கப்பட்டுள்ள கலவகைகளைக் குறிப்பிடுக.
4. வல்லுருக் கலவிழையத்தின் பிரதான தொழில் யாது?

02. மனிதன் புவியில் இருந்து பெற்றுக்கொள்ளும் பல்வேறு வகை வளங்களுக்கிடையே உலோகங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. உலோக வகைகள் வேறு மூலகங்களுடன் சேர்ந்து தாதுக்களாகக் காணப்படும்.

1) இயற்கையில் சுயாதீனமாக மூலக நிலையில் உள்ள உலோகங்கள் இரண்டு தருக.
2) தாதுக்களில் இருந்து உலோகங்ககளைப் பிரித்தெடுக்கும் முறைகள் எவை?
3) இரும்பு பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தும் உபகரணம் தரப்பட்டுள்ளது.




1. தரப்பட்டுள்ள அமைப்பின் பெயர் யாது?
2. A யின் ஊடாகப் புகுத்தப்படுகின்ற பதார்த்தங்கள் எவை?
3. தரப்பட்டுள்ள அமைப்பில் நடைபெறும் தாக்கங்களைத் தருக.
4. தரப்பட்ட அமைப்பில் திரவ நிலையில் பெறப்பட்ட இரு பதார்த்தங்களும் எவை?
5. மேலுள்ள அமைப்பில் உண்டாகிய கழிவுப்பொருள் எது?
6. ஈய ஒட்சைட்டில் இருந்து ஈயத்தை எவ்வாறு ஆய்வுகூடத்தில் பெறுவீர்? விளக்குக.
7. வீட்டுக்கு ஒளியூட்ட பெரும்பாலும் பயன்படும் மின்சாதனம் மின்குமிழ் ஆகும்.
   1) மின்குமிழின் இழையைச் செய்யப் பயன்படுத்தப்படும் உலோகத்தின் பெயர் யாது?
   2) இழையை செய்வதற்கு அவ்வுலோகத்தைப் பயன்படுத்துவதற்கு ஏதுவான இரு இயல்புகளைக் குறிப்பிடுக.
   3) மின்குமிழின் இழையிலிருந்து ஒளி வெளிவருகின்ற போதிலும் மின்னோட்டம் பாயும் கம்பியில் ஒளி வெளிவருவதில்லை. இதனை விளக்குக.

03. அங்கங்களின் தொடர்ச்சியான நிலவுகைக்காக தம்மையொத்த புதியவளமான எச்சங்களைத் தோற்றுவிக்கும் செயன்முறை இனப்பொருக்கம் ஆகும்.




1) மேலே தரப்பட்ட அமைப்பு தாவரங்களில் காணப்படுவதற்கான முக்கியத்துவத்தைப் பெயரிடுக.
2) மேலுள்ள அமைப்பில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பெயரிடுக.
3) மேலுள்ள அமைப்பில் கருக்கட்டலின் பின்நிகழும் மாற்றங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
4) பூக்களின் மகரந்தச் சேர்க்கையின் பின் கருக்கட்டல் நிகழுகின்றது.
   1. மகரந்தச் சேர்க்கை என்றால் என்ன?
   2. மகரந்தச் சேர்க்கை நடைபெற்றதில் இருந்து கருக்கட்டல் நிகழும்வரை நடைபெறும் மாற்றங்களைக் குறிப்பிடுக.
   3. ''பதர் வித்துக்கள்'' என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
   4. கனிகளும், வித்துக்களும் பரம்பலடையும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.
   5. வித்து முளைத்தலுக்கு அவசியமான அகக்காரணிகளைக் குறிப்பிடுக.
   6. விவசாய நடவடிக்கைகளில் வித்துக்கள் தேர்ந்தெடுப்பதில் விவசாயிகள் கடைப்பிடிக்கும் வழிமுறைகள் எவை?

04. ஒருவரின் திணிவு 50kg ஆகும். அவரின் இருகாற்பாதங்களின்தும் நிலத்துடன் தொடுகையுறும் பரப்பளவு $0.02m^2$ ஆகும். அவர் நீர்நிரம்பியதொட்டி ஒன்றில் 4m ஆழத்தில் சுழியோடியவாறு நீந்துகிறார்.

1) அவர் நிலத்தில் இருபாதங்களையும் வைத்துக்கொண்டு நிற்கும்போது ஏற்படுத்தும் அமுக்கம் எவ்வளவு?
2) அவரின் நிறையை நியூட்டனில் தருக.
3) அவர் நீரினுள் 4m ஆழத்தில் உள்ளபோது அவரால் உணரப்படும் திரவ அமுக்கம் யாது? (நீரின் அடர்த்தி-$1000kg^{3}$, $g=10ms^{-2}$)
4) அவர் கடல்நீரில் 4m ஆழத்தில் உள்ளபோது அவரால் உணரப்படும் திரவ அமுக்கம் யாது?
5) நீர் நிரம்பிய தொட்டியில் அவர் விழுந்து நீந்தும்போது வெளியேறிய நீரின் திணிவு 10kg எனின், நீரினால் அவர்மீது ஏற்படுத்தப்பட்ட மேலுதைப்பு யாது?
6) வினா (5) இல் நீர் பயன்படுத்திய விதி யாது?
7) பாயி ஒன்றினுள் பொருள் ஒன்றை இடும்போது ஏற்படுத்தப்படும் மேலுதைப்புக்கும் பாயியின் அடர்த்திக்கும் இடையிலான தொடர்பைக் கண்டறிவதற்கான பரிசோதனை ஒன்றைத் திட்டமிடுக.

### உயிரியல்

01. தரம் 11 மணவர் குழுவொன்றால் 48 மணிநேரம் இருட்டில் வைக்கப்பட்ட தாவரத்தின் இலைகள் இரண்டைப்பயன்படுத்தி அமைக்கப்பட்ட பரிசோதனையின் அமைப்பு கீழே உள்ள வரிப் படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1) இப்பரிசோதனையில் மாணவர்குழு சோதித்த எடுகோள் யாது?
2) இவ்வமைப்பை ஒழுங்குசெய்த சந்தர்ப்பம் தொடக்கம் முடிவு மேற்கொள்ளும்வரை செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகளை படிமுறையில் எழுதுக.
3) A,B ஆகியன இருபாகங்களிலும் சமமாக நிலவவேண்டிய காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக.
4) 1. பொலித்தீன் பையில் சோடியம் ஐதரொட்சைட்டு இடப்பட்டது ஏன்?
   2. மற்றைய பையினுள் நீர் இடப்பட்டது ஏன்?
5) இப்பரிசோதனையை நீர் மேற்கொள்வதாயின் இறுதியில் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் அவதானம் யாது?
6) இப்பரிசோதனையின்போது மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் [illegible]
7) பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட தாவரம் 48 மணிநேரம் இ[illegible] நோக்கம் யாது?

02. குருதித்தொகுதியில் குருதிக்கலன்களும், இதயமும் இடம்பெறுகின்றன. மனித இதயத்தின் குறுக்கு வெட்டுமுகம் தரப்பட்டுள்ளது.




1) இப்படத்தில் A,B,C,D,E,F,G,H எனும் பகுதிகளைப் பெயரிடுக.
2) A,C இற்கும், B,D இற்கும் இடையே காணப்படும் வால்புகளைப் பெயரிடுக.
3) D அறையின் சுவர் தடிப்புக்கூடியதாக காணப்படுவதற்கான காரணம் யாது?
4) A,B அறையினுள் காணப்படும் குருதியின் வேறுபாடு ஒன்றைக்குறிப்பிடுக.
5) G குருதிக்குழாய் மூலம் குருதி கொண்டுசெல்லப்படும் அங்கத்தினைக் குறிப்பிடுக.
6) நாடி, நாளம் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் 3 தருக.
7) மனிதனின் குருதிச்சுற்றோட்டத்தொகுதி மூடிய குருதிச்சுற்றோட்டத்தொகுதி ஆகும்.
   1. இங்கு மூடிய குருதிச்சுற்றோட்டத் தொகுதி என்றால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
   2. இரட்டைக்குருதிச் சுற்றோட்டம் என்றால் என்ன?
   3. குருதிக்குறுக்குப் பாய்ச்சல் என்றால் என்ன?
   4. குருதிக்குறுக்குப் பாய்ச்சலின்போது குருதி வழங்குபவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் 3 தருக.

### பௌதிகவியல்

03. ஒலி, ஒளி ஆகியன அலைவடிவில் கடத்தப்படுகின்றன. கீழே வரிப்படத்தில் அவ்வாறான ஒரு அலையிறக்கம் காட்டப்பட்டுள்ளன. இவ்வலை A இலிருந்து B இற்குச் செல்வதற்கு எடுத்த நேரம் 0.2 செக்கன் ஆகும்.




1) இங்கு a,b ஆகியற்றால் குறிப்பிடப்படுவன யாவை? 2) இவ்வலை்யின் மீடிறன் யாது?
3) ஒலி அலை பொறிமுறை அலையாகும். ஆனால், ஒளிஅலை மின்காந்த அலையாகும்.
   1. இவ்விரண்டு அலைகளுக்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.
   2. பொறிமுறை அலையை மேலும் நீள்பக்க அலை, குறுக்கலை என இருவகைப்படுத்தலாம். இவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் 2 தருக.
4) வளியில் ஒலி அலையின் வேகம் $330ms^{-1}$ ஆகும். மேலே காட்டப்பட்ட அலைஒலி அலையாயின்.
   1. b இன் பெறுமானத்தைக் காண்க.
   2. b இன் பெறுமானம் அதிகரிப்பின் ஒலியில் ஏற்படும் மாற்றம் யாது?
5) எல்லா ஒலி அலைகளும் மனித காதுகளுக்கு கேட்பதில்லை. அதற்கான காரணம் யாது?
6) வெள்ளொளியைக் கண்ணாடி அரியத்தின் ஊடாக அனுப்பித் திரையில் நிறமாலையைப் பெற்றுக்கொள்ளலாம்.
   1. நிறமாலையில் உள்ள நிறங்களை ஒழுங்காகத் தருக.
   2. இவற்றுள் உயர்மீடிறன் கொண்டதும் மிகக்குறைந்த மீடிறன் கொண்டதுமான நிறங்களைக் குறிப்பிடுக.
7) ''கானல் நீர்'' தோன்றுதல் ஒலி முறிவை விளக்கத்தக்க செயற்பாடு ஆகும்.
   1. ஒளி முறிவு என்றால் என்ன?
   2. ஒளி முறிவு விதியைக் குறிப்பிடுக.

04. பின்வரும் வரிப்படத்தின் உதவியுடன் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடைதருக.




1) முறையே 30Ω, 20Ω, 6Ω பெறுமானங்கள் கொண்ட $r_1$, $r_2$, $r_3$ ஆகிய தடையிகளின் சமவலுத்தடையைக் கணிக்குக.
2) $r_4$, $r_5$ எனும் தடைகளுக்கு 0.75mm விட்டமுடைய நிக்குரோம் கம்பி பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான 1m கம்பியின் தடை 2.5Ω ஆகும். $r_4$, $r_5$ ஆகிய தடைகளின் சமவலுத்தடை 20Ω ஆகும்.
   1. $r_4$ எனும் தடைக்கு பயன்படுத்தப்பட வேண்டிய நிக்குரோம் கம்பியின் தடை எவ்வளவு?
   2. $r_5$ எனும் தடைக்கு பயன்படுத்த வேண்டிய நிக்குரோம் கம்பியின் தடை எவ்வளவு?
3) இச்சுற்றின் மொத்த சமவலுத்தடை எவ்வளவாகும்?
4) S எனும் ஆளியை மூடும்போது அம்பியர்மானியின் வாசிப்பு எவ்வளவாகும்?
5) ஒரு மின்குமிழில் 240V, 60W எனக்குறிப்பிடப்பட்டிருந்தது.
   1. 240V என்பதன் கருத்து யாது?
   2. 60W என்பதனை விளக்குக.
   3. இவ்வகை 10 மின்குமிழ்கள் தொடர்ச்சியாக 10 மணித்தியாலங்கள் ஒளிருமாயின் ஏற்படும் செலவைக் கணிக்குக. (ஒரு அலகிற்கான செலவு-ரூ. 2.00 எனக்கொள்க.)
   4. 240V, 60W மின்குமிழொன்று வீட்டு மின்சுற்றில் இணைக்கப்படுமாயின் அதனூடாக பாயும் மின்னோட்டத்தைக் காண்க.

### இரசாயனவியல்

05. 1) ஆவர்த்தன அட்டவணை மூலகங்களைப் பாகுபடுத்தும் ஒரு முறையாகும். மூலகங்களின் தாக்குதிறனை தாக்கத்தொடரில் இருந்து அறிந்து கொள்ளலாம். பின்வரும் அட்டவணையை பயன்படுத்தி வினாக்களுக்கு விடைதருக.




A,B,C,D என்பன நியம குறியீடுகள் அல்ல

1. மூலகம் B இன் இலத்திரனியல் நிலையமைப்பை எழுதுக.
2. பங்கீட்டு வலுச்சேர்வைகளை மாத்திரம் ஆக்கக்கூடிய மூலகம் எது?
3. மூலகம் C வேறு மூலகங்களுடன் இலகுவில் தாக்கமடையாது. காரணம் தருக.
4. மூலகம் B யும் D யும் சேர்ந்து உருவாகும் இரசாயனச் சூத்திரத்தைத் தருக.
5. இம்மூலகங்களிற்கிடையே உருவாக்கப்பட்ட பிணைப்பு யாது?
6. மூலகம் B யின் பயன் ஒன்று தருக.

2) 1. தாக்கத்தொடரில் உள்ள மூலகங்கள் எம்மூன்று பதார்த்தங்களுடன் தொழிற்படும் வேகத்தின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.
   2. தாக்கத்தொடரின் முதல்மூன்று மூலகங்களும் அமிலங்களுடன் எவ்வாறு தாக்கமடைகின்றன. தாக்கத்திற்கான சமன்செய்த சமன்பாடுகளைத் தருக.
   3. தாழ்த்தல் முறையில் பிரித்தெடுக்கக்கூடிய மூலகங்கள் எவை?
   4. பின்வரும் மூலகங்கள் இயற்கையில் காணப்படும் தாதுக்களின் பெயர்களைத் தருக.
   5. கறுப்புநிற செப்பொட்சைட்டை கரிக்கட்டையில் வைத்து ஊதுருத்தி மூலம் தாழ்த்தும் போது கிடைக்கும் விளைவு யாது? அதன் நிறம் என்ன?

06. இரும்புக்கரண்டி ஒன்றின் மீது வெள்ளி முலாமிடப்படும் அமைப்பைக் படம் காட்டுகின்றது.




1) 1. இங்கு X என்ற திரவத்தின் பெயர் யாது?
   2. எத்தகைய திரவம் இங்கு பயன்படுத்தப் பட வேண்டும்?
2) 1. அஞ்சல் ஆளியின் பயன்பாடு யாது?
   2. இதில் அனோட்டு எது? கதோட்டு எது?
   3. அனோட்டு, கதோட்டில் நிகழும் தாக்கங்களைக் குறிப்பிடுக.
3) 1. உறுதியான முலாம் பூச்சைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இரண்டு தருக.
   2. இங்கு கதோட்டில் நிகழும் தாக்கம் யாது?
   3. பிளாஸ்ரிக் பொருள்கள் மீது முலாமிட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை?
4) 1. $CuSO_4$ கரைசலை காபன் மின்வாய்கள் கொண்டு மின்பகுதித்தால் தோன்றும் அவதானம் யாது?
   2. மின்னோட்டத்தினால் இரசாயன மாற்றம் நிகழ்கின்றது. இதன் அனுகூலம் யாது?
5) 1. மின்மோட்டர் ஒன்றிலே காணப்படும் முக்கிய பாகங்கள் யாது?
   2. பிளமிங்கின் இடக்கை விதியைத் தருக.
   3. 4Ω எனக்குறிப்பிடப்பட்டிருந்த இரண்டு மின்குமிழ்கள் ஒன்றுக்கொன்று சமாந்தரமாக 6V மின்முதலுடன் தொடுக்கப்பட்டுள்ளது. சுற்றினூடாக பாயும் மின்னோட்டம் எவ்வளவு?
   4. சுற்றினூடாகப் பாயும் மின்னோட்டத்தை 1.5A ஆகக் கட்டுப்படுத்த வேண்டுமெனின், எத்தகைய மாற்றத்தை சுற்றில் மேற்கொள்ள வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



சித்திரமேழி ஞானவைரவர் ஆலயத்தை அழகாக நிர்மாணித்துத் தந்த அராலியைச் சேர்ந்த குமாரசாமி நவரட்ணம் அவர்களின் திடீர் மறைவினால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய சித்திரமேழி ஞான வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை
சித்திரமேழி ஞானவைரவர்
(104708) ஆலயம், இளவாலை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
02 . 01 . 1965



இறப்பு
16 . 10 . 2009

## அமரர் சிறீபதிஅருள்தாஸ்

(உரிமையாளர் நியூசன் ஆபரண மாளிகை, நெல்லியடி, அருள்ஸ் ஆபரண மாளிகை, உடுப்பிட்டி)

திதி: சதுர்த்தசி (06.10.2010)

ஆருயிரெம்மை விட்டு
அகன்றுவோ ராண்டு இன்று
பாரினில் உறவுவாடப்
பரமனை யடைந்தாய் யன்று
நாளெலாம் உம்மை எண்ணி
நாமெலாம் துதித்து நிற்போம்
ஆள நீவருவாய் ஐயா!
அவனியில் நாங்கள் வாழ.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்வம் மில் லேன்,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

# வாணி விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி இந்து மன்றத்தின் வாணிவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்து மன்றத் தலைவர் எஸ்.கிருஸ்ணராஜ் தலைமையில் கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ள இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உப பதிவாளர் எஸ்.சிவநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் 'வித்தகர்' சஞ்சிகை வெளியீடும், ஆசிரியர், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(ந-7)

* * *

யாழ்ப்பாணம், ஒக். 16

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் வாணிவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சனசமூகத்தின் தலைவர் நா.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவிற்கு யாழ்.பெரியபுலம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபரும், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின்தலைவருமான சி.இராமலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ந)

* * *

யாழ்ப்பாணம், ஒக். 16

எழுவைதீவுமுருகவேல் வித்தியாலயத்தின் வாணி விழாவும், மு.ப. விழாவும் இன்று சனிக்கிழமைகாலை 10 மணிக்கு வித்தியாலயத்தின் சிவபாலன் மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலைமாணவத் தலைவன் க. தனுஷன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் கலந்து கொள்வார். (ந-325)


# விற்பனைக்கு

புதிய சொப்பிங் பாக் தயாரிக்கும் மெஷின் விற்பனைக்குண்டு.
தொடர்பு இல: 400, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6634, 077 873 6561.
(404835)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு

**Free English Workshop**

காலம்: 16.10.2010 சனி (இன்று)
பிரிவுகள் (நேரம்): 1-2, 3-4, 5-6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
அனுமதி இலவசம்
Keyboard, சான்றிதழ், Guide இலவசம்
**MyWay English**
182, Stanley Rd, Jaffna. Ph : 0773363456

# காணி, வீடு விற்பனைக்கு

செம்மணி வீதியில் யாழ்ப்பாண கல்வி வலயத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் 6 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

மற்றும் பாரதி ஒழுங்கையில் செம்மணி வீதியும் ஆடியபாதம் வீதியும் இணையும் சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் 18 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
தொ.பே.இல: 0771543471

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS (C/564561)
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567


# கண்ணீர் அஞ்சலி



சித்திரமேழி ஞானவைரவர் ஆலய முன்னாள் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான

**வைத்திலிங்கம் மயில்வாகனம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சித்திரமேழி ஞான வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை
சித்திரமேழி ஞானவைரவர் ஆலயம், இளவாலை.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## சிறிஸ்கந்தராசா மதுசா

மண்ணில் 02★ 07★1995
விண்ணில் 02★09★2010

குலவிளக்காய் ஒளி பரப்பி
குலமகளாய் எழில் பெருக்கி
அவனியிலே புலம்பி அழ
மதுசாவே! எங்கு சென்றாய்.
உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் நினைவில்
சிறி குடும்பத்தினர்.

கனகராயன் குளம்,
புதுக்குளம். (104706)

# ஆத்மீக பயணத்தில் பத்தாம் ஆண்டினை நினைவுகூர்வோம்



திருமதி

## தையல்நாகேஸ்வரி அரியநாயகம்

(தாதிய உத்தியோகத்தர்,
யாழ்.போதனா வைத்தியசாலை)

தோற்றம் 14.08.1946
மறைவு 16.10.2000

தாதியம் தன்னை ஏற்று தகுதியாய் பணிகள் செய்து
பாதியாய் கணவனோடு பாசத்தால் கலந்திருந்து
சோதியாய் பிள்ளைகட்கும் சுடரொளி பரப்பிவிட்டு
ஆதியாய் நின்ற எங்கள் அப்பனை அடைந்து விட்ட
மேதினி போற்றுமன்னை மேன்மைகொள்தையலாரை
வீதியால் சுமந்துசென்ற ஆண்டது பத்தாம் தன்னை
வேதியம் தன்னைக் கூட்டி வேள்விகள் பலவும் செய்து
ஓதியே சாந்திப்பேறு கிட்டிட நினைவுகூர்வோம்!

81/2, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
13.12.1967

இறப்பு:
08.10.2008

அமரர்

## தியாகராஜா சுரேந்திரன்

(ஆசிரியர், ஹைலண்ட்ஸ் கல்லூரி, ஹற்றன்)

திதி:நவமி 16.10.2010



எமது அன்புச் செல்வமே சுரேன்!
பொங்கும் துயருடன் போனதுவே ஈராண்டுகள்!
உமக்கு நிகர் நீரே என்று மார்பு தட்ட நின்றாயே!
உமது சிறப்பைக் கூற வார்த்தைகள் போதாது ஐயா!
உம்மை இழந்து உணர்வற்ற ஜடங்களாக
உலாவுகின்றோம் நாம் இங்கு
உமது ஆத்மா இறைவனடியில் சாந்திபெற வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி!

இல.28, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (104542)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் தீவிரவாதிகளிடம் சிக்கும் அபாயம்

## அமெரிக்க அமைப்பு எச்சரிக்கை

வாஷிங்டன், ஒக். 16

பாகிஸ்தானிடமுள்ள அணு ஆயுதங்கள் தீவிரவாதிகளிடம் சிக்கும் அபாயம் உள்ளது என்று அமெரிக்காவின் ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது.

அணு ஆயுதங்கள் பத்திரமாக உள்ளன எனப் பாகிஸ்தான் தொடர்ந்து உறுதிமொழி அளித்துவந்த போதிலும், தீவிரவாதிகளிடம் சிக்குவதற்கான ஆபத்து உள்ளது என்று அமெரிக்கா தொடர்ந்து எச்சரித்து வருகிறது.

இப்போது அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆய்வறிக்கை அளிக்கும் அமைப்பு (சிஎஸ்ஆர்) இந்த அறிக்கையை அளித்துள்ளது.

பாகிஸ்தானில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற நிலை காரணமாக அரசியல் தலைவர்கள் அளிக்கும் உறுதிமொழியின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக உள்ளது. பாகிஸ்தானில் செயல்படும் தீவிரவாதிகள் கையில் அணு ஆயுதங்கள் சிக்கும் அபாயம் உள்ளது.

தீவிரவாதிகளின் ஆதரவாளர்களிடம் அணுசக்தித் தொழில்நுட்பம் சென்றாலும் அதன் மூலம் தீவிரவாதிகளுக்கு அணு ஆயுதம் கிடைக்கும் அபாயம் உள்ளது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தம் 24 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையில் பாகிஸ்தானிடம் 60 அணு குண்டுகள் இருக்கின்றன எனத் தெரிகிறது. இதைவிடக் கூடுதல் எண்ணிக்கையில்தான் இருக்கக்கூடும் என்றும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# நேபாள குள்ளருக்கு கின்னஸில் இடம்

பொகாரா (நேபாளம்), ஒக். 16

உலகின் மிகக் குறைந்த உயரம் கொண்ட குள்ளமான மனிதராக நேபாளத்தைச் சேர்ந்த கஜேந்திர தாபா மகர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

18 வயதான இவரது உயரம் 25.8 அங்குலம் (65.5 செ.மீ). இவரது எடை 5.5 கிலோவாகும்.

இதுவரையில் உலகின் மிகக் குறைந்த உயரம் கொண்ட குள்ள மனிதராகக் கொலம்பியாவின் எட்வர்ட் நினோ ஹெர்னான்டஸ் இருந்தார்.

24 வயதாகும் நினோ, நேபாளத்தின் கஜேந்திர தாபா மகரை விட 2 அங்குலம் கூடுதல் உயரமானவர். அதாவது நினோவின் உயரம் 27.8 அங்குலமாகும்.

உலக சாதனை புத்தகமான கின்னஸில் கஜேந்திர தாபா இடம்பெற்றுள்ளார். இவரது உயரத்தைப் பரிசீலித்து கஜேந்திர தாபாவை குள்ளமான மனிதராக அது அறிவித்துள்ளது.

நேபாளத்திலுள்ள கிராமத்தில் பழ வியாபாரியின் மகனாகப் பிறந்த கஜேந்திர தாபாவின் கனவு, திருமணம் செய்து கொண்டு மனைவியுடன் உலகை வலம் வரவேண்டும் என்பதுதான்.

# பாக். பிரதமர், அமைச்சரை கொல்வதற்கு சதித் திட்டம்

## 7 தீவிரவாதிகள் பொலிஸாரால் கைது

லாகூர், ஒக். 16

பாகிஸ்தான் பிரதமர் கிலானி, வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி ஆகியோரைக் கொல்ல சதி செய்தனர் என 7 தீவிரவாதிகளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் தடை செய்யப்பட்ட தெஹ்ரி-இ-தலிபான் பாகிஸ்தான் அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

இது குறித்து பொலிஸ் உயரதிகாரிகள் குறிப்பிடுகையில், ''மூல்தான் நகருக்குப் பிரதமர் கிலானி, வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி ஆகியோர் வரும் போது அவர்களைக் கொலை செய்ய இந்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

பிரதமருக்கும் அமைச்சருக்கும் முல்தான் நகர் தான் சொந்த ஊர். இதனால் அவர்கள் அங்கு அடிக்கடி வருவது வழக்கம். இதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலையடுத்து பஞ்சாப் மாகாண பொலிஸார், அஹ்மத்பூர் கிராமத்தில் வியாழக்கிழமை சோதனை மேற்கொண்டனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகள் பிடிபட்டனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் அவர்கள் பெரிய அளவில் சதித்திட்டம் தீட்டியிருந்தமை தெரியவந்தது. பாகிஸ்தானில் நடைபெற்ற பல்வேறு குண்டு வெடிப்பு சம்பவங்களிலும், ஷியா பிரிவுத் தலைவர்கள் கொலைகளிலும் இந்தத் தீவிரவாதிகளுக்குத் தொடர்பு உண்டு.

கடந்த ஆண்டு மூல்தான் நகரில் ஐஎஸ்ஐ அலுவலகத்தில் குண்டு வைத்து 12 பேரைக் கொன்றதும் இந்தத் தீவிரவாதிகள்தான் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உலக அரங்கில்



சிலி நாட்டில், சுரங்கத்திலிருந்து மீட்கப்பட்டவர்களுடன் ஜனாதிபதி செபஸ்டியன் பினெரா, பத்திரிகையாளர்கள் மத்தியில் படப்பிடிப்புக்குப் 'போஸ்' கொடுக்கிறார்.

# ஆப்கான் குண்டுவெடிப்பில் 3 நேட்டோ சிப்பாய்கள் பலி!

காபூல், ஒக். 16

ஆப்கானிஸ்தான் மேற்குப் பகுதியில் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட குண்டுவெடிப்பில் அமெரிக்க கூட்டுப் படையைச் (நேட்டோ) சேர்ந்த 3 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர்.

இதே பகுதியில் புதன்கிழமை நடைபெற்ற குண்டுவெடிப்பில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் இது வரை 584 சிப்பாய்கள் பலியாகியுள்ளனர்.

2001இல் ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுத்த அமெரிக்க கூட்டுப்படை, 9 ஆண்டுகளாக அங்கு முகாமிட்டுள்ளது. சுமார் 1,52,000 சிப்பாய்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அடுத்த ஆண்டு இறுதியில் ஆப்கானிஸ்தானிலிருந்து நேட்டோ படையை விலக்கிக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

எனவே, தலிபான் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலைச் சமாளிக்க ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படையினருக்கு நேட்டோ சார்பில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

# சிலி சுரங்கத்திலிருந்து மீட்கப்பட்ட ஊழியர்களுக்கு பரிசுப்பொருள்கள்

சாண்டியாகோ, ஒக். 16

சிலியின் தங்கச் சுரங்கத்தில், கடந்த 10 வாரங்களாகச் சிக்கித் தவித்த 33 ஊழியர்கள் வெற்றிகரமாக மீட்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பரிசுப் பொருள்களும், பாராட்டுகளும் குவிந்து வருகின்றன.

சிலியின் அடகாமா பாலைவனத்திலுள்ள தங்கம், தாமிரம் ஆகிய சுரங்கத்தில், கடந்த ஓகஸ்ட் 5ஆம் திகதி நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், 700 மீற்றர் ஆழத்தில் வேலை பார்த்த 33 ஊழியர்கள் சிக்கிக் கொண்டனர்.

பல கோடி ரூபா செலவில் அதிநவீன இயந்திரம் கொண்டு வரப்பட்டு, சுரங்கம் துளையிடப்பட்டு, நவீன இயந்திரத்தின் கூண்டு வழியாக ஒவ்வொரு ஊழியர்கள் மேலே கொண்டு வரப்பட்டனர்.

உள்ளூர் தொழிலதிபர் ஒருவர் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் தலா ஐந்து இலட்ச ரூபா அளித்துள்ளார். பிரபல அப்பிள் நிறுவன தலைவர் ஸ்டீவ் ஜாப்ஸ் மீட்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சமீபத்தில் தயாரிக்கப்பட்ட 'ஐபாட்'களை வழங்கியுள்ளார்.

கிரீஸ் நாட்டு நிறுவனம் இந்தத் தொழிலாளர்களை சுற்றுலா தீவுக்கு அழைத்துச் செல்ல முன்வந்துள்ளது. ஐரோப்பிய தலைவர்கள் இந்தத் தொழிலாளர்களைத் தங்கள் நாட்டுக்கு சுற்றுலா வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

# தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம்: தென் தாய்லாந்தில் நால்வர் மரணம்!

யாலா, ஒக். 16

தெற்கு தாய்லாந்தில் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதில் 4 பேர் கொல்லப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெற்கு தாய்லாந்தின் ஒரு பகுதி 1909ஆம் ஆண்டு வரை ஒருங்கிணைந்த மலாய் சுல்தான் பிரதேசத்துடன் இருந்தது. அதன் பின்னர் பௌத்த மத நாடான தாய்லாந்துடன் இணைந்தது.

அப்போது முதல் அப்பகுதியில் முஸ்லிம்களுக்கும், பௌத்தர்களுக்கும் அடிக்கடி மோதல்கள் நடப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

முஸ்லிம்கள் அதிகம் உள்ள பகுதி இது. கடந்த 6 ஆண்டுகளாக பிரிவினைவாத கோரிக்கையை வலியுறுத்தி தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் வன்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் புதன்கிழமை மாலை பட்டாணி என்ற பகுதியில் வங்கி அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதன் பின்னர் முஸ்லிம் மதத் தலைவர் ஒருவர் மர்ம நபர்களால் சுடப்பட்டார். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

மேலும் இஸ்லாமிய தன்னார்வத் தொண்டு நிறுவன அமைப்பாளர்கள் இருவரும் புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக பட்டாணி பகுதியில் பௌத்தர் ஒருவரின் வீட்டின் மீது சிலர் துப்பாக்கியால் சுட்டனர். அதில் 12 வயது சிறுமி உட்பட 3 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல்கள் அனைத்துக்கும் தீவிரவாதிகள்தான் காரணம் எனப் பொலிஸார் கூறுகின்றனர். அப்பகுதியில் சுமார் 10 ஆயிரம் பொலிஸாரும், இராணுவத்தினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனால் பாதுகாப்புப் படையினரே இவ்வாறு செய்திருக்கலாம் என முஸ்லிம் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

# கையடக்கத் தொலைபேசி பாவனையால் உலக நாடுகளின் வறுமை குறைகிறது

## ஐ.நா.சபை தகவல்

நியூயோர்க், ஒக். 16

உலக நாடுகளில் செல்போன் பயன்படுத்துவோர் எண்ணிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் 500 கோடியை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது விரைவில் ஒவ்வொருவருடமும் ஒரு கையடக்கத் தொலைபேசி இருக்கும் அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. தற்போது வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் 100 பேருக்கு 58 பேரிடம் கையடக்கத் தொலைபேசி உள்ளது.

ஏழை நாடுகளில் 100 பேரில் 25 பேரிடம் கையடக்கத் தொலைபேசி இருக்கிறது. கையடக்கத் தொலைபேசி உபயோகத்தால் உலக நாடுகளில் வறுமை குறைந்து வருகிறது என்று ஐ.நா.சபை ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

கையடக்கத் தொலைபேசி வைத்திருப்பவர்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை கையடக்கத் தொலைபேசி மூலமே எளிதாகப் பெற்றுவிடுகின்றனர்.

இதனால் அவர்கள் குறிப்பிட்ட இடத்துக்குப் பணம் செலவு செய்து செல்லத் தேவையில்லை. வீண் அலைச்சல் குறைகிறது.

இதுபோன்ற காரணங்களால் மக்களுக்குப் பல வழிகளில் செலவுகள் குறைகின்றன. எனவே வறுமை நிலையும் குறைகிறது என்று ஐ.நா. அறிக்கை கூறுகிறது.

கையடக்கத் தொலைபேசி மூலம் ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என [illegible] பட்டுள்ளது.

# இந்திய ஆசிரியை நைஜீரியாவில் கடத்தல்

லாகோஸ், ஒக். 16

ஆபிரிக்க நாடான நைஜீரியாவிலுள்ள எகேத் என்ற இடத்தில் எண்ணெய்க் கிணறு நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் பாடசாலை ஒன்றையும் நடத்தி வருகிறது. இதன் தலைமை ஆசிரியராக இந்தியப் பெண் பணியாற்றி வந்தார்.

இந்த தலைமை ஆசிரியையை கடத்திச் சென்றனர். அவர் கதி என்னவென்று தெரியவில்லை. கடத்தியவர்கள் தீவிரவாதிகளா? அல்லது கும்பலா? என்று தெரியவில்லை.

நைஜீரியாவில் கும்பல் ஒன்று ஆள்களைக் கடத்திச் சென்று பணம் பறிப்பது வழக்கம். எனவே இவரையும் அவர்கள் தான் பணம் பறிப்பதற்காக கடத்திச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# சிறுவர் தின வலைப்பந்தாட்டம்; யாழ்.அணி இறுதியாட்டத்தில்

வலி.வடக்கு,ஒக்.16

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக வடக்கின் வசந்தம் நிகழ்சித் திட்டத்தின் கீழ் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி கல்வி வலயம் வட மாகாண மாவட்ட அணிகள் மற்றும் அநுராதபுரம் மாவட்ட அணி பங்கு பற்றிய வலைப்பந்தாட்டத்தின் அரையிறுதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி வெற்றி பெற்றது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த அரையிறுதிப் போட்டியில் அநுராதபுரம் மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை யாழ்.மாவட்ட அணியே தனித்து ஆதிக்கம் செலுத்தியது.

முதல் பாதி ஆட்டத்தில் 11:01 என்று யாழ்.மாவட்டம் முன்னணியில் நின்றவேளை போட்டி நிறுத்தப்பட்டது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி நிதானமாக விளையாடி எதிரணிக்கு புள்ளி பெறும் சந்தர்ப்பத்தை வழங்காது மேலும் 12 புள்ளிகளைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அணி 23:1 என்னும் புள்ளிகள் அடிப்படையில் அநுராதபுர மாவட்ட அணியை வெற்றி கொண்டது. (6-86)

# இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம்; மானிப்பாய் இந்துவை வென்றது கிண்ணியா ம.வி.

வலி.வடக்கு, ஒக்.16

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனம் இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தி வரும் பிரிவு II இற்கான உதைபந்தாட்டப் போட்டியின் ஆட்டமொன்றில் திருகோணமலை கிண்ணியா மகாவித்தியாலயம் வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இந்தப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் கிண்ணியா மகாவித்தியாலய அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி நிறைவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் ஒரு அணிக்கு மற்றைய அணியினர் சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்ட நிலையில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மிகவும் உற்சாகத்துடன் இரு அணிகளும் களம் புகுந்து மோதிக் கொண்டன. இந் நிலையில் கிண்ணியா மகாவித்தியாலயம் தனது முதலாவது கோலை பெற்று சில நிமிட இடைவெளியில் மீண்டும் ஒரு கோலைப் பெற்று நிலைப்படுத்திக் கொண்டு தொடர்ந்து விளையாடியது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டு கைகூடாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் கிண்ணியா மகாவித்தியாலயம் 2:0 என்ற கோல்கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்றது.

கடந்தாண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரி தரம் III பிரிவில் அகில இலங்கை சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து தரம் II பிரிவுக்கு உயர்த்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (6-86)



இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கான பளு தூக்கும் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியின் தலைவர் எஸ்.பிரசாத் 85 கிலோ எடைப்பிரிவில் 2ஆம் இடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். யாழ்.பல்கலைக்கழக அணியின் உப தலைவர் எஸ்.சிவசொரூபன் 69 கிலோ எடைப்பிரிவில் 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

இவர்களுடன் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் இணைப்பாளர் கே.கணேசநாதன், பயிற்றுவிப்பாளரும் விரிவுரையாளருமான ம.இளம்பிறையன் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: தமிழினியன்)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.16

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் வெள்ளி விழாவையொட்டி நடைபெற்று வரும் இரு பாலாருக்கும் இடையிலான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பச்சை அணி எதிர் திருக்குடும்ப கன்னியர் மட அணி (பிற்பகல் 3 மணி).
* பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மஞ்சள் அணி எதிர் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி (பிற்பகல் 4 மணி) (6-23).

* * *

யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 15 வயதுப் பிரிவினருக்கான் மாவட்ட மட்ட துடுப்பாட்ட போட்டியின் அரை இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. (6-23)

# சண்டிலிப்பாய் கோட்டத்தின் உதைபந்தாட்ட முடிவுகள்

வலி.வடக்கு,ஒக்.16

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முடிவுகள் சில வருமாறு:-

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் ஆனைக்கோட்டை றோமன்




கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மாதகல் சென்.ஜோசேப் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 3:1 என்ற கோல் கணக்கில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வென்றது. (த-86)

# தாச்சிச் சங்கத்தின் சுற்றுப் போட்டி; சாந்தை, காளியம்பாள் அணிகள் வெற்றி

வலி.வடக்கு,ஒக்.16

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கம் உடுவில் சிந்து விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டங்களில் சாந்தை விளையாட்டுக் கழக அணி, தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணிகள் வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கைதடி குமாரநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடிய கைதடி குமரநகர் விளையாட்டுக் கழக அணியை 18:3 பழங்கள் என்ற அடிப்படையில் வெற்றி கொண்டது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடிகாளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி எதிர்த்து விளையாடிய உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணியை 8:3 பழங்கள் என்ற அடிப்படையில் வெற்றி கொண்டது. (6-23)

# கரம் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ்.நகர் மைய றோட்டறக் கழகம் கரம் போட்டியை நடத்தவுள்ளது.

இதில் பங்கு கொள்ளவிரும்பும் போட்டியாளர்கள் 'இல 173, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ரமணன் ஸ்போட்ஸ் நிலையத்தில்' விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 8 மணி முதல் யாழ்.மத்திய கல்லூரியில் [illegible] (6-23)

# உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று

வலி.வடக்கு,ஒக்.16

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான 13, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளில் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**13 வயதுப் பிரிவு**

* வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் அராலி வள்ளியம்மை வித்தியாலயம்.
* வட்டுகோட்டை மத்திய கல்லூரி எதிர் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

* பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் எதிர் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.
* அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
* அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் அராலி வள்ளியம்மை வித்தியால்யம்.
* அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

* சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.
* வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம். (6-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் சிறுவன் செல்சி அணிக்காக ஒப்பந்தம்

ஜேர்மனியைச் சேர்ந்த 11 வயதுச் சிறுவனை செல்சி அணி ஒப்பந்தம் செய்துள்ளது. ஜேர்மனியைச் சேர்ந்த மைக்கல் கியாசி, இங்கிலாந்தின் 'லீக்-2' அணியான நார்தாம்ப்டன் டவுண் அணிக்காக விளையாடி வந்தார். கடந்த ஆண்டு செல்சியின் 10 வயதுக்குட்பட்ட அணியுடன், நார்தாம்படன் அணியின் 10 வயதுக்குட்பட்டோர் அணி மோதியது. இந்தப் போட்டியில் விளையாடிய மைக்கல் கியாசி, செல்சி பயிற்சியாளர்களைக் கவர்ந்தார். இதையடுத்து தற்போது அந்தச் சிறுவனுக்கு செல்சியில் சேர்வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

மைக்கல் கியாசியை மாதத்திற்கு 10ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு நார்தாம்ப்டன் டவுண் ஒப்பந்தம் செய்திருந்தது. செல்சியிலும் அதே அளவுக்குச் சம்பளம் வழங்கப்படும். இந்தச் சிறுவன் 7 வயதில் நார்தாம்ப்டன் டவுண் அணியில் இணைந்தார். கடந்த 3 ஆண்டுகளில் அவருக்காகச் செலவழித்த தொகை முழுவதையும் நார்தாம்ப்டன் டவுனுக்கு செல்சி வழங்கும். சிறுவனின் வருங்காலத்தையும், முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு நார்தாம்ப்டன் அணி, செல்சிக்கு விட்டுக் கொடுத்துள்ளது.

# கொமன்வெல்த் போட்டிகளை முடித்துவைத்தார் இளவரசர் எட்வர்ட்; அடுத்த போட்டியை நடத்தும் ஸ்கொட்லாந்திடம் கொடி ஒப்படைப்பு!

புதுடில்லி, ஒக். 16

டில்லியில் நடந்துவந்த கொமன்வெல்த் போட்டிகளை இங்கிலாந்து இளவரசர் எட்வர்ட் முறைப்படி முடித்துவைத்தார். அடுத்த போட்டியை நடத்தும் ஸ்கொட்லாந்திடம் கொடி ஒப்படைக்கப்பட்டது.

டில்லியில் கடந்த 3ஆம் திகதி தொடங்கிய கொமன்வெல்த் போட்டிகள் 12 நாள்கள் நடைபெற்று நேற்றுமுன்தினம் இரவுடன் நிறைவு பெற்றன. இதில் 71 நாடுகளைச் சேர்ந்த 6,081 வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

நேற்றுமுன்தினம் முடிந்த போட்டிகளின் முடிவில், ஆஸ்திரேலியா முதலிடத்தையும், இந்தியா இரண்டாவது இடத்தையும், இங்கிலாந்து மூன்றாவது இடத்தையும் பிடித்தன.



பின்னர், இரவு நடை பெற்ற நிறைவு விழா, தொடக்க விழாவைப் போலவே பிரமாண்டமாக இருந்தது. 'லேசர்' காட்சிகள் மற்றும் கண்கவர் கலை நிகழ்ச்சிகள், வாணவேடிக்கைகள் நடைபெற்றன. போட்டிகளில் பங்கேற்ற வீரர்களும் ஆட்டம் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போட்டிகளை இங்கிலாந்து இளவரசரும், கொமன்வெல்த் பெடரேஷன் புரவலருமான எட்வர்ட் முறைப்படி முடித்துவைத்தார். அப்போது அவர் டில்லியில் நடைபெற்ற 19ஆவது கொமன்வெல்த் போட்டிகள் நிறைவு பெற்றுள்ளன எனவும், 20ஆவது கொமன்வெல்த் போட்டிகள் கிளாஸ்கோவில் நடைபெறும் என்றும் அறிவித்தார்.

இந்திய துப்பாக்கி சுடும் வீரர் ககன் நரங் தேசியக் கொடியை ஏந்தி அணி வகுக்க, அவர் பின்னால் இந்திய வீரர்கள் அணி வகுத்து நிறைவு விழாவில் பங்கேற்றனர். போட்டியின் சின்னமான 'ஷெரா' ஓட்டோவில் மைதானத்தை வலம் வர ரசிகர்கள் கையசைத்து அதற்கு விடைகொடுத்தனர். கொமன்வெல்த் கொடி முறைப்படி இறக்கப்பட்டு, டில்லிப் பிரதிநிதி தேஜிந்தர் கன்னாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனை அவர் அடுத்த போட்டியை நடத்தும் கிளாஸ்கோ நகரின் பிரதிநிதியான ரோபர்ட் வின்டரிடம் ஒப்படைத்தார்.

# கிரிக்கெட்டில் ஏற்பட்ட தோல்வியால் ஆஸ்திரேலியர்கள் டில்லியில் குழப்பம்

புதுடில்லி, ஒக். 16

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தோல்வியடைந்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஆஸ்திரேலியர்கள் (வீரர்கள்-ரசிகர்கள்), புதுடில்லியில் குழப்பத்தில் ஈடுபட்டனர். கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்காக வந்திருந்த ஆஸ்திரேலிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கான கிராமத்தில் அவர்கள் குழப்பத்தை அரங்கேற்றினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொமன்வெல்த் போட்டிகளில் அதிகளவான பதக்கங்களைக் குவித்திருந்தபோதும், கிரிக்கெட்டில் கிடைத்த தோல்வியை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள், விளையாட்டுக் கிராமத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார சாதனங்களையும் மேசைகள், நாற்காலிகள் போன்றவற்றையும் போட்டு உடைத்தனர். இந்தியாவின் வெற்றிக்கு வழி வகுத்த சாதனை வீரரான சச்சின் டெண்டுல்கரைக் கண்டபடி திட்டித் தீர்த்தனர்.

கடந்த செவ்வாயன்று சச்சின் இரட்டைச் சதம் அடித்ததும், ஆரம்பமாகியதுதான் ஆஸ்திரேலியர்களின் இந்த வெறியாட்டம். அநாகரிகச் செயலில் ஈடுபட்டிருந்த ஆஸ்திரேலியர்களை டில்லியில் இருந்த இந்திய ஊழியர்கள் சமாதானப்படுத்த முயன்றனர். எனினும், முயற்சி கைகூடவில்லை. பின்னர், டில்லிப் பொலிஸாருக்கு இதுகுறித்து முறைப்பாடு கொடுக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதுகுறித்துப் பொலிஸார் கூறுகையில், "விளையாட்டுக் கிராமத்துக்குப் பொறுப்பான குழுவினரிடமிருந்து முறைப்பாடு கிடைக்காமையால்தான் வழக்குப் பதிவுசெய்யப்படவில்லை" - என்றனர்.

# ஐ.சி.சியின் நம்பகத்தன்மையை பாகிஸ்தான் பெறவேண்டும் இல்லையேல் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்க நேரும்

## கடும் தொனியில் எச்சரிக்கை

"இனிவரும் 30 நாள்களுக்குள் ஐ.சி.சியின் நம்பகத்தன்மையை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பெறவேண்டும். இல்லையெனில், அடுத்த கட்ட நடவடிக்கைகள் (தடை உட்பட) எடுக்கப்படும்."

- இவ்வாறு ஐ.சி.சி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) நிர்வாகக் கூட்டம் துபாயில் நடைபெற்றது. அதன் பின்னர் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, ஊழல் தடுப்பு நடவடிக்கைகளைக் கடுமையாகக் கையாளவேண்டும். அத்துடன், தமது நிர்வாகத்தைச் சீரமைப்பதும் அவசியம்.

அத்துடன், இவற்றை சரிசெய்யாவிட்டால் பல்வேறு விதமான தடைகளை எதிர்கொள்ளவேண்டிவரும்.

அதேவேளை, பாகிஸ்தான் கிரிக் கெட் சபை, ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

மேலும், ஐ.சி.சியால் பரிந்துரை செய்யப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளை, பாகிஸ்தான் மேற்கொள்ளவேண்டும். அடுத்த 30 நாள்களுக்குள் ஐ.சி.சியின் நம்பகத்தன்மையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பெறவேண்டும். இல்லையெனில், அடுத்தகட்ட நடவடிக்கைகள் (தடை உட்பட) எடுக்கப்படும்.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஐ.சி.சியின் இந்தப் பரிந்துரைகள் குறித்து கருத்துத் தெரிவித்த ஐ.சி.சியின் முன்னாள் தலைவர் இஷான் மானி,

"இஸாட் பட், தனது மோசமான நிர்வாகக் கோளாறுகளால் பாகிஸ்தானையே தலைகுனியச் செய்துள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த சில மாதங்களாகச் செய்துவரும் கோணங்கித்தனங்கள், இத்தகைய விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை நான் முன்னரே தெரிவித்திருந்தேன்." - என்றார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவென ஐ.சி.சியால் தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில், கிரிக்கெட் நாடுகள் பல சேர்க்கப்பட்டுள்ளன.

இது குறித்துக் கருத்து தெரிவித்த இஷான் மானி,

"பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை இனிமேலும் நம்பிப் பயன் இல்லை என்ற ஐ.சி.சியின் எண்ணத்தையே இது பிரதிபலிக்கிறது" - என்றார்.

இஷான் மானி இவ்வாறு கூற, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஏனைய அதிகாரிகளோ,

"ஐ.சி.சியின் அறிக்கையில் மிரட்டல் தொனி இருக்கிறது" எனக் கண்டித்துள்ளனர்.

# நடால் அதிர்ச்சித் தோல்வி

சங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரில் ஆஸ்திரிய வீரரான மெல்சரிடம், உலகின் முதல் நிலை வீரரான ரபேல் நடால் தோல்வியடைந்துள்ளார். நேற்றுமுன்தினம் நடந்த இந்த ஆட்டத்தின் முதல் செற்றை, மெல்சர் 6-1 என்ற கணக்கில் அதிரடியாகக் கைப்பற்றினார்.

இதனால், ஆவேசமடைந்த நடால் இரண்டாவது செற்றை 6-3 என்ற கணக்கில் கைப்பற்றினார். எனினும், மெல்சர் அதிரடியாக விளையாடி மூன்றாவது செற்றை 6-3 என்ற கணக்கில் வெற்றிபெற்றார். இதன்மூலம் ஆஸ்திரிய வீரரான மெல்சர், காலிறுதியில் யுவான் மொனாகோவைச் சந்திக்கவுள்ளார்.

முன்னதாக, ரோஜர் பெடரர், இத்தாலி வீரரான ஆன்டிரியாஸ் செப்பியை 6-3, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

# மேன்முறையீட்டு முறைக்கு சச்சின் எதிர்ப்பு

களநடுவர்கள் வழங்கும் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வீரர்கள், 3ஆம் நடுவரிடம் மேல் முறையீடு செய்யலாம் என்ற திட்டத்திற்கு இந்திய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்தவை வருமாறு:-

"எந்த ஒரு மாற்றமும் நூறு சதவீதம் துல்லியமாக இருக்கும் போதுதான் அதனை செயல்படுத்த வேண்டும். என்னைப் பொறுத்தவரை, மேன்முறையீட்டுத் தீர்ப்புகள் எப்போதுமே திருப்திகரமாக இருக்காது.

இதற்கு முன்பு பல தடவைகள் நாங்கள், நடுவரின் தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு முடிவுகள் குறித்துத் திருப்திகொள்ளவில்லை. இது என்னுடைய சொந்தக் கருத்தாகும். -என்றார் சச்சின்.



# லலித் மோடி விவகாரம்: உஷார் நிலையில் விமான நிலையங்கள்

புதுடில்லி, ஒக். 16

ஊழல் புகாரில் சிக்கியுள்ள லலித்மோடியின் கடவுச்சீட்டு முடக்கப்பட்டதையடுத்து இந்தியாவின் விமான நிலையங்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளன.

லலித் மோடியின் கடவுச்சீட்டை அமுலாக்கல்பிரிவு அதிகாரிகள் முடக்கியுள்ளனர். இதுகுறித்த தகவலை, இந்தியாவில் உள்ள அனைத்து விமான நிலையங்களுக்கும் அமுலாக்கல்பிரிவு அதிகாரிகள் அனுப்பியுள்ளனர்.

இதன் காரணமாக, 'லலித் மோடி நாட்டுக்குள் பிரவேசிக்கும்போது அவர் கைதுசெய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டத்தரிப்பு மூதாட்டி அநாதரவான நிலையில்

சாவகச்சேரி, அல்லாரை, தம்பு தோட்டப் பகுதியில் அநாதரவாக நின்ற மூதாட்டி ஒருவர் அப்பகுதிக் கிராம சேவையாளரால் மீட்கப்பட்டுச் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் வசம் இருந்த ''கிளினிக்'' புத்தகம் மூலம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த ரி.சிவபாக்கியம் (வயது 85) என இனங்காணப்பட்டுள்ளது.

அவரது உறவினர்களை வந்து அழைத்துச் செல்லுமாறு ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுள்ளது. (ஒ-ஐ-207)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 16 ★ 05 ★ 1935



இறப்பு 16 ★ 09 ★ 2010

கடந்த 16.09.2010 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் சுப்பிரமணியம் யோகம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.10.2010) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்,அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

142/20,கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(பூனாறிமடம் லேன்) (104736) குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவஞ்சலி

### அன்னப்பிள்ளை இராசேந்திரம்

தோற்றம் 25 * 07 * 1945



மறைவு 27 * 09 * 2009

*ஆண்டு ஒன்று சென்றதம்மா ஆறவில்லை உம் கவலை*
*ஈரைந்து மாதங்கள் சுமந்து பெற்றவளே*
*இரவுபகல் பாராமல் பாலூட்டி வளர்த்தவளே*
*காத்திருந்து கண்விழித்து காவல் பல செய்தோமே*
*காலனவன் பிடியிலிருந்து காக்க முடியவில்லையே உம்மை*
*பிள்ளைகள் வாழ்க்கைக்காக மெழுகாக உருகினாயே*
*நீ அணைந்து போனதனால் ஒளியிழந்து போனோமே அம்மா*
*நாள் பல நகர்ந்தாலும் எங்களுடன் வாழ்ந்த*
*பசுமையான நினைவுகள் எம்மை விட்டு விலகாதம்மா*
*விண்ணக வாழ்வுக்கு விரைந்திட்ட*

*இந்த நாளில் நினைவுகூர்ந்து உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.*

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

சங்கானை வீதி,
தென்மூலை,
அச்சுவேலி. (104739)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்



யோகக்கலாஜோதி

### வயிரவி சண்முகம்

(ஓய்வுபெற்ற ஆளணி உதவியாளர்,
பிரதேச செயலகம்,சண்டிலிப்பாய்,
யோகாசன பயிற்றுவிப்பாளர்)

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவி சண்முகம் அவர்கள் (15.10.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரவி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சோதிநாதன், கணேசநாதன் (கனடா), காலஞ்சென்றவர்களான நிர்மலா தேவி, ஜெகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, நந்தாகினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற இலட்சுமணரின் மைத்துனரும் சுதர்ஷன் (லண்டன்), லக்ஷனா (லண்டன்), நிரோஷன் (கனடா), விதுரசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.10.2010) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (104737)

தகவல்:
குடும்பத்தினர்.

## நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.16

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் நவராத்திரி விழா இன்று சனிக்கிழமை மாலை 6 மணியளவில் நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் சு.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வலி. மேற்குப் பிரதேசசபை செயலாளர் இ.புத்திசிகாமணி பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம், ஒக்.16

உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் 14 ஆவது கலை நிலா அரங்கும் வாணி விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் காமாட்சி அம்பாள் கல்யாண மண்டபத்தில் எஸ்.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை ஓய்வுபெற்ற கிராமசேவகரான அ.த.க.கிருஷ்ண ராஜா வழங்கவுள்ளார். பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-6)

* * *

மானிப்பாய், ஒக்.16

மானிப்பாய் சத்தியசாயி நிறுவனத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வாணிவிழா நிகழ்வுகள் நடைபெறும்.

அன்றையதினம் ஏடு தொடக்குதல், கீழைத்தேய - மேலைத்தேய பாட்டுக்கள், ஓகன், வயலின் போன்ற இசை வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

* * *

கோப்பாய், ஒக்.16

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் மானம்பூ உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

உற்சவத்தில் அம்பாள் கோப்பாய ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலுக்கு எழுந்தருளுவார். (ஒ-72)

* * *

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் திருநெறி தமிழ் மறைக்கழகமும் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் வாணிவிழா நிகழ்வுகள் இன்று காலை 8.15 மணிக்கு ஆலய மண்டபத்தில் ச.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-86)

* * *

கோப்பாய்,ஒக்.16

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை வாணி விழா விஜயதசமி நிகழ்வுகள் நாளை ஞாயிறு முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வின் சிறப்பு சொற் பொழிவை கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நிகழ்த்துவார்.மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ்.கந்தர் மடத்திலுள்ள ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் விஜயதசமி தினம் நாளை முற்பகல் 10 மணிக்கு சித்திரவித்தியாரம்பம் நடைபெறவுள்ளது. (ஒ-16)

* * *

நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் விஜயதசமி தினமான நாளை முற்பகல் 10 மணிக்கு ''ஏடு தொடங்கல்'' நிகழ்வு நடைபெறவுள்ளது. பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க விரும்புபவர்கள் முன்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா நாகராசா (வசந்தன்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் 3ஆம் வட்டாரம், முள்ளியவளையில் வசித்தவரும் லண்டனை வசிப்பிடமாகக் கொண்டவருமான சுப்பையா நாகராசா (வசந்தன்) கடந்த 13.10.2010 புதன்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பிரபாவதியின் அன்புக் கணவரும் பவஹர்சன், கர்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இந்திரா, கருணாகரன், கண்ணன் மற்றும் சுந்தரம், நடராசா, இராதா கிருஷ்ணன், தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயபாலன், ஜெயவதனா காலஞ்சென்ற நேமிநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் விஜிதா, கமலதாசனின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
சுந்தரம் - 0094776763901,
ஜெயபாலன் - 0094776447326,
திலீபன் - 00447891209077 (104737)

தகவல் :
குடும்பத்தினர்.

### முருகேசு இராசரத்தினம்

மூளாய் றோட்டைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தை, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராசரத்தினம் நேற்று (15.10.2010) வெள்ளிக்கிழமை மாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும் பாலரஞ்சன், சுலோசனா (ஆசிரியர், யா/வட்டு. மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கெங்காதரன், ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் தபீசன், தாரகி, தஷாகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
தொ.பே: 0213216063 (சி/571960)

தகவல் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

British Business School இன் பாலர்பாடசாலைகளில்
நாளை (17.10.2010) விஜயதசமி தினத்தில்
காலை 7.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை
ஏடு தொடக்கப்படும்.

மிகவிரைவில் கொக்குவிலில்......
கொக்குவில் மாணவர்கள் நல்லூரில்
ஏடுதொடக்கலாம்.

மிகக்குறைந்த அனுமதிக்கட்டணம்
(Admission Fees)
முதலாம் வருடத்திற்கு மட்டுமே

BBS இன் பாலர் பாடசாலை
நாளை முதல் சங்கானையில்..!
பிரதேச செயலகம் அருகில்,
நிகர வைரவர் கோவில் முன்பாக,
சங்கானை.

சர்வதேச பாடத்திட்டம்,
விசாலமான விளையாட்டுத்திடல்,
மேலைத்தேய கற்கைநெறிகளுடன் சம்மந்தப்பட்ட
கல்வி /விளையாட்டு உபகரணங்கள்.

வார இறுதிநாட்களில் பாடசாலைமாணவர்களுக்கும்,
பெரியவர்களுக்கும்ஆங்கில வகுப்புக்கள்.

சைவகுருமார்களாலும், கல்விமான்களாலும் எமது
நல்லூர், கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நீர்வேலி,
பருத்தித்துறை, சாவகச்சேரி வளாகங்களில் ஏடுதொடக்கப்படும்.

BRITISH BUSINESS SCHOOL
140, கோவில் வீதி, நல்லூர்.
Contact: 021 222 5796, 0773627055, 0776646357.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடத்தனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட வேளை அப் பகுதி மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து யாழ். மாவட்டத்தின் மணல் அகழ்வுக்குப் பொறுப்பாகவுள்ள மகேஸ்வரி நிதிய பிரதிநிதிகள் அங்கு வரவழைக்கப் பட்டனர்.

அவர்கள் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து புவிசரிதவியல் கனிய வள திணைக்களப் பிரதிநிதிகளின் ஆலோசனைக்கமைய அப்பகுதியைப் பாதிக்காத வகையில் சில காலத்துக்கு மட்டும் மணல் அகழ இணக்கம் காணப்பட்டது.

இதற்கான கால அவகாசம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில் மீண்டும் நேற்று சுமார் 60 டிராக்டர்கள் அங்கு வந்து சேர்ந்தன. அவற்றில் மணல் ஏற்றும் வேலைகள் ஆரம்பமாகின. அதையடுத்து அப் பகுதி மக்கள் சுமார் 200 இற்கும் மேற்பட்டோர் திரண்டு வந்து மணல் அகழ்வதை தடுத்து நிறுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து முற்பகல் 10 மணிக்கு பின்னர் அவ் விடத்துக்கு வந்த இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் மகேஸ்வரி நிதியப் பிரதிநிதிகள் அம்மக்களுடன் பேச்சு வார்த் தையில் ஈடுபட்டனர்.

அந்தப் பேச்சுவார்த்தையின் போது-

குடத்தனை கிழக்குப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கு அண்மையாக பல ஆண்டுகளாக மணல் அகழப்பட்டதால் இக்கிராமம் வெள்ளத்தில் மூழ்கி அழிய வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்றும் -

அதுமட்டுமன்றி ஊர்மக்களின் மயானமும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் எடுத்துக் கூறினர்.

இந்த ஊர் மக்களின் நன்மை கருதி இங்கு மணல் ஏற்றும் நடவடிக்கையை முற்றாக நிறுத்தி எமது கிராமத்தை அழிவிலிருந்து காப்பாற்றும் வகையில் வேறு இடத்தில் அதாவது கரையோரத்துக்கும் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் மணல் அள்ளலாம் என்றும் ஒரு சிலர் ஆலோசனை தெரிவித்தனர்.

மேற்படி கலந்துரையாடலை அடுத்து மேலும் இரு நாள்களுக்கு மட்டும் மணல் அகழ இணக்கம் காணப்பட்டதாகவும் எனினும் இந்த அகழ்வு வேலை களுக்கு குடத் தனைப் பகுதி தொழிலாளர்க ளையோ அவர்களது டிராக்டர்களையோ சேவையில் ஈடுபட அனுமதிப்பதில்லை என்றும் மக்களால் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

இதனால் நேற்றையதினம் மணல் அகழ்வுப் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.

### 59 பேர் கையொப்பமிட்ட மகஜர் கையளிப்பு

இதேவேளை, குடத்தனை கிழக்கில் மணல் ஏற்றுவதை நிறுத்திவிட வேண்டும் என்று சுற்றயல் கிராம மக்கள் சுமார் 59 பேர் கையொப்பமிட்டு மருதங் கேணி உதவி அரசாங்க அதிபர், பொலிஸ் அத்தியட்சகர், இராணுவ அதிகாரி, கிராம சேவகர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

யாழ். குடாநாட்டுக்குத் தேவையான மணல் காலம் காலமாக எமது கிராமங்களிலேயே அகழப்பட்டு வருகிறது. இதனால் எமது கிராமம் அழி வடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதைக் கருத்திற்கொண்டு இப்பகுதியின் சிறு மணல் திட்டுக்களில் மணல் அகழ்வு பணிகள் மேற்கொள்வதை கிராம மக்களாகிய நாம் தடுத்து நிறுத்த முற்பட்ட போது அங்கு வந்த இராணுவம், பொலிஸார் மற்றும் மகேஸ்வரி நிதியத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரண்டு நாள்களுக்கு மட்டுமே மணல் அகழ இணக்கம் காணப் பட்டுள்ளது.

இதனை மீறி மீண்டும் மணல் அள்ள முற்படும் பட்சத்தில் நாம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்து வோம் என்று தங்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ். நகரில் மீண்டும்
சிறந்த முறையில் லயின் போறிங், கிறாங்சாப், சிலிண்டர் போறிங் செய்து கொடுக்கப்படும்.

**எந்திரம்ஸ்**

(பெருமாள் கோயிலடி)
395, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
021222 4540


# கேள்வி அறிவித்தல் திருத்தம்

## சாட்டிச் சிற்றுண்டிச்சாலைக்கான நாள்குத்தகை கேள்வி அறிவித்தல் 2010

உதயன் நாளிதழில் 15.10.2010 இல்
பிரசுரிக்கப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தலில்
'சாட்டி சிற்றுண்டிச்சாலை 20.10.2010 ஆம் திகதி
முதல் 31.10.2010 திகதி வரைக்கும் நாள் ஒன்றுக்கு
ரூ 150/- வீதம் நாள் குத்தகைக்கு
வழங்கப்படும் என்ற வசனத்தில்
'நாள் ஒன்றுக்கு ரூ 150/- வீதம்' என்பது
நீக்கப்படுகின்றது என்பதனை
அறியத்தருகின்றேன்.

கெஜரெத்தினம் தவராசா
செயலாளர்
வேலணை பிரதேச சபை

வேலணை
14.10.2010

# வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுவரும் மிதிவெடி அகற்றல் தொடர்பாக விளக்கம் அளிக்கும் சந்திப்பு நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் 'ஹலோ ட்ரஸ்ட்', 'டெனிஸ்' மற்றும் இலங்கை இராணுவத் தின் மிதிவெடி அகற்றும் பிரிவு என மூன்று நிறுவனங்கள் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களுக்கு நிதி வழங்கும் நிறுவனங்கள் தமது உதவிகளைக் கடந்த காலங்களை விட இவ்வாண்டு அரை வாசியாகக் குறைத்துவிட்டன.

இதனால் மிதிவெடி அகற்றும் நவீன கருவிகளைக் கொள்வனவு செய்வதிலும், புதிய பணியாளர்களை இணைத்துக் கொள்வதிலும், ஏற்கனவே உருவாக்கப்பட்ட மிதிவெடி அகற்றும் அணியினரை தக்கவைப்பதிலும் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றோம்.

வடக்கில் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்துவதற்காகவும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க உதவுவதற்காகவும் கண்ணிவெடி அகற்றும் பணிபை பெரும் அபாய நிலையில் முன்னெடுத்து வருகின்றோம்.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்களை அரசாங்கத்திடம் கையளிக்கும் போது, அப்பிரதேசத்தில் மீளக்குடியமரும் மக்களுக்கு கண்ணிவெடிப் பாதுகாப்புத் தொடர்பான கல்வி அறிவை வழுங்குகின்றோம். மீளக்குடியமரும் பிரதேசங்களில் அபாயகரமான பொருள்களைக் கண்டால் தகவல் தருமாறு அவர்களிடம் தெரிவிக்கிறோம். அவர்கள் தகவல் தந்தால் அந்தப் பொருள்களை அகற்ற ஏற்பாடு செய்வோம்.

அண்மைக்காலத்தில் மிதிவெடியில் சிக்கி எவரும் மரணிக்கவில்லை. காயமடையவும் இல்லை. எம்மால் கையளிக்கப்பட்ட பிரதேசத்தில் காணப்படும் வெடி பொருள்களைத் தேவையற்ற விதத்தில் கையாண்டதால் தான் பாதிப்புகள் எற்பட்டன.மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு அநாதரவாகக் கிடக்கும் வெடி பொருள்கள் குறித்து தகவல் தர வேண்டும். முழுமையாக வெடிபொருள்களை அகற்ற முடியாது.அவ்வாறு அகற்றுவதாக இருந்தால் பல வருடங்கள் செல்லும். இதன் காரணமாக தொழில்நுட்பமற்ற முறையில் கண்ணி அகற்றும் பணியை முன்னெடுக்கிறோம் -என்றார். (ஒ-ஐ-9)


## வீடு வாடகைக்கு

யாழ்.நகர மத்தியில் வேம்படி வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு: 0789484194**

## விற்பனைக்கு

Boxer மோட்டார் சைக்கிள், கொங்கிறீட் கல்லறுக்கும் மெஷின், ஜூகி தையல் மெஷின், லூவர்ஸ் அச்சு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776017257


## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (நவோதயா பாடசாலை)

### தரம் 06க்கான மாணவர் அனுமதி - 2011

- ★ 1000 பாடசாலைகளின் அபிவிருத்திப் பாதையில் இணைக்கப்படவுள்ள பாடசாலை
- ★ சகல வள நிலைகளிலும் உயர்நிலைத் தூண்டல் கொண்ட பாடசாலை
- ★ ஆண்கள், பெண்களுக்கான வேறெங்குமில்லாத பிரமாண்டமான விடுதி வாய்ப்பு
- ★ கற்றல் மேம்பாட்டிலும் விளையாட்டுத்துறைச் சாதனையிலும் நம்பிக்கையுடன் உறுதியுரை வழங்கும் நிர்வாகக் கட்டமைப்பு
- ★ ஆங்கில மொழிமூலக் கற்றலுக்கான விரிவான ஏற்பாடுகள்
- ★ புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான விசேட சலுகைகளும் அவர் நலம் நோக்கிய நகர்வுகளும்

### மறுமலர்ச்சிக்குள் மகிழ்வுடன் பிரவேசிக்க ஆழமாகச் சிந்தியுங்கள், நம்பிக்கையுடன் காலடி வையுங்கள்

- ★ விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
- ★ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.
- ★ விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் 05.11.2010 ஆகும்.

இத்தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வே.ஞானகாந்தன்,அதிபர்.

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் கந்தையா

(ஓவசியர், சமாதான நீதவான், நெடுவிலி சித்திவிநாயகர் ஆலய தர்ம கர்த்தா)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் கந்தையா (கந்தையா ஓவசியர்) நேற்று (15.10.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும் இராமலிங்கம்-தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகனும் கமலத்தின் அன்புக் கணவரும் சத்தியேந்திரா (நெடுந்தீவு பிரதேச சபை), புவனேந்திரா, யோகேந்திரா (ஆய்வுகூட உதவியாளர், நெடுந்தீவு ம.வி), பவானி, காலஞ்சென்ற இரவீந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலரத்தினம் (இணைப்பாளர், கெயர் சர்வதேச நிறுவனம்), மங்கையர்க்கரசி, சந்திரகலா (ஆசிரியர், நெடு.சைவப்பிரகாச வித்தி.), கலா (ஆசிரியர், ஸ்ரீகாந்தா வித்தி., நெடுந்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சேதுபதி நாகம்மா, ஐயாத்துரை பொன்னம்மாவினதும் கனகரத்தினம் பூரணம், வேலாயுதபிள்ளை நாகரத்தினம் (லண்டன்), பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை, கார்த்திகேசு நாகசுந்தரி, கோபாலசிங்கம் சிந்தாமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மகாலிங்கசிவம் மற்றும் குமாரசாமி, குலசேகரம்பிள்ளை, பசுபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் நிருண், நிர்யுன், நிரோஜீன், நிருபா, நிருஷா, நிருஷன், நிதர்ஷா, மதுஷன், கிந்துஷன், நிரோஜன், கிருஷாளினி, கிருயாழினி, சாகித்தியன், துஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நெடுந்தீவு மேற்கு இந்து மயானத்தில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுந்தீவு மேற்கு.

தகவல் :
குடும்பத்தினர்.

## திருமதி செல்வரட்ணம் திலகவதி



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சோடாக் கொம்பனி கிழக்கு ஒழுங்கை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் திலகவதி நேற்று (15.10.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம், மற்றும் செல்வமணியின் அன்புமகளும் செல்வரட்னத்தின் அன்பு மனைவியும் கவிதாஸ், மோகனதாஸ் தீபனா, கலைச்சனா (U.K.), பகிதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும் தவராசா, தியாகராசா, ஜெயராசா, சுரேஸ்குமார், ரமேஷ்குமார், பிரபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.10.2010) சனிக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோடாக் கொம்பனி,
கிழக்கு ஒழுங்கை, மல்லாகம்.
T.P. 0777110111
0773479150

தகவல் :
தம்பி பிரபா

# மரண அறிவித்தல்

## இராசரத்தினம் இராஜேஸ்வரி



உடுவில் தெற்கு, பாலாவோடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் இராஜேஸ்வரி நேற்று (15.10.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மகளும் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் சற்குணசிங்கம், ஜெயபாலசிங்கம், யோகேஸ்வரி, சிவபாலசிங்கம், மகராஜசிங்கம், சிவகலாதேவி, ஜெயராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஞ்சனேஸ்வரி (சுவிஸ்), ரமணி (சுவிஸ்), ரதினி (கனடா), ரஜீதரன் (கனடா), துளசிதாஸ் (ஐங்கரன் பான்சி), ரவீந்திரன் (லண்டன்), ரமேஜினி (கனடா), ரஜீந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகேஸ்வரன் (சுவிஸ்), நகுலேஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (கனடா), நிருஷா (கனடா), ஜெனித்தா, லக்சிகா (லண்டன்), குகராஜன் (கனடா), சிவகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
0774677936, 0775925385

(ஒ/571964))

தகவல் :
குடும்பத்தினர்.

## வாணி விழாவும் பரிசளிப்பு வைபவமும்

திகதி: 17.10.2010 ஞாயிற்றுக்கிழமை
இடம்: விக்னா கல்வி நிறுவனம்
நேரம்: பி.பகல் 1 மணி
தலைவர்: திரு.மு.ஜெயந்திக்குமார்
(அதிபர்-விக்னா கல்வி நிறுவனம்)
பிரதம விருந்தினர்:
கலாநிதி திரு.கீந்தையா அருந்தவராஜா.
யாழ்.பல்கலைக்கழகம், வரலாற்றுத்துறை.

நிகழ்ச்சி நிரல்
★ மங்கள விளக்கேற்றல் ★ இறைவணக்கம்- மாணவிகள் ★ தலைவர் உரை
★ சிறப்புரை-விஞ்ஞான ஆசிரியர் திரு. என்.தேவா ★கௌரவிப்பு
★ பிரதம விருந்தினர் உரை ★ கலை நிகழ்ச்சிகள் ★ நன்றியுரை

கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாணி விழாக் குழுவினர்.

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடிப் படகில் அமெ. செல்லமுயன்ற 2 இலங்கையர் உட்பட 31 பேர் கைது!

கொழும்பு,ஒக்.16

மீன்பிடிப் படகொன்றில் அமெரிக்காவைச் சென்றடைய முயன்ற இரு இலங்கையர்கள் உட்பட 31 பேர் கடந்த திங்கட்கிழமை அந் நாட்டின் கரையோரக் காவற் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இணையதளமொன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த மீன்பிடிப்படகு தென் புளோரிடா மாநிலத்தைச் சென்றடையவிருந்தபோது பொயின்டன் பீச் என்ற இடத்தில் கடலோர காவற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது. அதிலிருந்தோர் கைது செய்யப்பட்டனர்.

அந்த மீன்பிடிப்படகில் இருந் தவர்களும் அவர்களை ஏற்றிவந்த தாகக் கூறப்படும் கணவன் - மனைவியும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இவர்கள் இதற்கு முன்னரும் ஆள்கடத்தலில் ஈடுபட்டிருந்த னர் எனவும் -

ஒவ்வொரு பயணியிடமிருந் தும் தலா ஐயாயிரம் அமெரிக்க டொலர்கள் இவர்களால் அற விடப்பட்டது எனவும் தெரிவிக் கப்படுகிறது.

(சி)

## சர்வதேச..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவின் முன்பு வந்து சாட்சியம் வழங்க விடுக்கப்பட்டிருந்த அழைப்பை மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச நெருக்கடிகள் குழு, சர்வதேச மன்னிப்புச் சபை ஆகிய மனித உரிமை அமைப்புகள் நேற்று முன்தினம் நிராகரித்திருந்தன.

யுத்தம் குறித்து பக்கச்சார்பின்றி விசாரணை செய்ய இந்தக் குழுவுக்கு அதிகாரமோ அருகதையோ இல்லை என்று இந்தக் குழுக்கள் விமர்சித்திருந்தன.

(ஒ-சி)

## மார்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் இந்தச் சந்திப் பின்போது பாராட்டினார்.

வடக்கு, கிழக்கில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியப் பிரதமரிடம் விளக்கினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜூன் மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பாகவும் இரு தலைவர்களும் கவனம் செலுத்தினர்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் நெருக்கமுறச்செய்வது குறித்தும் இணக்கம் காணப்பட்டது.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இந்தியாவுக்கு வருகை தந்ததையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைவதாக இந்தி யப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள் ளார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விசேட விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பில் இந்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி உள்விவகார அமைச்சர் பா. சிதம்பரம், வெளிவிவகார அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா, வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதியின் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான இணைப்புச் செயலாளர் சஜித் வாஸ் குணவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச் சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க ஆகியோர் ஜனாதி பதி ராஜபக்ஷவுடன் கலந்து கொண்டனர்.

(அ-சி)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி மஹிந்த

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை 7 மணியளவில் இலங்கை திரும்பினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானத்தில் ஜனாதிபதி வந்தடைந்தார் எனக் கூறப்படுகிறது.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட அழைப்பில் நேற்றுமுன்தினம் டில்லிக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

# திருமலையில் வாகன விபத்து ஏழு படைச் சிப்பாய்கள் காயம்

திருகோணமலை கந்தளாய் எல்லைப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 7 படைச் சிப்பாய்கள் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பயணம் செய்த வாகனம், பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது காயமடைந்த படை சிப்பாய்கள் கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரி.இளவரசருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவு விழா நடைபெற்றது. இதில் இலங்கை ஜனாதிபதி, பிரிட்டிஷ் இளவரசர் எட்வேர்டு சார்ள்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத் தொடரில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினரான சோபி மக்டக்ளஸ், போர்க் குற்றத்தில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் மஹிந்த ராஜபக்ஷ, பிரிட்டிஷ் அரசு குடும்பத்தினரின் பக்கத்தில் அமர்வதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனால் பிரிட்டிஷ் வெளியுறவுக் கொள்கை எங்கே சென்று கொண்டிருக் கின்றது என்பது தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.மேலும் இதுதொடர்பான விவாதம் நடத்த அனுமதி வழங்குமாறும் சபாநாயகரிடமும் அவர் கோரிக்கை விடுத்தார். இதனால் சபையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

(சி)


தரம் 6 முதல் O/L. வரையான வகுப்புக்களுக்கு
யாழ். நகரின் NO 1 கல்வி நிறுவனம்

**எடிசன் அக்கடமி**
சண்டிலிப்பாய் (கிளை)

தரம் 4,5 மாணவர்களுக்கான 2011 புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்.

காலம்: 17.10.2010 ஞாயிறு மாலை 3.30

ஆசிரியர்: திரு. க.கலாமோகன்
(B.A. Dip. in Teach)

* மாணவர்களுக்கு மாதம் இரு பரீட்சைகள் நடைபெறும்.
* கையேடு, அட்டைப்படம், விசேட பரீட்சை வினாக்கள் என்பன வழங்கப்படும்.

*அனுமதிகளைப் பெற முந்துங்கள்.*

நிர்வாகி.

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ் நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ்.
பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு
கோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் தனி வீடு,
நன்னீர் தனிக் கிணறு மற்றும் இதர வளங்களுடன்
விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0783251872

4வது வருட பூர்த்தியை முன்னிட்டு
UNI கணனி நிறுவனம் தற்போது சர்வதேச
வலைப்பின்னலில் இணைக்கப்பட்டுள்ளது......

இன்று முதல் எமது UNI கணனி நிறுவனம்
சர்வதேச வலைப்பின்னலில்...
4th www.uniictcampus.com 4th
என்னும் முகவரியில் பார்வையிட
முடியும் என்பதை எமது மாணவர்கள்
மற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

இதன் மூலம் எமது நிறுவனத்தின் சர்வதேச தரம் மற்றும் அரச அங்கிகாரம்
என்பவற்றை நீங்கள் இணையம் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

UNI - ICT CAMPUS
No :- 83, Palaly Road,
Kantharmadam, Jaffna

UNI - ICT Education Trainers
Jaffna Road, Manipay.
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)

**விஜயதசமி அன்று**

பாடசாலை மாணவர்களுக்கும்
ஏனையவர்களுக்குமான பயிற்சி
நெறிகள் ஆரம்பம் 10.00 a.m



Kids Programming (Year1-10)
Microsoft Office, Hardware
DTP, Internet E-mail,
Web Designing

இப்பிரிவில் இணையும் மாணவர்களுக்கு
விசேட கட்டணச்சலுகை வழங்கப்படும்

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction,
Jaffna.

**New Medi Care Hospital**

யாழ். பிரபல கண் சத்திரசிகிச்சை நிபுணர்
சாவகச்சேரி நியு மெடி கெயர்
மருத்துவமனையில் பிரதி
திங்கட்கிழமைகளில் காலை 8.00-
12.00 மணிவரை நோயாளர்களை
பார்வையிடுவார். கண் நோய்
தொடர்பான வைத்திய ஆலோசனைகளையும்,சிகிச்சைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.

No.32, Kachchai Road, Chavakachcheri.
T.P.: 0213734505 - 021 4920949

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A/L - Day Class கணக்கீடு
திரு. A.P. பகீரதன் - B.B.A. (F.M. Spl)

* வார நாள்களில் வகுப்புக்கள் (Mon, Tue, Thur, Fri : 10-12)
* மாலை நேர Paper Class (Mon, Wed : 4 - 5)
* 10 தொடர் மாதிரிப் பரீட்சைகளும் அவற்றுக்கான கருத்தரங்குகளும்.
* பாடம் மாறிக்கற்போர் வெளிமாவட்ட மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்.,
★ இலகுவான கற்பித்தல், தனிப்பட்ட கவனம்.

ஆரம்பம் : 18.10.2010 (Mon) 10 Am
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
நடைபெற இருக்கும்

* S.L.A.S.(மட்டுப்படுத்தப்பட்டது)
* திட்டமிடல் உதவியாளர்

பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் ஒவ்வொரு
ஞாயிறும் 9.30-2.00 மணி வரை

நிதிப்பிரமாணங்கள் (F.R.):-S.நாகராசா
தாபன ஒழுங்குகள் (A.R.):V.சாந்தசீலன்
விடய ஆய்வு :- V.நந்தீஸ்வரன்

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே) (வி/571955)

**MOON STAR INSTITUTE**

நடன இசை வாத்திய வகுப்புகள் ஆரம்பம்
17.10.2010 ஞாயிறு காலை 9.30
பரதம், மிருதங்கம், ஓகன், வயலின், சங்கீதம் பயில
விரும்புவோர் நேரில் வருகை தரவும்.
- 0773484837 -
Moon Star Institute.
*30, கம்பஸ் லேன்,*
*திருநெல்வேலி.* (வி/571944)

**தீபாவளி வாழ்த்து மடல்கள்-2010 -**

இலங்கையின் முன்னணி வெளியீட்டாளர்களான
சீலம் கிறிற்றிங்ஸ் & றோயல் கிறிற்றிங்ஸ்

* போஸ்காட் சினிமா + சுவாமி - (சிறிது) 50 டிசைன்
* போஸ்காட் சினிமா - (பெரிது) - 25 டிசைன்
* 8×5 அளவு - சினிமா + சுவாமி + பூக்கள் -100 டிசைன்
* 11×5 அளவு - சினிமா + சுவாமி -100 டிசைன்
* கட்டிங் காட் - சினிமா

வியாபாரிகளுக்குத் தரமான விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**அன்னை புத்தகசாலை**

யாழ்ப்பாணம் 2229881 (வி/571959) சாவகச்சேரி 0212270003

**லண்டனில் உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு.**

No Need IELTS

Bank Sponsorship
ஒழுங்குசெய்துதரப்படும்.



West London College,
Ethames Graduate School,
East London College,
Cambridge Ruskin International College போன்ற
பிரபலமான UKBA Highly Trusted கல்லூரிகளில்
உயர்கல்வி கற்க ஓர் அரியசந்தர்ப்பம்.
சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
January, February Intake இற்கு விண்ணப்பிக்க
விரும்புவோர் உடனடியாக எம்முடன்
தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து
விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

விசாவிற்கு 100 % உத்தரவாதம்.

கடந்த வாரத்திலும் எமது மாணவர்கள்
பலர் விசாக்களைப் பெற்றனர் என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.
அனைத்துச் சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதை
உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

SM Consultant services
148, கோவில் வீதி, (புனிசெல் முன்பாக) யாழ்ப்பாணம்.
Mobile: 0774528818, Tel: 0215673818, Fax: 0212223818.
E-mail: mg1404_2009@yahoo.com

விஜயதசமியை முன்னிட்டு பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு
விசேட கட்டணக்கழிவு

**Spoken English with Grammar**

Duration 1 Month Rs.2000.00

உரையாடல் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள்
நடைபெறும் & Full time special

25-10-2010
Batch-3 09.00am-10.30am & 11.00am - 12.30pm
Batch-4 02.00pm-03.30pm & 04.00pm-05.30pm

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road,
Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org